Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් மார்ச்.09–15,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 195

# தயார் நிலையில் புலிகள்

# நெருங்கும் தேர்தலும் போர்க்களக் காட்சியும்



# முரசம்

## ஜனாதிபதியின் நினைவூட்டல்

**அன்புள்ள உங்களுக்கு**
**வணக்கம்.**

"பிரபாகரன்கள்
எதிர்காலத்தில் தோன்றாமலிருக்க
வேண்டுமானால்-
இனப்பிரச்சனைக்கு
அரசியல்தீர்வு காணவேண்டும்!"
என்று கூறியிருக்கிறார் ஜனாதிபதி!

தென்னிலங்கையில்
திருவாளர் பொதுஜனத்திற்கு
அரசியல்தீர்வின்
அவசியத்தை உணர்த்துவதற்கு
பிரபாகரன் பெயரைத்தான்
சொல்லியாக வேண்டியுள்ளது!

தந்தை செல்வாக்களும்
அமிர்தலிங்கங்களும்
தோன்றாதிருக்கவேண்டுமானால்
இனப்பிரச்சனையை
தீர்த்தாகவேண்டும் என்று
எவருமே பேசியதில்லை!

யாரையும் நோகடிக்காமல்
மிக மெல்லிய குரலில்
தமிழ் பேசும் மக்கள் தரப்பு
நியாயத்தை எடுத்துச் சொன்னவர்
மூதறிஞர் தந்தை செல்வா!

ஆயுதப்போராட்ட ஆர்வத்தை
ஏற்படுத்தும் வகையில்
கூட்டணித் தலைவர்கள் பலர்
மேடைகளில் முழங்கியதுண்டு.
இப்போது அதையெல்லாம்
மறந்துவிட்டு
தீவிரவாதத்தை தீண்டாதோர்
என்று தம்மை அழைப்பதுமுண்டு!

ஆனால்- தந்தை செல்வா
உணர்ச்சி வேகத்தில்
மேடைகளில் முழங்கியவரல்ல;
ஆயுதம் ஏந்தத் தூண்டியவருமல்ல!

குண்டாந்தடியடி பட்டு
செல்வாவின் தொண்டர்கள்
குருதி சிந்திய போதெல்லாம்
இனவாதிகள் குதூகலித்தனர்!
'இந்த அடி போதுமா?
இன்னும் கொஞ்சம் வேண்டுமா?'
என்று கேட்காத குறையாக
கேலி செய்து கொக்கரித்தனர்!

தந்தை செல்வாவின்
அறவழிப் போராட்டத்துக்கு
கிடைத்த மரியாதை அதுதான்!

தந்தை செல்வாக்கள்
தொடர்ந்து தோன்றினாலும்
தமக்குப் பாதகமில்லை
என்பதுதான் தென்னிலங்கை
அரசியல் தலைவர்களின் அபிப்பிராயம்!

அதனால்தான்- செல்வாவை
ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை;
அறவழிப் போராட்டத்தை
நெருப்பாக நினைக்கவுமில்லை.
அதனால்தான்- தந்தை செல்வாக்கள்
தோன்றாதிருக்க வேண்டுமானால்
என்ன செய்யவேண்டும்?
என்ற சிந்தனை எழவில்லை!

ஆயுதப் போராட்டம்
ஆரம்பித்த பின்னர்தான்
இனப்பிரச்சனையின் தீவிரம்
தீவெங்கும் தெரியத் தொடங்கியது!

இலங்கை- இந்திய ஒப்பந்தம்
முதல்-இன்று
அரசியல்தீர்வு யோசனைவரை
ஆயுதப் போராட்ட நெருக்கடியின்
காரணமான விளைவுகள்தான்!

அரசியல்தீர்வு யோசனைகளை
முன்வைத்ததை நியாயப்படுத்த,
பிரபாகரன்களின் தோற்றம்பற்றியே
ஜனாதிபதியும் நினைவூட்டவேண்டியுள்ளது!

பிரபாகரனும்- அவர் இயக்கமும்
ஆயுதங்களை கைவிட்டிருந்தாலோ
அல்லது- போரில்
முறியடிக்கப்பட்டிருந்தாலோ
அரசியல் தீர்வின் அவசியத்தை
நியாயப்படுத்தக்கூட
முடியாமல் போயிருக்குமோ
என்ற சந்தேகம் எழாமலில்லை!

புலிகளுடன் பேசாமல்
பிரச்சனையைத் தீர்க்கலாம்,
என்கிறது அரசாங்கம்.
ஆனால்- பிரச்சனையின் தீவிரத்தை
உணர்த்தக்கூட
பிரபாகரன் பெயரைத்தான்
ஜனாதிபதி சொல்லவேண்டியுள்ளது!

ஜனாதிபதியே
விரும்பி முன்வந்தாலும்
புலிகள் இல்லாமல்
பிரச்சனையைத் தீர்க்கமுடியாது!
ஏனெனில் இனவாத சக்திகள்
தீர்வுகாண்பதற்கு அனுமதிக்க மாட்டார்கள்!

தமிழ் பேசும் மக்கள் தரப்பில்
பலமான சக்தி ஒன்று
இருப்பதாகக் காண்பித்தால்தான்
இனவாதிகளின் வாயை மூட
ஜனாதிபதிக்கும் வாய்ப்பாகவிருக்கும்!

எனவே- யாரை யார்
வெல்வது என்ற
முடிவில்லாப்போரை நிறுத்தி,
மூன்றாம் தரப்பு முன்னிலையில்
மனம் திறந்த பேச்சை ஆரம்பிப்பதே
யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட
அடி எடுத்துவைப்பாக இருக்கும்!

❑ ❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்**

# ஆன்மீகம்


## தடைகளை நீக்கிப் போடுகிறவர்

தடைகள் நீங்கிய வாழ்வு வாழ வேண்டுமானால் கர்த்தரை முன்னாக வைத்துக்கொள்ள வேண்டும். கர்த்தர் நமக்கு முன்பாய்ச் செல்லும்போது அவர் நம்முடைய வாழ்க்கையிலே உள்ள எல்லாத் தடைகளையும் நீக்குகிற தேவனாயிருக்கிறார். அநேக நேரங்களிலே நம்முடைய சுயத்தைத், சுயநீதியை முன்னாக வைக்கிறபடியினாலே தடைகள் நம்முடைய வாழ்க்கையிலே தோன்றுகின்றன.

நம்முடைய பலத்தை, பணத்தை நம்முடைய எல்லாவற்றையும் முன்னாக வைக்கிறபடியினாலே தடைகள் பெரிதாக நம்முடைய வாழ்க்கையில் காணப்படுகின்றன. ஆனால் இந்த அருமையான வேளையிலே கர்த்தராகிய இயேசுவை நம்முடைய வாழ்க்கையிலே முன்னணியிலே வைக்க வேண்டும்.

அவர் நமக்கு முன்பாகச் செல்வதற்கு நம்முடைய வாழ்க்கையை ஒப்புக் கொடுக்க வேண்டும். தாவீது ராஜா இவ்விதமான அனுபவத்தை உடையவராக இருந்தார். (சங் 16:8ல்) "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை" என்று சொல்வதைப் பார்க்கிறோம். கர்த்தரை முன்பாக வைத்து தடைகள் நீங்கின வாழ்வை நாம் சுதந்தரித்துக் கொள்வோம்.

தி.பெ.தேவபாலன், மட்டக்களப்பு.



## மறுமை நாளில் நான்கு கேள்விகள்

இன்று எம்மில் பலர் செல்வச் செழிப்பின் காரணமாக மனம் போன போக்கில் வாழ்கின்றனர். இவர்கள் நாளை மறுமையில் நான்கு கேள்விகளுக்குப் பதிலளிக்காதவரை இறைவனிடத்தில் ஈடேற்றம் பெறமுடியாது.

ஒன்று- தன் வாழ்நாளைக் கழித்த விதம்? இன்னொன்று- இவ்வுடல் எத்தகைய நற்காரியங்களில் ஈடுபடுத்தப்பட்டது? மற்றொன்று- தான் கற்ற கல்வி பிறருக்கு பிரயோசனம் அளித்ததா? வேறொன்று- தன் செல்வச் செழிப்புக்கு காரணம் என்ன? அவை எவ்வாறு இவ்வுலகில் செலவு செய்யப்பட்டது?

இவற்றின் இறுதிக் கேள்விக்கு இதயத்தை விரிவாக்கிக் கொடுங்கள். தனவந்தர்களே! உங்கள் கைகளை கொடைக் கரங்களாக்குங்கள். அல்குர் ஆனும் அதனைத்தான் வலியுறுத்துகிறது. அல்லாஹ்வும் இதனைத்தான் விரும்புகிறான்.

எவர் உலோபத்தனத்திலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்கின்றாரோ அத்தகையோர்தாம் வெற்றி பெற்றோராவர்.

**அல்குர் ஆன்** (59:9)

எம்.சி.கலீல், கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல.192

## பரிசுக்குரிய கவிதை



### தலைவிதியோ?

காய் கனி தான் எமக்குணவு;
கானகத்தில் வாழும் வரை
நோய் நொடிக்கோ பஞ்சமில்லை;
நோய் தீர்க்க மருந்துமில்லை;
வாய் கிழிய கூச்சலிட்டு
வாதமிடப்பலருண்டு;
ஓயாத போரை
ஒழிக்க மட்டும் எவருமில்லை!!

சி.மு.சுந்தரேசன், அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

### யார்?

சிறுதீவை போர் கடிக்க,
பெற்றாரை ஷெல் பறிக்க,
இடம் பெயர்ந்த இளம் கனி!
வளர்த்தெடுக்க யார் இனி?

தளபதி- ஜோன்ஸ் வீதி, நுவரெலியா.

### வெகுதூரம்

வாய்க்கெட்டிய செங்கனியால்
உன் பசி கலைகிறது!
கைக் கெட்டா வெண் புறாவால்
எம் மனம் அழுகிறது!

துந்தவை ஸன்பர்- கிண்ணியா-06.

### விரக்தியின் விளிம்பினில்...!

பாழும் யுத்தமதால்
பல உயிர் மடியுது!
பட்டினிச் சாவினில்
பிஞ்சுகள் கருகுது!
விரக்தியின் விளிம்பினில்
விதியினை நோவதா?
வளரும் மொட்டுக்கள்
உணவின்றி மடிவதா?

தெ.ரஞ்ஜனா, இறம்பைக்குளம், வவுனியா.

### அவசரம்

கொலைவெறி தாண்டவமாட,
கொடும்பசியும் தலையெடுக்க,
கிடைத்ததை உண்ணவும்
கிடைக்காது நேரமிங்கு.
அடுத்தது எங்கேயென்று
அவதியாய் ஓடும் வேளை,
அவசரமாய் உணவுண்ணும்,
அகதித்தேச ஜீவனொன்று!

பூ.இதயரெத்தினம்- ஆரையம்பதி-03.

### நிம்மதி

எம் மண்ணில் நாமுறங்க
வீடில்லை, பாயில்லை!
நிம்மதியாய் நாம் வாழ
உணவில்லை, பொருளில்லை;
கண்டெடுத்த கனியினை
சுவைபடவே சுவைத்திடவும்
மனதில் நிறைவில்லை!

ஷைலஜா ஜேசுதாஸன்- இறம்பைக்குளம், வவுனியா.

### ஏக்கம்

கண்ணில் பசியொளி,
கையில் மாங்கனி,
கண்கெட்டார் தருவாரோ
கனிவுடன் சோறுண்ணும் நாளை..?

செல்வி இராசன் தயாளினி- மருதான வீதி, ஹெந்தல, வத்தளை.

### எப்போ நிம்மதி?

பல நாள் பட்டினிக்கு
ஒரு நாள் பொரி உருண்டை
பல வருடத்துன்பத்திற்கு
எவ்வருடம் நிம்மதியோ?

செல்வி சுபாசினி- சைவப்பிரகாச ம.கல்லூரி, வவுனியா.

### இதுதான் தீனியா?

ஆதிவாசி போல் தோன்றும்
அகதியே!
இது
இடைத்தீனியா?-இல்லை
இதுதான் தீனியா?

சன் தங்கராஜா- பெரியகல்லாறு-01.

# கவிதைப் போட்டி இல.195



**கவனியுங்கள்!**

என்னத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 15.03.1997

**முகவரி:**


கவிதைப் போட்டி இல.195
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

### .மீட்புப் போர்!

படைக்கலம் பகடையாட-பயந்து
அடைக்கலமாய் வனம் புகுந்து-அங்கே
பசியால் பறக்கும் உயிரைப்
பற்றியிழுத்து நிறுத்திவிட-கிடைத்த
பழுக்காத காயை இவள்
பதம் பார்க்கும் வேகம் என்னே!

பழ.சச்சிதானந்தன்- 'ஜொய்ஸ்லீன்', செங்கலடி.

# வாசக(ர்) சாலை



அன்பின் முரசுக்கு!

அரசியல் தொடரில், இந்தியப் படையினர் யாழில் நடத்திய வெறித்தனம் பலருக்குத் தெரியாது. விறைப்புடனும் நேர்த்தியாகவும் தரும் அற்புதன் கிழக்கில் நடந்த சம்பவங்களையும் தக்க சமயத்தில் தவறாமல் தர வேண்டும்! முரசின் நேர்த்தியான, துணிகர சேவைக்கும் நன்றிகள் பல.

கே. ரவிச்சந்திரன், இலுப்படிச்சேனை, செங்கலடி.

'அல்பிரட் முதல் காமினி வரை'யிலான அரசியல் தொடர் தரும் தகவல்கள் வியப்பூட்டுகின்றன. இந்தியர் நியாயமாக நடந்து கொள்வார்கள் என எதிர்பார்த்தவர்கள் அவர்களின் துப்பாக்கி வேட்டுக்குப் பலியான தகவல்கள் எம்மை கண்கலங்க வைக்கின்றன. இந்திய அமைதிப்படை காலத்தில் நடைபெற்ற அநியாயங்களை மறைக்காமல் வெளிப்படுத்தும் முரசுக்கு பாராட்டு.

சுபாஷினி கமலப்பா, மட்டக்களப்பு.

எனது அன்பின் முரசே!

நீ தாங்கிவரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். அதில் பாப்பாமுரசு, பூலான்தேவி, அனிதா இளம் மனைவி என்பன எனது மனதை கவர்ந்துள்ளன. காதில பூ கந்தாமி 'யார்?' அவரை எமக்கு அறிவிப்பாயாக!

மு.க. பர்வின் ஜஹான், கமு/ஸம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை-05.

'காதிலை பூ கந்தசாமி'யாரின் கற்பனை நயம் நாளுக்கு நாள் மெருகேறி வருகின்றது. சபாஷ்!! 'அதிரடி அய்யாத்துரையார்' உண்மையில் பாராட்டுக்குரியவர். தொடரட்டும் முரசின் பணி! துலங்கட்டும் எட்டுத்திக்கும்.


செல்வன் கே. வின்செண்ட், மட்/ சத்துருக்கொண்டான்.

அன்பின் முரசே! உனது முகப்பு அழகு.....
'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டின் கணிப்பும் அழகு.....
இராஜதந்திரி அலசும் விதம் அழகு....
சினி விசிட்டும் அழகு தேன் கிண்ணம் அழகு....
இளம் மனைவி அனிதாவும் அழகு....
ரசிகன் தரும் இலக்கிய நயம் அழகு....
காதிலை 'பூ' கந்தசாமிக்கு அழகு....
மொத்தத்தில் தினமுரசு அழகு....
உனது பணி வளர வாழ்த்துக்கள்!
தொடர்ட்டும் உமது ப(ா)ணி.

த. தியாகராஜன், சைத்தாமா கென், ஜப்பான்.

கவிதை, கதை, காதல், விளையாட்டு, அரசியல் இப்படி எல்லா அம்சங்களும் உன்னிடம் நிறைவாக உள்ளன. அனைத்தும் இனிமை. இலக்கிய நயம் என்னைக் கவர்ந்தது. 'பூலான் தேவி' தொடர் மிக விறுவிறுப்பு.

செல்வி அருள்தாஸ் கிளேரா, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.





பூலான்தேவி வரலாறு-பூலானின் உணர்வுகளை அப்படியே தத்ரூபமாக எழுதிவரும் ரசிகன், ஒவ்வொரு அத்தியாயத்தையும் உயிருள்ளதாக எழுதிவருவது பாராட்டுக்குரியது.

முரசம் பகுதியில் வெளியான ஆசிரியர் கருத்து முரசுக்கே மகுடமாக அமைந்திருக்கிறது.

தொடரட்டும் பணி.

மகேஸ்வரி ராமதாஸ், வத்தளை.

'ஒப்பரேஷன் எலக்ஷன் றூட்' என்று முரசு சூட்டிய பெயர் பொருத்தமோ பொருத்தம்! 'வன்னியில் போர் நடக்கும், தேர்தலுக்கான களமாக அது இருக்கும்' என்று முரசு சொன்னது முந்தி. அதுபோலவே நடந்தது பிந்தி. சபாஷ் முரசே!

இ. அரியரட்ணம், மெல்போர்ண், அவுஸ்திரேலியா.

## "அதுதான் இரத்தத்தில் ஊறிய விடயம்"

யார் மறைந்தாலும் உடனடியாக அனுதாபச் செய்தி வெளியிடுவது; ஆஹா ஓஹோ என்று புகழ்வது! இருக்கும் வரை செருப்பால் அடித்துவிட்டு செத்த பின்னர் குடைபிடிப்பது என்பவைதான் நம் அரசியல்வாதிகளின் இரத்தத்தில் ஊறிய விடயங்கள். முரசு அதற்குக்கொடுக்க ஆரம்பித்துள்ள சாட்டையடி யாவது சம்பந்தப்பட்டவர்களை வெட்கப்படச் செய்யுமா?

எம். பூபாலசிங்கம், மொரட்டுவ.

நாலந்த எல்லாவல, கொலையின் பின்னரான நிகழ்வுகளை 'முரசு' நடுநிலையோடு எடுத்துச் சொல்லியிருந்தது. வன்முறைக்கு வன்முறை என்ற மனோபாவம் அரசியலில் தலையெடுப்பது அபாய அறிகுறி. எதற்கெடுத்தாலும் 'கடந்த 17 வருட' கதை சொல்லியே ஆளும் கட்சி சமாளிக்க நினைப்பது சரியல்ல.

வே. சுரேன், இரத்தினபுரி.

என் இனிய முரசே!

உன்னுடைய உலகெங்கிலுமுள்ள பலகோடி வாசகர்களில் நானும் ஒருவன் என்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். இருந்தாலும் உன்னுடன் நான் தொடர்புகொள்வது இதுதான் முதல் தடவை. நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் தனிச்சிறப்பே. அதிலும் இராஜதந்திரியாரின் அரசியல் அலசல் அருமை! அடுத்து, இந்தியப் படை பிற மாவட்டங்களிலும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி வெளிப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.எம். மர்சூக், ஜஹ்றா ஆசுப்பத்திரி, குவைத்.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* அருணாசலம் லதா, செங்கலடி.
* எஸ். அன்னலெட்சுமி, மன்னம்பிட்டி
* சிவலிங்கம் சுகந்தி, செட்டிப்பாளையம்.
* கோ.நி. தேவி, அப்புத்தளை.
* கே. சுஜிதரன், ஆரையம்பதி-02.
* செல்வி கந்தசாமி ராசாத்தி, திருகோணமலை.
* அ. அச்சுதன், மூதூர்.
* ஏ. அரசரெத்தினம், சேனையூர்-06.
* மணி. ரஞ்ஜன், வாழைச்சேனை.
* மீனா சுப்பிரமணியம், உறுகலை.
* ஏ.சி.எம். பாஹிமா, பலாங்கொடை.
* எஸ்.ஏ.எம். ரோசான், மாத்தளை.
* கே. கம்ஸா, மன்னம்பிட்டி.
* கே. ஜாலினி, குருமண்வெளி.
* சசிகலா நடேசபவானந்தன், திருமலை.
* ஆ. ஜெகதீஸ்வரன், புசல்லாவ.
* எம். இந்துமதி, மட்டக்களப்பு.
* பி. எஸ். ஜெயசீலன், கொழும்பு-10.
* எம்.எம். நௌபர், கிண்ணியா-02.
* நேசன் குமார், ஹட்டன்.
* க. தர்ஷன், பெரிய நீலாவணை-01.
* எம். தயாசேகர், ஜெர்மன்.
* சி. சுசிந்தமாலா, களுவாஞ்சிக்குடி.
* எம். பாலா, கொழும்பு-08.
* என்.ரீ. அமீனுதீன், அக்கரைப்பற்று-06.
* எம்.ஏ.எம். முஸ்தபா, மருதமுனை-03.
* எம். நாதன், புவக்பிட்டிய.
* பி. சரவணன், பதுளை.
* கா. சத்தியமூர்த்தி, வவுனியா.
* ஏ. ஏபிரகாம், புத்தளம்.

# புலிகளின் பாரிஸ் பிரதிநிதி வன்னியில்?

## மேற்கு நாட்டு இரகசியச் செய்தியுடன் வருகை!

புலிகள் இயக்கத்தின் சர்வதேச பேச்சாளரும், ஃபிரான்ஸ் பிரதிநிதியுமான லோரன்ஸ் திலகர் தற்போது வன்னியில் இருப்பதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன. சர்வதேச மத்தியஸ்தம் சம்பந்தமான முக்கியமான விடயங்கள் தொடர்பாக பிரபாகரனுடன் நேரடியாகப் பேசுவதற்காகவே திலகர் ஃபிரான்ஸிலிருந்து வன்னி சென்றுள்ளார் என்று அத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

### மத்தியஸ்தப் பேச்சு

லோரன்ஸ் திலகர் சமீபகாலமாக வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்து பேச்சு நடத்துவதில் தீவிரமாக இருந்தார்.

சர்வதேச அளவில் புலிகள் இயக்கத்தின் மீதான அனுதாபத்தை ஏற்படுத்தும் பணியில் லோரன்ஸ் திலகரிடம் முக்கிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசுக்கும்- புலிகளுக்கும் இடையில் பேச்சு நடக்க வேண்டுமானால் அது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முன்பாகவே நடக்கவேண்டும் என்று வெளிநாடுகளின் இராஜதந்திரிகளிடம் திலகரால் கூறப்பட்டது.

மேற்குலக நாடுகள் சில மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாக குறிப்பிட்ட நாடுகளின் இராஜதந்திரிகளால் திலகரிடம் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு மத்தியஸ்தம் செய்வதாக இருந்தால் அரசும்- புலிகளும் பரஸ்பரம் தமது நிலைகளில் இருந்து எதையெல்லாம் விட்டுக் கொடுக்கத் தயாரர்க உள்ளன என்பதை அறிய தாம் ஆவலாயுள்ளதாகவும், அதன்பின்னரே மத்தியஸ்தம் பற்றி முடிவு செய்யலாம் என்றும் சில இராஜதந்திரிகள் கூறியுள்ளார்களாம்.

பிரபாகரனின் ஒப்புதல் இல்லாமல் விட்டுக்கொடுக்கக்கூடிய விடயங்கள் தொடர்பாக திலகரால் பதில் சொல்லமுடியவில்லை.

அதனால் வெளிநாட்டு மத்தியஸ்தம் தொடர்பாகவும், வேறு சில முக்கியமானதும், இரகசியமானதுமான வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பாகவும் பிரபாகரனுடன் நேரடியாகக் கலந்துரையாடவே திலகர் வன்னிக்குச் செல்ல முடிவு செய்தாராம்.

### இரகசிய உதவி

விடுதலைப் புலிகள் சில விட்டுக் கொடுப்புக்களுக்கு இணங்கினால் மத்தியஸ்தம் செய்யத் தயார். இலங்கை அரசும் நியாயமாக நடந்துகொண்டு ஒத்துழைக்காமல் போனால் புலிகளுக்கு இரகசியமாக உதவத் தயார் என்று ஒரு மேற்குலக நாடு சார்பாக உத்தரவாதம் கொடுக்கப்பட்டுள்ளதாக புலிகளின் வெளிநாட்டு கிளைகளால் பேசப்படுகிறது.

இவ்வாறான விவகாரங்களின் பின்னணியில்தான் திலகரின் வன்னி விஜயம் முக்கியத்தும் பெற்றுள்ளது என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

லோரன்ஸ் திலகர் எவ்வழியாக வன்னி சென்றார்? என்பதற்கும் அந்த வட்டாரங்கள் பதில் சொல்லுகின்றன.

புலிகளின் வர்த்தகக் கப்பல் ஒன்று மூலமாகச் சென்ற திலகர், இந்தியாவை அண்டிய கடற்பகுதியில் வைத்து புலிகளின் அதிவேக விசைப்படகில் ஏறிக்கொண்டார். அங்கிருந்து வன்னியில் உள்ள நாச்சிக்குடாவுக்கு கடந்தமாத மத்தியில் வந்து சேர்ந்தார் என்று கூறுகின்றன.

இத்தகவல்களை உறுதிப்படுத்த பாரிஸ் நகரில் உள்ள புலிகளின் கிளையுடன் 'முரசு' நிருபர் தொடர்புகொண்டபோது இச் செய்தியை பாரிஸ் கிளை மறுத்துள்ளது. ஆனால் திலகர் தற்போது பாரிசில் இல்லையென்பதால் அவருடன் தொடர்புகொள்ள முடியாது என்று மட்டும் தெரிவித்தனர். எனவே பாரிசில் திலகர் தற்போது இல்லை என்பது உறுதியாகியுள்ளது. வேறு நாடுகளில் லோரன்ஸ் திலகர் இருப்பதற்கான அறிகுறிகளோ செய்திகளோ கிடைக்கவில்லை. எனவே லோரன்ஸ் திலகர் வன்னி சென்றிருக்கலாம் என்ற தகவலில் உண்மையிருக்கலாம் என்றே கருதவேண்டியுள்ளது.

### பீரிசின் பயணம்

மார்ச் 15ம் திகதிக்கு முன்னர் லோரன்ஸ் திலகர் பாரிஸ் திரும்பிவிடுவார் என்றும், நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளிநாடு செல்வதால், அதற்கிடையே புலிகளின் நிலைப்பாட்டை, குறிப்பிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு திலகர் தெரிவித்தாக வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொண்ட பின்னர்தான் குறிப்பிட்ட இராஜதந்திரிகள் நீதியமைச்சர் ஜி.எல்.பீரிசுடன் இலங்கை விவகாரம், அரசின் நிலைப்பாடு, மத்தியஸ்தம் தொடர்பான அரசின் நிலை போன்ற விடயங்கள் பற்றியும் பேசிப்பார்க்க உள்ளனர் எனவும் தகவலறிந்த வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

# யாழில் தொடர் மோதல்கள்

## தலை துண்டிக்கப்பட்ட பிணம்

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் குளப்பிட்டி, தாவடி, கொக்குவில் பகுதிகளில் மோதல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

28.02.97 அன்று கோண்டாவில் உப்புமடம் பிள்ளையார் கோவில் பகுதியில் புலிகளால் கிரனைட் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. அதனையடுத்து படையினர் பதிலடி நடவடிக்கையாக சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதலும் மேற்கொள்ளப்பட்டது.

அதேதினம் கொக்குவில் பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட ஆணின் பிணம் ஒன்று காணப்பட்டது. அவர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை.

01.03.97 அன்று குளப்பிட்டி பகுதியிலும் மோதல் ஒன்று இடம்பெற்றது.

28.02.97 அன்று அராலி, சங்கரத்தை, சங்கானை தெற்குப் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. அப்பகுதி மக்கள் சங்கரத்தை குளத்தடிக்கு அழைக்கப்பட்டு முகமூடிகள் முன்பாக விசாரணை செய்யப்பட்டனர். அதன் பின்னர் சிலரைத் தடுத்துவைத்துவிட்டு ஏனையோரை அனுப்பிவிட்டனர்.

### இருவர் பலி

சங்கரத்தை சின்னப்பு வித்தியாலயத்தடியில் பதுங்கியிருந்த படையினரின் தாக்குதலில் இரண்டுபேர் பலியானார்கள்.

மாலை 6.45 மணியளவில் கூலிவேலை செய்துவிட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்த கிருஷ்ணன் பேரம்பலம், வயது 32, இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை, நாகமுத்து ராஜேந்திரம், வயது 40, இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை, ஆகிய இருவருமே பலியானவர்களாவர்.

இவர்கள் பலியானதை அறிந்த உறவினர்கள் மறுநாள் மாவடி முகாமுக்குச் சென்று விசாரித்தனராம். அவர்கள் குண்டு கொண்டுவந்தனர், அதனால் சுடப்பட்டனர் என்று கூறப்பட்டதாம். சம்பவம் நடந்த இடத்திற்கு உறவினர்கள் சென்று பார்த்தபோது பை ஒன்றுக்குள் தேங்காய்ப் பூரான் சிதறியபடி காணப்பட்டதாம்.

# மன்னார் - வவுனியா போக்குவரத்து!

## புதிய பாதுகாப்பு விதிகள் அமுல்!

(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து தரைமார்க்கப் பாதையூடாக வவுனியாவுக்கும், வவுனியா ஊடாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் செல்வதற்கு புதிய பாதுகாப்பு விதிகள் தற்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதன்படி கச்சேரியிலுள்ள 'பாஸ்' அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பப் படிவத்தை நிரப்ப வேண்டும். இப்படிவம் 7 பிரதிகளைக் கொண்டது. வவுனியா செல்வதற்கு சிவப்பு எழுத்திலும் ஏனைய இடங்களுக்குச் செல்வதற்கு கறுப்பு எழுத்திலும் படிவம் பெற வேண்டும்.

இந்த 7 பிரதிகளிலும், பயணம் செய்ய விரும்புபவர் தமது முழு விபரங்களையும் தெரிவிக்க வேண்டும். பின்னர் இதனை பகுதிக் கிராம அதிகாரி மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

'இவ்வாறு உறுதிப்படுத்திய விண்ணப்பத்தை பாஸ் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். இவ்விண்ணப்பத்தில் அரச அதிபர், பொலிஸ் தலைமை அதிகாரி, பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் சிபாரிசு செய்யவும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இறுதியாக மன்னார் மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியின் அங்கீகாரம் பெற வேண்டும். வவுனியாவுக்குச் செல்பவர்களுக்கு இராணுவ இணைப்பதிகாரியின் அங்கீகாரம் தேவைப்படாது எனக் கூறப்படுகிறது. எனினும் பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதி அவசியம்.

முன்னர் கற்பிட்டிக்குப் படகுகள்மூலம் சென்றதைவிட பஸ்களில் பயணம் செய்வதற்கு பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாக பயணிகள் கூறுகின்றனர். இந்நடைமுறை இம்மாதம்வரை அமுலிலிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பு நகருக்குள் துப்பாக்கிகளுடன் புலிகள்

கடந்த 27.02.97 அன்று மாலை 6.30 மணியளவில் மட்டக்களப்பு நகரம் துப்பாக்கி வேடியோசைகளால் கதிகலங்கியது. மட்டக்களப்பு ரெலிகொம் நிலையத்தில் காவல் கடமை புரிந்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த இரு பொலிஸாரைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர். இச்சம்பவத்தில் ஒரு பொலிஸ்காரர் கொல்லப்பட்டார். மற்றவர் காயங்களுக்குள்ளானார்.

நீண்ட காலத்திற்குப் பின்னர் மட்டக்களப்பு நகருக்குள் புலிகள் ஆயுதங்களுடன் வந்து தாக்குதல் நடத்திவிட்டுப் பாதிப்பின்றி பாதுகாப்பாகத் திரும்பியிருக்கிறார்கள்.

இச்சம்பவத்தின் பின்னர் மட்டக்களப்பு நகருக்குள் இருந்து வெளியே செல்வோர் கடுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள். வழக்கமாக வெளியிடங்களிலிருந்து நகருக்குள் வருவோரையே தீவிரமாகப் பரிசோதிப்பதுண்டு.

சமீப நாட்களுக்கு முன்னர் நகருக்குள் நுழைந்திருந்த புலி உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஒரு குண்டுப் பொதியும், சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த குண்டொன்றும் கண்டு பிடிக்கப்பட்டன.

நகருக்குள் புலிகள்- விசேஷமாகப் பெண் புலிகள் நுழைந்திருப்பதாக நீண்ட காலமாக ஒரு பீதி நிலவி வருகிறது.

புலிகள் பொலிஸார் மீது நடத்திய மேற்படி தாக்குதலுக்குப் பயன்படுத்திய ஆயுதங்கள் வெளியிடத்திலிருந்து கொண்டுவரப்பட்டனவா அல்லது நகருக்குள் முன்னதாகவே கையகப்படுத்தி வைத்திருந்த ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதலை நடத்தி விட்டு மீண்டும் உரிய இடங்களில் ஆயுதங்களைப் பத்திரப்படுத்தி விட்டு சிவிலியன்கள் போல் தப்பிச் சென்றார்களா என்ற சந்தேகம் நிலவி வருகிறது.

# வாகன விபரங்கள் சேகரிப்பு

## பிரிகேடியரிடமிருந்து உத்தரவு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல எரிபொருள் நிலையங்களுக்கும் மாவட்ட பிரிகேடியரினால் எரிபொருள் விநியோகம் சம்பந்தமான அறிவுறுத்தல் கடிதமொன்று சமீபத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தமது எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் பெறும் வாகனங்களின் இலக்கங்கள், எத்தனை லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டது, வாகனம் என்ன வகையானது, எங்கு போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளது, எத்தகைய சேவையில் ஈடுபடுகிறது போன்ற பல்வேறு விவரங்கள் அங்கு குறித்துக்கொள்ளப்பட்டு அந்த விவரங்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும், பிரிகேடியருக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக எரிபொருள் முகாமையாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஒவ்வொரு வாகனத்திற்கும் குறித்த, மட்டுப்படுத்திய அளவே எரிபொருள் வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின்படி வாகன விபரங்களைச் சேகரிப்பதில் நேரத்தைச் செலவிடுவதும் அவற்றை அறிக்கை செய்வதும் தமக்கு மேலதிக வேலைப்பளுவைத் தந்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

மட்டக்களப்பில் தற்போதைக்கு எரிபொருள் வழங்கலில் இத்தகைய கட்டுப்பாடுகள் இருந்தாலும் இப்பொழுது எதுவித எரிபொருள் தட்டுப்பாடும் இல்லை.

# பௌத்த மதகுருவிடம் ஆயுதங்கள்

மொறகஹாஹென பொலிசார் புத்த பிக்கு ஒருவரைக் கைது செய்துள்ளனர். இவரிடம் சட்ட விரோதமாக துப்பாக்கி மற்றும் வெடிமருந்துகள் இருந்தனவாம். 2.2 ரக றிவோல்வர் ஒன்று, பிறநாட்டுத் தயாரிப்பான கிறனேட்டுக்கள் இரண்டு, புகைக்குண்டுகள் நான்கு, வெவ்வேறு வகையான வெடிமருந்துகள், மற்றும் ஒரு வாள் ஆகியன இந்த புத்தபிக்குவிடம் இருந்தனவாம்.

அதிரடிப் படையைச் சேர்ந்த ஒரு றிசேர்வ் பொலிஸ்காரர் இவற்றைத் தன்னிடம் கொடுத்ததாக புத்தபிக்கு தெரிவித்தாராம்.

இங்கிரியாவிலுள்ள தொம்பகஸ்கந்த புத்த ஆலயத்தில் இவைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

# குண்டை வெடிக்கவைத்தனர்

யாழ்ப்பாணம் தாவடியில் 24.02.97 அன்று புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் பலியானார்கள்.

இச் சம்பவம் தொடர்பாகக் கிடைத்த தகவல் பின்வருமாறு: தாவடிப் பகுதியில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சென்று கொண்டிருந்தனர். அப்பகுதியில் பதுங்கியிருந்த இராணுவத்தினருக்கு அவர்கள்மீது சந்தேகம் ஏற்பட்டது. திடீரென்று வழிமறித்தனர்.

அந்த இடத்தில் படையினரை எதிர்பார்க்காத புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவரும் தம்மிடம் இருந்த கைக்குண்டை வெடிக்கவைத்து பலியானார்கள். அச் சம்பவத்தில் படையினர் தரப்பிலும் ஒருவர் பலியானதாகத் தெரிகிறது.

மேஜர் செந்தமிழன் (பொன்னுத்துரை சூரியகுமார், வசாவிளான்), கப்டன் அற்புதன் (செல்வராசா தியாகராசா-அளவெட்டி) ஆகியோரே பலியான புலிகளாவர்.

யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட மற்றொரு மோதலிலும் இரண்டு புலிகள் பலியாகியுள்ளனர். இரண்டாம் லெப்டினன்ட் புதியவன் (குண்டுமணி சிவக்குமார்-ஊரெழு கிழக்கு), இரண்டாம் லெப்டினன்ட் பழனி (சந்தியாபிள்ளை ஜோன்சன்-பருத்தித்துறை) ஆகியோரே பலியானவர்களாவர்.

# புலிகளின் தங்கு விடுதி

வன்னியிலிருந்து வவுனியா நகர்வரும் பயணிகள் ஓமந்தையிலுள்ள பன்றிக்கேத்த குளம் (விளக்குவைத்த குளம்) என்னும் இடத்திலுள்ள புலிகளின் லொட்ஜ்ஜில் ஒருநாள் தங்கவைக்கப்படுகின்றனர்.

அந்த லொட்ஜ்ஜில் ஒருநாள் தங்குவதற்கு 30 ரூபா கட்டணம் செலுத்தவேண்டும். தூங்குவதற்கு பாய் படுக்கை வழங்கப்படும்.

"குறிப்பிட்ட பிரதேசப் பொறுப்பாளர்களின் அனுமதியுடன் புலிகளின் பாஸ் பெற்றுத்தான் வருகிறோம். பின்னர் எதற்காக இங்கு தங்க வைக்கிறீர்கள்?" என்று பயணிகள் கேட்கின்றனர். "ஒரு நோக்கத்தோடுதான் செய்கிறோம்" என்று புலிகள் இயக்க உறுப்பினர்களிடம் இருந்து பதில் வருகிறதாம்.

# அரச நிறுவனத்தில் சுருட்டல்?

அரச நிறுவனமான 'சதோச' விற்பனை நிலையம் யாழ்ப்பாணத்தில் உள்ளது. பொருட்களை நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காகவே இந்த நிறுவனக் கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது.

இந் நிறுவனத்தின் மேலதிகாரிகளுக்கு தமிழ் தெரியாது. யாழ்ப்பாணத்தில் உள்ள சதோச நிறுவனத்திற்கு தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்படுவதே முறையாகும். அது ஒருபுறமிருக்க இங்கு ஊழல் தலைவிரித்தாடுவதாகப் புகார்கள் கிளம்பியுள்ளன.

சில தனியார் கடைகளுக்கு பொருட்களை விற்பனை செய்துவிட்டு, பொதுமக்களுக்கு சில்லறை விற்பனை செய்யப்பட்டதாக பற்றுச்சீட்டுக்கள் போடப்படுகிறதாம்.

அது மட்டுமல்லாமல் 'சதோச'வில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் கிண்டல் செய்யப்படுவதுடன், அநாகரிகமான முறையில் நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பெண் ஊழியர்களுக்கு போதிய சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. ஆண் ஊழியர்களுக்கு வழங்கப்படும் பிற சலுகைகளும் பெண் ஊழியர்களுக்குக் கிடைப்பதில்லையாம். அரச நிறுவனத்தில் இப்படி நடக்கலாமா?

# காணாமல் போனோர் விசாரணை

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழு விசாரணைகள் 1.03.97 முதல் 7.03.97 வரை நடைபெற்றன. காணாமல் போனோர் தொடர்பாக தமிழ்பேசும் மக்களே பெரும்பாலும் சாட்சியம் அளிக்க வேண்டியவர்களாக இருந்தும்கூட அம்பாறைக் கச்சேரியிலேயே ஆணைக்குழு விசாரணைகள் நடைபெற்றன.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக உள்ள கல்முனையிலோ, அக்கரைப்பற்றிலோ மேற்படி விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தால் சாட்சியம் அளிக்க மேலும் பலர் துணிந்து முன்வந்திருப்பர் என்று கூறப்படுகிறது.

தினமும் 60 பேர் சாட்சியம் அளிக்க வருவார்கள் என எதிர்பார்த்தபோதும் சராசரி 30 பேர்தான் சாட்சியம் அளிக்கச் சென்றனராம்.

அம்பாறைக் கச்சேரியில் விசாரணைகள் நடைபெற்றமை சாட்சியமளித்தோர் தொகை குறைவாக இருக்கக் காரணம் என்று கூறப்படுகிறது.

இதேவேளை ஆணைக்குழு முன்பாக அளிக்கப்பட்ட சாட்சியங்கள் ஆணைக்குழுவினரையே அதிர்ச்சியடையவைக்குமளவுக்கு இருந்தனவாம்.

# ஊழியர்கள் மறியல் போராட்டம்

## தலைமைச் செயலாளர் நழுவல்!

(திருமலை நிருபர்)

"வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கால்நடை உற்பத்தித் திணைக்களப் பணிப்பாளர் செல்லையா சோமபாலா இடமாற்றம் செய்யப்பட வேண்டும். அவரால் மணிவண்ணனுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் துடைத்தெறியப்பட வேண்டும்." ஆகிய கோரிக்கைகள் உட்பட ஊழியர் நிரந்தர நியமனம், எரிபொருள் நிலையம் கைமாற்றப்படக்கூடாது போன்ற கோரிக்கைகளின் அடிப்படையில் கடந்த 28ந் திகதி ஞாயிறு வட-கிழக்கு மாகாணத் தலைமைச் செயலகத்தின்முன் ஆர்ப்பாட்டமான மறியல் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

22.2.97 அன்று உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கக் கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டத் தீர்மானத்துக்கமைய இப்போராட்ட ஏற்பாடு இடம்பெற்றது. மாகாணப் பிரதித்தலைமைச் செயலர் திரு க. பரமலிங்கம் பிரசன்னமாகியிருந்த பொதுக்கூட்டத்தில் விசேடவிருந்தினராக அழைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி பா.உ மு. சந்திரகுமார், "மாகாணசபை அதிகாரிகள் சிற்றூழியர்களை வீட்டு வேலைக்காரர்கள் போன்று நடத்துவதை மாற்ற வேண்டும்" எனக் காரசாரமாகக் குறிப்பிட்டிருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

தலைமைச் செயலர் திரு.ஜி. கிருஷ்ணமூர்த்தி உட்பட பல அமைச்சின் செயலர்கள், முன்னறிவித்தல் கிடைக்கப் பெற்றிருந்தும் மறியல் போராட்ட தினத்தன்று திருமலையில் இல்லாமலிருந்தது போராட்ட அமைப்பாளருக்கிடையே வேடிக்கையாகப் பேசிக் கொள்ளப்பட்டது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்து மாகாணப் பிரதித்தலைமைச் செயலர் திரு.க. பரமலிங்கம் நடத்திய பேச்சுவார்த்தையில்-திரு.மு.சந்திரகுமார் பா.உவும் உடனிருந்தார். முதலிரண்டு கோரிக்கைகளுக்கும் இரண்டு வாரத்துக்குள் தீர்வு காணப்படுமென்றும் ஏனையவை உரிய கலந்தாலோசனையுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி மொழி அளித்ததன் பேரில் ஊழியர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். எனினும் "இரண்டு வாரங்களுள் கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தாவிட்டால் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை எடுப்போம்" என பிரதிநிதியொருவர் முரசிடம் தெரிவித்தார்.

# தேர்தலில் போட்டியிடும் முதலாவது முஸ்லிம் யுவதி

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாநகரசபைக்கு மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) கட்சியில் இணைந்து செல்வி பௌஸுல் இராயா நஸார்தீன் என்ற 27 வயது முஸ்லிம் யுவதி போட்டியிடுகிறார். நம் நாட்டில் ஒரு முஸ்லிம் பெண் உள்ளூராட்சித் தேர்தலில் பங்குபற்றுவது இதுவே முதற் தடவையாகும்.

இவரது தாயும் சகோதரரும் கடந்த 1994 ஆம் ஆண்டு ஒக்டோபரில் இடம்பெற்ற காமினி திஸாநாயகா பலியான குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களாகும். இவரது குடும்பம் ஐ.தே.க. ஆதரவாளர்களாகவே இருந்தனர். ஆனால் இவர், தினேஷ் குணவர்த்தனதான் ஒரு சிறந்த தலைவர் என்று ஏற்று அவரது கட்சியில் இணைந்து போட்டியிடுகிறார்.

பாரம்பரிய கலாசார ரீதியாக காலாகாலமாகப் பெண்கள் புறந்தள்ளப்பட்டிருக்கும் நிலையை உடைத்தெறிந்து விழிப்புணர்வடைந்து சிறந்ததொரு சமூதாயத்தைக் கட்டியெழுப்ப அனைத்துப் பெண்களும்- குறிப்பாக முஸ்லிம் பெண்களும் இணைந்து கொள்ள வேண்டுமென்று பௌஸுல் இராயா தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் சர்வதேசப் பெண்கள் தினம்

(ஏறாவூர் நிருபர்)

இம்முறையும் சர்வதேச மகளிர் தினம் நாடெங்கிலுமுள்ள உதவி அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்டன. சமூகத்தில் பெண்கள் வகிக்கும் பெரும் பங்கு கவனத்திற் கொள்ளப்பட்டு பெண்களை ஒதுக்கி வைக்கும் மன நிலையிலிருந்து மாற்றம் கொண்டு வரப்படவேண்டும்; சமத்துவ சமுதாய (ஆண்-பெண்) அபிவிருத்திக் கொள்கை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பன சர்வதேச மகளிர் தினத்தின் பொதுவான நோக்கங்களாகும்.

இதற்கமைவாக பெண்களின் கைப்பணி உற்பத்தித் திறன்கள், ஆக்கங்கள், கதை, கவிதை, கட்டுரை, நாடகம், நாட்டியம், பேச்சு, கண்காட்சி, விவரணப் படக்காட்சி, புத்தக வெளியீடு என்பனவும் மகளிர் தின நிகழ்ச்சிக்காக மட்டக்களப்பில் ஒழுங்கு செய்யப்பட்டன.

அத்துடன் இம்முறை விசேடமாக கனடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனமும் சீடா நிறுவனமும் தாம் உதவித் திட்டங்களை அமுல் செய்துள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனறாகலை, பதுளை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய 7 மாவட்டங்களிலும் பாரம்பரியமற்ற தொழிற் பயிற்சி நெறிகளில் பெண்களை ஈடுபடுத்தி உள்ளன.

# பயத்தோடு நடந்த பஸ் பயணம்

(மன்னார் நிருபர்)

'எடிபல' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு 18 நாட்களின் பின்னர் மன்னாருக்கும் வவுனியாவுக்குமான தரை வழித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 22.02.97 அன்று இவ்வீதி வழியாக மன்னாரிலிருந்து வவுனியாவுக்கான முதலாவது பஸ் சேவை நடைபெற்றது.

பரீட்சார்த்தமாக நடைபெற்ற இந்த பஸ் பயணத்தில், மன்னாரில் இருந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனையில் நடைபெறும் ஆங்கில தினப்போட்டிக்காக 18 மாணவர்கள் பயணம் செய்தனர்.

பஸ்ஸில் ஏறியதும் அநேகமான மாணவர்கள் தத்தமது கடவுளை வேண்டிய வண்ணமிருந்தனர். பயத்தோடுதான் அவர்களது பயணம் தொடர்ந்தது.

பஸ் சாரதியாக திரு. கணேஷ் மற்றும் நடத்துநராக முஹம்மது அஸ்ஹர் ஆகியோர் கடமையாற்றினர்.

இந்த பஸ்ஸினை முருங்கன் வரைக்கும் சென்று மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஏ.சீ.அப்துல் ஹக் வழியனுப்பி வைத்ததாகக் கூறப்படுகிறது.

23.02.96 அன்று அதே பஸ் வவுனியாவிலிருந்து 15 அரச அலுவலர்களை ஏற்றிக் கொண்டு மன்னார் வந்தது. இவர்களில் 5 முஸ்லிம்களும் அடங்குவர்.

இதேவேளை 22ஆம் திகதியன்று வவுனியாவிலிருந்து ஒரு அம்பியுலன்ஸ் வண்டி, மருந்துப் பொருட்கள் அடங்கிய லொறி ஆகியனவும் வந்து சேர்ந்தன.

தூர இடங்களுக்கு பஸ் சேவை நடத்துவதற்காக புதிதாக 5 டிமோ பஸ்களை வழங்குமாறு மத்திய போக்குவரத்துச் சபைக்கு வடமாகாண புனர்வாழ்வு அதிகார சபை விண்ணப்பித்துள்ளது.

மன்னாரிலிருந்து வவுனியாவுக்குப் பயணம் செய்பவர்கள் வவுனியாவில் முகாம்களில் தங்க வைக்கப்படுவார்களா என ஒரு அதிகாரியிடம் வினவியபோது, அநேகமாக அவ்வாறு நடைபெறாது எனத் தெரிவித்தார்.

# 'எடிபல'வும் இடம்பெயர்வும்


'எடிபல' இராணுவ நடவடிக்கையின் பின்னர் மன்னாரிலிருந்து இடம் பெயர்ந்து செல்லும் மக்கள் - எங்கே நிம்மதி?

# எடிபலவும் - இடம்பெயர்வும்!
## நெற்காணிகளும் பாதிப்பு!

'எடிபல' இராணுவ நடவடிக்கையையடுத்து சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிர் செய்யப்படும் காணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்களில் மடு அகதி முகாமில் 2,802 குடும்பங்களைச் சேர்ந்த 10,908 பேர் தங்கியுள்ளனர். பெரியமடு பாடசாலையில் 983 குடும்பங்களைச் சேர்ந்த 3694 பேர் தங்கியுள்ளனர்.

நானாட்டான், முசலி, மாந்தை, மடு மன்னார் போன்ற பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களே பெரும்பாலும் இடம் பெயர்ந்துள்ளனர்.

கணேசபுரம் பகுதியில் சுமார் 30 குடும்பங்கள் வரை படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வருகின்றனர். மன்னார் அரச அதிபரின் முயற்சியால் உணவு-மருந்து மற்றும் இதர பொருட்கள் அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. இங்கிருந்து படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக வவுனியா கொண்டு செல்லப்பட்ட ஒருவர் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

'எடிபல' வின்போது பெரிய தம்பனை நோக்கிச் சென்ற படை அணியினர் விவசாயிகளிடம் விசாரணை நடத்தினர். குடிமக்களை மீண்டும் வந்து தங்குமாறு கூறிவிட்டுச்சென்றனர். இரவில் அப்பகுதியில் கடுமையாக 'ஷெல்' வீசப்படுவதால் பகல் வேளைகளில் தோட்டங்களுக்குச் சென்று நீர்பாய்ச்சிவிட்டு, மடுமுகாம் திரும்புகின்றனர் காணி உரிமையாளர்கள்.

# நோர்வேயில் கண்காட்சி

உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழர்களின் மொழி, பண்பாடு, கலை, கலாசாரத்தை, இலக்கிய வளத்தைப் பிரதிபலிக்கும் ஆவணக் காப்பகம் ஒன்றை 1956ம் ஆண்டிலிருந்து உருவாக்கி உழைத்து வருபவர் குரும்பசிட்டி இரா.கனகரத்தினம்.

சமீபத்தில் அவரது ஆவணக் காப்பகக் கண்காட்சி கனடாவில் நடைபெற்றது. 7800 சேகரிப்புக்கள் அதில் இடம்பெற்றிருந்தன.

மார்ச் 1ம் திகதி நோர்வேத் தலைநகரான ஒஸ்லோ பல்கலைக்கழக மண்டபத்திலும் இந்த ஆவணக்காப்பகக் கண்காட்சி இடம்பெற்றது. இந்தக் கண்காட்சியில் தமிழர்கள் மட்டுமின்றி நோர்வே நாட்டு மக்களும் வந்து கலந்துகொண்டனர். நோர்வே மொழியிலும் கண்காட்சி தொடர்பான தகவல்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின் ஒரு முக்கிய அம்சமாக 'இன்ரநெற்'றில் (தொடர்வலை) இந்தக் காப்பகம் தொடர்பான தகவல்கள், விபரங்கள் உலக நாடுகளுக்கு நிரந்தரமாகத் தந்து கொண்டிருக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்தத் தொடர்வலை சேவையில் இலங்கை இலக்கியகர்த்தாக்களின் ஆக்கங்கள், மலையக மக்கள் தொடர்பான தகவல்கள், கட்டுரைகள் மற்றும் உலகத்தமிழர்கள் தொடர்பான தகவல்கள் ஏறத்தாழ சுமார் 7000 வரை இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளுக்கு எப்போது விமோசனம்?

திகாமடுள்ள மாவட்டத்தில் உள்ள சுமார் நாலாயிரம் ஏக்கர் விவசாய நிலங்களில் நெற் செய்கை பண்ண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பன்றித்தீவு கீழ் மேற்கண்டம், குடாக்கரை கீழ் மேற்கண்டம், நற்பிட்டிமுனை கீழ் மேற்கண்டம், இறைவளிக் கண்டம், கல்முனைக் கண்டம், சம்படிப் பள்ளம், நீண்டகரை, சேகுபற்று, மணிக்கதாவெளி போன்ற விவசாய நிலங்கள் பல வருடங்களாகப் பயனற்றுக் கிடக்கின்றன.

கடந்த ஆட்சிக் காலத்தில் கிட்டங்கியில் இரு நீர் இறைக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டபோதிலும் அவற்றின் மூலம் விவசாயிகளுக்கு எந்தவித பயனும் கிடைக்கவில்லை.

இதனால் விதைப்பு நேரங்களிலும் நெல் அறுவடை நேரங்களிலும் பேய் மழை காரணமாக பெரு வெள்ளம் ஏற்பட்டு விவசாயிகளுக்கு அவ்வப்போது அதி நஷ்டத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இவற்றுக்கெல்லாம் என்ன காரணம்? உரிய வடிகால் அமைப்பு இவ்வயல் நிலங்களுக்கு இல்லாமையே! ஒரே வழி இங்கு ஒரு நிரந்தர வடிகால் அமைப்பை ஏற்படுத்துவதே!

எனவே இவ்விடயத்தில் திகாமடுள்ள மாவட்ட எம்.பியும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களும் காணி, விவசாய, வனவள அமைச்சர் டி.எம். ஜயரத்ன அவர்களும் உடன் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.சி. கலீல், கல்முனை-05.


விளம்பரப் பகுதி

## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P. ஆறுமுகம் அவர்களை**
கீழ்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.
கல்முனையில் மார்ச் 8,9,10 திகதிகளிலும்
கொழும்பு அகமட் டூரிஸ்ட் இன்னில்
மார்ச் 16 முதல் 31 வரையும் சந்திக்கவும்.
கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யலாம்
கொழும்பு நாட்களில் மட்டும் 078/71101
போன் : 436383, 438390

## BRIGHTன் SPOKEN ENGLISH

(தபால் மூலம் கல்வி)
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மிகச் சிறந்த பாடநூல்களுடன் கூடிய பாடத்திட்டம். விபரங்களுக்கு முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.
**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27, FIRST FLOOR, P.O.BOX- 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO-11. T.P. : 434770

## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.
விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=
**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

## பழுதுபார்த்தல்

T.V, VIDEO DECK, HIFI RADIO SETS, CALCULATORS, ORGAN, TYPE WRITERS
மற்றும் எல்லாவிதமான எலக்ரோனிக் உபகரணங்களை உத்தரவாதத்துடன் திருத்தி பெற்றுக்கொள்ள தலை நகரில் நம்பிக்கையான நிறுவனம்
**THIVIYA ELECTRONICS**
121 3/3R, FIRST CROSS ST.
COLOMBO-11.
தொலைபேசி—334322

## UNION

யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)
**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
**ரிஷி. S.மணி**
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்புகொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

## 'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்


APPROVED CHARITY அரசாங்கப் பதிவு இல. HAI4/BT/176
'எல்லாப்புகழும் இறைவனுக்கே'
கர்ம-காலபலனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பப்பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறு பிரச்சினைகளும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவனருளி முனிவர்கள் கையாண்ட கைகண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங்களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபரிகாரப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. விஷ(பாம்பு) கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.



நாடவேண்டிய பெயர், விலாசம்
YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.
குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.

## மலையாள மாந்திரீக சக்தி





சாஸ்திரம் இது தர்மத்திற்கு இணையானது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம், மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர் பி.கே.சாமி அவர்கள். மாயா ஜால வித்தையல்ல மனோநிலையை மயங்கச் செய்யும் மாத்திரையும் அல்ல. இது மாந்திரீக சக்தியின் மகிமை. ஜாதகம், இது விதியின் நிர்ணயம். நிர்ணயிக்கப்பட்ட விதியின் விலாசத்தை படம் பிடித்து காட்டுவது மாந்திரிகம். பிறப்பின் பயன் இறப்பு வரை. அது விதியின் தன்மை. அதை மாற்றி அமைப்பது மதி. அதற்கு உறுதியாக இருக்கிறார் மாந்திரீக மாமன்னர் பி.கே.சாமி அவர்கள். பிரிந்த காதல் ஒன்று சேர, பிரிந்து சென்றவரை அழைப்பித்து எடுக்க, இருவருக்கும் திருமணம் நடைபெறாதென முடிவெடுத்த திருமணம் நடைபெறவும், ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் என முடிவெடுத்து வாழ, திடீர் வியாபார விருத்தி அடைய, தீராநோய்களை தீர்த்துக் கொள்ள, வீடு வளவு பாதுகாப்பு செய்ய, சூனியங்களை அகற்றி பழி அடிக்க, செவ்வாய் தோசம் நிவர்த்தி பெற, அதி விசேடமாக வெளிநாட்டவர்களின் பிரச்சினைகளுக்கு அவர்கள் பிரச்சினைதீர 3 நாளில் அவ்வவ் ஊரில் எமது அங்குள்ள நிர்வாகம் மூலமாக தங்களுக்கு பார்சல் உடன் அனுப்பப்படும். அத்துடன் பிறந்த திகதி, மாதம், இவைகளை அறிவித்து ரூ.1500 அனுப்பி வைத்தால் 30 நிமிடத்தில் உங்கள் ஆயுள் ஜாதகத்தை கண்ணாடிபோல தெட்டத் தெளிவாக கணித்து அனுப்பிவைப்போம்.

தொடர்புகளுக்கு—

**தலைமை காரியாலயம்**
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம்
[மாந்திரீக பிரிவு]
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-07841571
பெக்ஸ்—342464

**உப காரியாலயம்**
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம்
[மாந்திரீக பிரிவு]
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
NO. 33, DAILY FAIR BUILDING
NUWARA - ELIYA.
நுவரெலியா.
தொலைபேசி வரிசைகள்:
052.2508, 3336, 3570, 3093
பெக்ஸ்— 0523336

எந்த மாத கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் உச்சாட்ட பூஜை காலை 09 மணி முதல் மாலை 06 மணி வரை விஷேச பூஜையில் கலந்து குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். கேட்டபடி கேட்டவரம் தரும் தேவி ஸ்ரீ துர்க்கை அம்மனே.
மாந்திரீகத்திலும் ஜோதிடத்திலும் தனக்கென ஒரு தனி இடத்தை பெற்ற ஒரே நிறுவனம் எமது பி.கே.சாமி அஸோஸியட் வரையறுக்கப்பட்ட பிரைவட் நிறுவனமே.

**குறிப்பு-1.**
எமது அனைத்து தொலைபேசி எண்களும் தொடர்பில் இருந்தால் தாங்கள் எம்முடன்; PAGER மூலம் தொடர்பு கொள்ளலாம்.
PAGER CENTRE NO-TEL 588407-PAGER NO-972
நேரில் அப்பாயின்ட்மெண்ட் பெற்று சந்திக்கும் நேரம்
காலை 9மணி முதல் 12.00மணி வரை மாலை 3மணி முதல் 6.30 மணிவரை.

**குறிப்பு-2**
வெளிநாட்டில் உள்ளவர் எமது சேவையை அறிந்துகொள்ள வெளிநாட்டு
COMPUTER INTERNET, NO., E/MAIL/ SAMY 1.2 @SLT.LK, WWW LGO SLT.LK.
வெள்ளிக்கிழமை விடுமுறை

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தடுப்புச்சுவரும் பதுங்கு குழிகளும்

**வ**வுனியாவில் இருந்து மன்னார் வரை தடுப்புச்சுவர் அமைக்கும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மண்ணால் அணைபோல அமைத்து முட்கம்பிகள் போட்டு இந்தத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுவருகிறது.

தடுப்புச்சுவரோடு பதுங்கு குழிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

வவுனியாவிலிருந்து மன்னார் செல்லும் வீதியின் அருகில் இவ்வாறான தடுப்புச்சுவரும், பதுங்கு குழிகளும் அமைக்கும் பணியில் கிட்டத்தட்ட ஆறாயிரம் படைவீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

'புல்டோசர்' போன்ற கனரக வாகனங்கள் உதவியுடன் தடுப்புச்சுவர் அணைகள் எழுப்பப்படுகின்றன.

இத்தடுப்புச்சுவர் அமைப்பது மூலமாக போர்த்தந்திரரீதியில் இரண்டு விதமான சாதகங்கள் படையினருக்கு உண்டு.

வவுனியா-மன்னார் தரைப்பாதையின் நீளம் கிட்டத்தட்ட 75 கிலோமீட்டர். 75 கிலோமீட்டருக்கும் அங்குலத்துக்கு அங்குலம் படையினரை நிறுத்த முடியாது. அந்தளவு ஆட்பலமும் கிடையாது.

எனவே-படையினரின் காவல் அரண்களுக்கு இடைப்பட்ட பகுதியூடாக புலிகள் ஊடுருவி தாக்குதல் நடத்துவது சுலபமாக இருக்கும்.

வவுனியா-மன்னார் தரைப்பாதை போக்குவரத்தையும் புலிகள் சீர்குலைக்க முற்படலாம். அது தவிர ரோந்து அணிகள்மீது கண்ணிவெடித் தாக்குதல் போன்றவற்றிலும் ஈடுபடலாம். இரவோடு இரவாக வந்து கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டுச் செல்லலாம்.

தடுப்புச் சுவர் எழுப்பினால் மேற்படி காரியங்களில் புலிகள் ஈடுபடுவது சிரமம். தடுப்புச் சுவரை உடைத்துக் கொண்டு புலிகள் ஊடுருவ முடியும். ஆனால் அதனை இரகசியமாகச் செய்ய முடியாது. பாரிய தாக்குதலாகத்தான் மேற்கொள்ள முடியும்.

இரவோடு இரவாக- காதும் காதும் வைத்தமாதிரி வந்து கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டு நழுவிச் செல்ல முடியாது. தடுப்புச் சுவரை இரகசியமாக-சத்தமில்லாமல் ஊடறுத்து வர முடியாது. அப்படித்தான் வந்துவிட்டுப் . போனாலும் சுவர் ஊடறுக்கப்பட்டுள்ளது என்பதை படையினர் கண்டுபிடித்து உஷாராகி விடுவர்.

எனவே, வவுனியா-மன்னார் பாதையில் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் உட்பட சிறு சிறு தாக்குதல்களில் ஈடுபடுவதைத் தடுப்புச்சுவர் எழுப்புவது மூலம் தடுப்பது ஒரு நோக்கம்.

இரண்டாவது நோக்கம், வன்னித் தளத்திலிருந்து தரைமார்க்கமாக புலிகள் வில்பத்துக் காட்டுக்குச் செல்லும் பாதையையும் தடுப்புச் சுவர் தடுத்து நிற்கும்.

படையினர் நினைப்பது போல வில்பத்துக் காட்டுக்குப் புலிகள் தரைப் பாதை வழியாகச் செல்வதை முற்றாகத் தடுக்க முடிந்தால், புலிகள் கடற்பாதை வழியாகவே வில்பத்துக்குச் செல்லக் கூடியதாக இருக்கும்.

கடற்படைரோந்தை மன்னார் கடற் பகுதியில் முடுக்கிவிடுவதன் ஊடாக வன்னித் தளத்திலிருந்து வில்பத்துக் காட்டுக்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்கலாம் என்றும் படையினர் கணக்குப் போடக்கூடும்.

வில்பத்துக் காட்டுக்குள் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கப் படையினர் இத்தனை அக்கறை காட்டுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

**வில்பத்துக்காடு சார்ந்த பகுதியில் குதிரைமலைமுனையில் கடற்புலிகளின் தளம் ஒன்று இயங்கிவந்தது. அங்கிருந்துதான் புத்தளம், உடப்பு பகுதிகளுக்கு புலிகள் வந்து செல்கிறார்கள். படகுகள் மூலமாக வெடிமருந்துகளையும் கொண்டுவருகிறார்கள். பின்னர் அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாக கொழும்புக்குள் கொண்டுவந்து சேர்க்கிறார்கள் என்பது உளவுத் தகவல்கள் மற்றும் கைது செய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்கள் மூலமாக படையினர் அறிந்துள்ள தகவல்.**

உடப்பில் கண்டு பிடிக்கப்பட்ட வெடிமருந்துகள், ஆயுதங்கள், தற்கொலைத் தாக்குதலுக்கான உபகரணங்கள் அத்தகவல்களை உறுதி செய்வதாக அமைந்துள்ளன.

**எனவே வில்பத்துக் காட்டுப் பகுதிக்குள் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பது மூலமாக தலைநகரப் பாதுகாப்பையும் உத்தரவாதப் படுத்துவது சாத்தியம் என்று படையினர் நினைக்கின்றனர்.**

எனினும் தரைப்பாதையில் தடுப்புச்சுவர் அமைப்பதுபோல, கடற்பாதையில் இரவு பகலாக கடற்படையினர் தடை அரணாக நின்று ரோந்தில் ஈடுபடுவது எந்தளவுக்குச் சாத்தியம் என்பது கேள்விக்குறிதான்.

கடற்பாதையின் சூட்சுமங்களும், அதிவேக விசைப்படகுகளும் கடற்புலிகளிடம் இருக்கின்றன. இரவு பகலாக கடல் ரோந்தில் கடற்படையினர் ஈடுபட்டால், கடற்படையினரின் விழிப்புத் தளரும் நேரமாகப் பார்த்து கடற்புலிகள் தாக்குதல் மேற்கொள்ளலாம்.

ஆயினும் மன்னார் தரைப்பதை படையினர் வசம் வந்திருப்பதும், தடுப்புச் சுவர்கள் எழுப்பப்படுவதும் புலிகளின் தொடர் தாக்குதல்களில் இருந்து படையினருக்கு ஓரளவு பாதுகாப்பானதே.

ஏற்கனவே யாழ் குடாநாட்டில் சில பகுதிகளிலும் படையினர் தடுப்புச் சுவர்களை அமைத்துள்ளனர்.

இதேவேளை வன்னியில் புலிகளும் பதுங்கு குழிகளையும், தரைக்குக் கீழான பாதைகளையும் அமைத்து. தயார் நிலையில் இருக்கின்றனர்.

வன்னித் தளத்தை நோக்கி படையினர் முன்னேறினால் பலத்த பதிலடி நடவடிக்கையில் ஈடுபடப் புலிகள் தயார் நிலையில் காணப்படுகின்றனர்.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்குச் செல்லும் தரைப்பாதை வவுனியா-யாழ் வீதி என்று அழைக்கப்படுகிறது.

வவுனியாவில் இருந்து யாழ் வீதியில் சென்றால் முதலில் வருவது தாண்டிக்குளம். அதற்கு அடுத்தது நொச்சிமோட்டை. அங்குதான் படையினரின் கடைசிப் பாதுகாப்பு அரண் உள்ளது. வன்னியில் இருந்து வருபவர்கள் முதலில் சந்திக்கும் படையினரின் சோதனைச் சாவடியும் அதுதான்.

நொச்சிமோட்டைக்குப் பின்னர் ஒரு சில கிலோமீட்டர்களுக்கு 'நோ மேன் ஏரியா'. மக்கள் நடமாட்டமோ, படைகள், புலிகள் நடமாட்டமோ இல்லாத பகுதி அது. அதனைத்தாண்டிய பின்னர்தான் புலிகளின் பலம் வாய்ந்த பாதுகாப்பு அரண்கள் ஆரம்பமாகின்றன.

**'ஒப்பரேஷன் எடிபல' நடவடிக்கை தொடங்கியவுடன் படையினர் வவுனியா-யாழ் வீதிவழியாக கிளிநொச்சிவரை முன்னேறத் திட்டமிடுகிறார்கள் என்றே புலிகள் நினைத்தனர்.**

அதனால் நொச்சிமோட்டைக்கு அப்பாலுள்ள புலிகளின் பாதுகாப்பு அரண்கள் உஷார்படுத்தப்பட்டன.

உருமறைப்புச் செய்யப்பட்ட புலிகளின் அணிகள் பாதையின் இரு மருங்கிலும் நிலை எடுத்து படையினரின் வரவை எதிர் பார்த்துக் காத்திருந்தனர்.

படையினர் மன்னார் நோக்கிச் செல்வதாக புலிகளின் தலைமைப்பீடத்துக்குத் தகவல் பறந்தது.

மன்னார் நோக்கிச் செல்வதாகப் போக்குக்காட்டி புலிகளை அங்கே வரவழைத்துவிட்டு, படையினர் யாழ் வீதி வழியாக முன்னேறத் திட்டமிட்டுள்ளனர் என்றே புலிகள் நினைத்தனர்.

அதனால் யாழ் வீதியில் நிறுத்தப்பட்ட தமது அணிகளை வேறெங்கும் நகர வேண்டாம் என்று உத்தரவிட்டுவிட்டார் பிரபாகரன்.

அதனால்தான் மன்னார் பாதையில் புலிகளின் எதிர்ப்பு ஒரு பேருக்கு இருந்ததே தவிர பலத்த பதிலடி எதையும் படையினர் சந்திக்கவில்லை. 'கைவீசம்மா கை வீசு' என்றரீதியில் வெகு சுலபமாகச் சென்று மன்னார் பாதையைப் படையினர் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர்.

'ஒப்பரேசன் எடிபல' நடவடிக்கையில் படையினரின் ஒரு பிரிவு வவுனியா பூவரசங்குளம் வழியாக மடு மார்க்கத்தில் தம்பனை நோக்கிச் சென்றது. அப்படையணி மேலும் ஆறு மைல்கள் தூரம் சென்றிருந்தால் மடு மாதா கோவிலை அடைந்திருக்கலாம். அங்குதான் அகதி முகாம் அமைந்துள்ளது.

மடு மாதா கோவில் பகுதியை நோக்கி படையினர் முன்னேறி இருந்தாலும் புலிகள் பாரிய எதிர்ப்பைக் காட்டியிருக்க மாட்டார்கள் என்பதுதான் தகவல்.

வவுனியா-யாழ் வீதியால் படையினர் முன்னேறுவதைத் தடுப்பதுதான் முதல் கடமை. மடு வீதிவழியாக உள்ளே வரும் படையினரை நன்றாக உள்ளே விட்டு



புல்டோசர் மூலம் தடுப்புச் சுவர் அணை-தற்காப்பு உத்தி

**'ஒப்பரேஷன் எடிபல' படையினரின் தாக்குதல் யுத்தம். புலிகள் இப்போது வன்னியில் தற்காப்பு யுத்த கட்டத்தில்...! அடுத்த கட்டம்?**

விட்டு பின்னர் கவனித்துக் கொள்ளலாம் என்பதுதான் புலிகளின் திட்டமாக இருந்தது.

அது தவிர மடுவைத் தாண்டி படைகள் மேலும் உள்ளே சென்றால் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் சிக்க நேரிடும். புலிகளின் ஆட்டிலெறித் தாக்குதலுக்கும் உள்ளாக வேண்டி ஏற்படும்.

'ஒப்பரேஷன் எடிபல'வில் படையினர் முன்னேறிய முனைகளில் புலிகளின் எதிர்ப்பு இல்லாமல்போனதன் காரணங்கள் அவைதான்.

**வன்னிப் போர்க்களத்தில் புலிகளிடம் இருந்து படையினர் எதிர்நோக்கும் பிரதான அச்சுறுத்தல் ஆட்டிலெறித் தாக்குதல்.**

வவுனியா நோக்கி புலிகள் ஆட்டிலெறித் தாக்குதலை நடத்திய பின்னர் வவுனியாவில் உள்ள படைமுகாம்களில் பதட்டம் தொடங்கிவிட்டது.

முகாம்களுக்குள் இருக்கவே படையினர் தயங்குகின்றனர். வெளியேதான் தங்குகின்றனர். வவுனியா நகரிலுள்ள பாஸ் வழங்கும் அலுவலகம் முதல் அரச அலுவலகங்கள் வரை ஷெல் வீச்சுப் பீதியால் பாதிக்கப் பட்டுள்ளன.

வவுனியாவில் புலிகளின் ஷெல் வந்து விழுந்த இடத்தில் இருந்து கணக்கிட்டுப் பார்த்ததில் புலிகள் ஆட்டிலெறியை எங்கே வைத்திருந்து தாக்கியிருக்கலாம் என்பதை படையினர் ஊகித்துக் கொண்டனர்.

வவுனியாவில் இருந்து ஓமந்தை பத்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஓமந்தையிலிருந்து தம்பனைக்குச் செல்ல உட்பாதை ஒன்று உள்ளது. அப்பாதையில் சில கிலோமீட்டர்கள் செல்ல 'பறை நாட்டகல்' என்னும் ஊர் இருக்கிறது.

அங்கிருந்துதான் புலிகள் ஆட்டிலெறியை இயக்கியுள்ளனர் என்பது படையினருக்குத் தெரியவந்தது.

ஆட்டிலெறி ஷெல் எங்கிருந்து வருகிறது என்பதை படையினரால் ஊகிக்க முடியும் என்பது புலிகளுக்கும் தெரியாத சங்கதியல்ல.

அதனால் ஆட்டிலெறி இருக்கக் கூடிய இடத்தைக் கணிப்பிட்டு விமானப் படை விமானங்கள் செல்வதற்கு இடையில் வேறு பத்திரமான இடத்துக்கு ஆட்டிலெறியைக் கொண்டு சென்றுவிடுகின்றனர்.

ஆட்டிலெறியைப் பாதுகாப்பதில் புலிகள் மிக விழிப்பாகவும், கவனமாகவும் இருக்கின்றனர்.

மக்களின் பார்வைக்கும் எட்டாத பகுதிகளில்தான் ஆட்டிலெறிகளை நிறுத்தி வைத்து இயக்குகிறார்கள்.

வவுனியா வரும் பயணிகளிடம் படையினரும், உளவுப்பிரிவினரும் அறிய விரும்பும் முக்கிய இரகசியம் ஆட்டிலெறிகள் பற்றித்தான்.

புலிகள் ஆட்டிலெறிகளை எங்கு வைத்திருக்கிறார்கள்? என்பதைத் துருவித் துருவிக் கேட்கிறார்கள்.

வானத்தில் ஏவுகணை அச்சுறுத்தல் போல தரையில் ஆட்டிலெறி அச்சுறுத்தல் படையினருக்கு வன்னியில் பெரும் சவாலாக மாறியுள்ளது.

வவுனியா விமானப்படைத் தளத்தில் ஹெலிகளோ, விமானங்களோ தரித்து நிற்பதில்லை. அநுராதபுரம் தளத்தில் இருந்துதான் நடவடிக்கைகளுக்குப் புறப்படுகின்றன.

**இதற்கிடையே 03.03.97 அன்று வவுனியா பறையனாலங்குளத்தில் உள்ள படையினரின் காவலரண் ஒன்று புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.**

வவுனியா-மன்னார் வீதியும், மதவாச்சி- மன்னார் வீதியும் சந்திக்கும் இடம்தான் பறையனாலங்குளம். புலிகள் தமது வன்னித் தளத்திலிருந்து வந்து தாக்கிவிட்டு திரும்பிச் சென்றுள்ளனர்.

நடைபெற்றது பாரிய தாக்குதல் அல்ல; படையினர் தரப்பில் எவ்வித இழப்புக்களும் ஏற்படவில்லை.

வவுனியாவில் படையினரின் காவல் அரண்கள்மீது தொடர்ச்சியான தாக்குதல்களை புலிகள் மேற்கொள்ளவே செய்வர்.

## நாரதர்

**தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டாலும் தாக்குதல்கள் தொடரும். ஒரு கட்டத்தில் பாரிய ஊடறுத்தல் ஒன்றை புலிகள் மேற்கொள்ளக்கூடும் என்பதை படையினரும் உணராமலில்லை.**

ஆனால் வேறு வழியில்லை. இழப்புக்கள் பற்றிக் கவலைப்படாமல் அவ்வப்போது கிடைக்கும் வெற்றிகளை பிரகடனம் செய்வதில்தான் இரு தரப்புமே குறியாக உள்ளன.

வன்னியில் தற்போது தமது தளத்தைப் பாதுகாக்கும் தற்காப்பு யுத்தக் கட்டத்தில் புலிகளின் அணிகள் உள்ளன.

**படையினரின் 'ஒப்பரேஷன் எடிபல' தாக்குதல் யுத்தம். படையினர் தாக்குதல் யுத்தத்தை ஆரம்பித்தவுடன் புலிகள் தற்காப்பு யுத்தக் கட்டத்துக்குச் சென்றுள்ளனர்.**

**அடுத்து புலிகள், தற்காப்புக்கான தாக்குதல் யுத்தம் ஒன்றில் ஈடுபடக்கூடும். அவ்வாறான தாக்குதலில் அழித்தொழிப்புக் குணாம்சமும் உள்ளடங்கி இருக்கலாம்.**

'ஒப்பரேஷன் எடிபல' புலிகளின் தாக்குதல் பலத்தில் எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதுதான் மிக முக்கிய அம்சம். அதன் பிரதிபலிப்பாக வன்னிப் போர்க்களத்தில் உக்கிரமான போர்க் காட்சிகள் விரியப்போகின்றன.

## அதிரடி அய்யாத்துரை



***தேசிய தொலைக்காட்சியை*** முன்னர் ஒரு காலத்தில் 'பிரேமவாகினி' என்றழைத்தனர் நீலக்கட்சியினர். இப்போது மினித் தேர்தல் பிரசார பீரங்கியாக அதனைப் பாவிக்கினம். அதனால் பச்சைக் கட்சியினர் தேசிய தொலைக் காட்சிக்கு சூட்டியுள்ள பட்டப்பெயர் 'சந்திரவாகினி'.

***அரசியல்வாதிகளிடம்*** ஆயுதக் களைவு என்று பச்சை அணியினரிடம் தான் துருவல் நடந்ததாம். நீல அணியினரிடம் மட்டும் துருவல் நடக்கவில்லையாம். இப்படி நடக்குமெண்டு தெரிஞ்சு முன்கூட்டியே தங்களிடமுள்ள ஆயுதங்களை 'டம்' பண்ணிப் போட்டினமாம் பச்சை அணியினர். அரசியல்வாதிகளே ஆயுத ஒப்படைப்புக்குத் தயாராக இல்லைப்பார்த்தியளோ!

***திருவான மலையின்*** பாடசாலை நிகழ்ச்சி ஒன்றுக்கு நகரத்தின் தலைவரையும் சும்மா ஒரு மரியாதைக்கு அழைத்திருந்தார்களாம். போனவர் வாயைச் சும்மா வைத்திருக்காமல் மாணவர்களுக்கு ஒழுக்கம் பற்றி உபதேசம் செய்தாராம். 'தான் செய்யும் காரியத்தையே ஒழுங்காகச் செய்ய முடியேல்லை, எங்களுக்கு உபதேசிக்க வந்துவிட்டார்' எண்டு மாணவர்கள் கடுப்பில் இருக்கினமாம்.

***கட்டுப்பாட்டுக்குள்*** கொண்டுவந்தால்தான் கெடுபிடிகளை அதிகமாக்குகினம் சீருடையினர். மன்னாருக்கு கடல் பாதையால் செல்ல சனம் காத்திருந்து அவதிப்பட்டாலும் கூட சாமான்களை பொதிகளாகக் கொண்டுபோகக் கூடியதாக இருந்தது. இப்ப பாருங்கோ தரைப்பாதை திறந்தாச்சு, பொதிகள் கொண்டுபோக பல படிகள் ஏறி அனுமதி வாங்கவேணுமாம். பாதை திறந்தாச்சு எண்டு வானொலியும், தொலைக்காட்சியும் சந்தோசப்பட்டால் போதுமோ? சனம் எப்ப சந்தோசப்படுகிறது?!

***யாழ்ப்பாணத்துக்கு*** திருமலையில் இருந்து கப்பலில் சென்ற பெண் ஒருவருக்கு திடீர் பிரசவ வலி. கப்பலில் இருந்த பெண்கள் உதவ முன்வரவில்லையாம். கப்பல் கப்டன் சொல்லிச் சொல்லி மனம் வருந்தியிருக்கிறார். இது தினசரிகளில் வந்த செய்தி. அவரது மனிதாபிமான உணர்ச்சியை பாராட்டத்தான் வேணும். ஆனால் மற்றொரு செய்தி உறுத்தலாக இருக்குது. யாழில் இருந்து கப்பலில் வெங்காயம் கொண்டுவந்தார் ஒரு விவசாயி. பல லட்சங்கள் பெறுமதி. அந்த வெங்காயத்தை அமுக்கத் திட்டமிட்டு விவசாயியை மிரட்டினவையாம் கப்பல் கம்பனிக்காரர். விஷயம் ஜனநாயகக் கட்சித் தலைவரின் காதுக்கு எட்டியதால் பின்னர் வெங்காயத்தில் ஒரு பகுதி உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டதாம். அதுவும் இழுத்தடித்துதான் ஒப்படைச்சவையாம். கஷ்டப்பட்டு பயிர் செய்து கொண்டுவர, கப்பென்று அமுக்க நினைப்பதை மனிதாபிமானத்தில் சேர்ப்பதோ, அல்லது பறிமானத்தில் சேர்ப்பதோ?

***மீன்பாடும் தேனக கல்லூரியில்*** சிங்கத்தாரின் பெயர் பொறித்தமையால் மாணவர்கள் கொதித்து எழுந்த கதை தெரியும்தானே. விழுந்தும் மீசையில் மண்படாத கதையாக "என் பெயர் போட வேண்டாம்" எண்டு சிங்கத்தார் அறிவிச்சதும் பழைய கதைதானே. புதிய கதை சொல்லுகிறேன், கேளுங்கோ. என் பெயரைப் போடவேண்டாம் எண்டு சொல்லிப்போட்டாங்களே எண்டு சிவாஜி கணேசன் ஸ்ரைலில் புலம்பிக்கொண்டிருந்தாராம் சிங்கத்தார். "அண்ணே உங்கள் பெயரைமீண்டும் பொறித்துக்காட்டுகிறேன் எனக்கு ஒரு சான்ஸ் கொடுங்கோ' எண்டு சொன்னவரை அக் கல்லூரியில் முதல்வராக்கினாராம் சிங்கத்தார். மாணவர்களா கொக்கா? விஷயம் அறிந்து மீண்டும் பொங்கி எழுந்தனராம். புதிய அதிபர் வேண்டாம் எண்டு ஒரே பிடியாக நிண்டதால், பாவம் சிங்கத்தார் மறுபடியும் பிடிவாதத்தில் தோற்றுப் போனார். சில பத்திரிகையாளர்களை தனிப்பட்டரீதியில் சிங்கத்தார் கவனிப்பதால் அவர் தொடர்பான இவ்வாறான செய்திகள் வெளியே மூச்! மூச்!!

***ரெண்டு எழுத்தாருக்கு*** மருந்து கடத்தத் திட்டமிட்டதாக தமிழ்நாட்டில் நம்நாட்டு முன்னாள் பிரமுகர்கள் சிலரை கைது செய்திருக்கிறார்கள். உள்ளே இருப்போரில் ஒரு பிரமுகர் தான் ஒரு காலத்தில் ரெண்டு எழுத்தாரை கண்டித்த செய்திகளையெல்லாம் ஆதாரமாகச் சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறாராம். இவர்தான் முன்னர் சங்கலியர்கள் பற்றியும் காக்கை வன்னியர்கள் பற்றியும் எழுதியவர். இப்போது தனக்கொரு கஷ்டம் வந்ததும் அண்ணரும் கரணம் அடிக்கிறார். கலைஞர் தன்மீது கைவைக்கமாட்டார் எண்ட நம்பிக்கையில் ரெண்டு எழுத்தாருக்கு உதவ முற்பட்டவராம். அதுக்கு மாறாக கைவைக்கப்பட்டுவிட்டதால் ரெண்டு எழுத்தாருடன் உள்ள உறவை உதறத்தயார் எண்டு இரகசிய தூதுவிட்டுள்ளாராம். சச்சா...என்ரை சச்சி ஏகாம்பரா... லோகத்தில் என்னவெல்லாமோ நடக்குதடா.

***சுயாதீன தொலைக்காட்சிக்கு*** தமிழ்ப்பட ரசிகர்கள்மீது ஏனிந்தக் கோபம். முன்னர் தாமே திரையிட்ட படங்களை மீண்டும் ஒரு ரவுண்ட் ஒளிபரப்பி கழுத்தறுப்பது முறையோ? கவனிங்க ஐயா!

ஒரு அருமையான பொன்மொழி

***"ஒரு மனிதன்***
***எப்படிப்பட்டவன்***
***என்பதை அவன்***
***நண்பன் மூலம் அல்ல***
***அவன் பகைவன் மூலமும்***
***அறிந்துகொள்ளலாம்!"***

# 119

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# இந்தியப் படையோடு போர்நிறுத்தம் புலிகள் மூன்று நிபந்தனைகள்!

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

## சுற்றிவளைப்பு

யாழ் நகரைக் கைப்பற்றுவதற்காக கிட்டத்தட்ட 16 நாட்கள் இந்தியப்படை போரிடவேண்டியிருந்தது.

யாழ் நகர் இந்தியப் படையின் கையில் வீழ்ந்தபின்னரும் புலிகள் நகருக்குள்ளும் வெளியேயும் நடமாடித் திரிந்தனர்.

புலிகளின் அணிகள், சில தலைமையோடு தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தன. தலைமையுடன் தொடர்பு கொள்ளும்வரை தங்களைப் பாதுகாத்துக் கொள்வதே அந்தப் பிரிவுகளின் நோக்கமாக இருந்தது.

நவாலி, மானிப்பாய் பகுதியில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலர் மறைந்திருந்தனர். யாழ்நகர் கடற்கரைப் பகுதிக்கு அருகிலுள்ள கவுதாரிமுனை, மண்ணித்தலை என்னும் பகுதிகளிலும் பல உறுப்பினர்கள் சென்று மறைந்திருந்தனர்.

புலிகள் இயக்க முக்கியஸ்தர்களில் ஒருவரும், புலிகள் இயக்க மட்டக்களப்பு மாவட்ட தளபதியுமான அருணாவும் அவரது குழுவினரும் யாழ்ப்பாணத்தில் சுண்டிக்குளியில் உள்ள வீடொன்றில் மறைந்திருந்தனர்.

சுண்டிக்குளியில் குருசோ வீதிக்கு அருகில் அந்த வீடு இருந்தது. முழுவதும் கட்டி முடிக்கப்படாத வீடு அது. அங்கு இருந்தால் யாருக்கும் சந்தேகம் வராது என்றுதான் அருணா குழுவினர் அங்கு தங்கியிருந்தனர்.

பொதுமக்கள் மத்தியில் இருந்து யாரோ ஒருவர் அத் தகவலை இந்தியப் படையினருக்குத் தெரிவித்துவிட்டார்.

"யார் அந்த அருணா?" என்று விசாரித்தனர் இந்தியப் படையினர்.

"இலங்கை அரசுடன் நடைபெற்ற கைதிகள் பரிமாற்றத்தின்போது விடுதலையானவர். புலிகளின் தளபதிகளில் ஒருவர்" என்று தெரிவிக்கப்பட்டது.

அது போதாதா? ஒரு படைப்பிரிவே புறப்பட்டுச் சென்று அருணா இருந்த வீட்டை முற்றுகையிட்டது.

மறைந்திருந்த வீட்டில் உறங்கிவிட்டு காலையில் எழுந்து வெளியே வந்தபோதுதான் அருணாவும் குழுவினரும் சுற்றி வளைக்கப்பட்டனர்.

படையினரைக் கண்டதும் அருகிலுள்ள மதில் ஒன்றின்மீது தாவிப் பாய்ந்தார் அருணா. இந்தியப் படையினர் சற்று அயர்ந்திருந்தால் அருணா தப்பியிருப்பார்.

அருணா பாய்ந்தபோது இந்தியப் படையினர் சுட்டனர். அருணா அப்படியே சாய்ந்தார். அவருடன் வந்தவர்களில் இரண்டு பேரும் இந்தியப் படையினரின் துப்பாக்கி வேட்டுக்களுக்கு பலியானார்கள்.

கிட்டுமீது மாத்தையா குழுவினர் கைக்குண்டு வீசினர். அப்போது புலிகளின் காவலில் இருந்த ஏனைய இயக்க உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கந்தன் கருணைப் படுகொலை என்றழைக்கப்படும் அக் கொலை வேட்டையை மேற்கொண்டவர் அருணா என்று முன்னர் விபரித்திருந்தேன் அல்லவா? அந்த அருணாதான் சுண்டிக்குளி சுற்றிவளைப்பில் பலியானார்.

## புகையிரத நிலைய பயங்கரம்

யாழ் புகையிரத நிலையத்திலும் அகதிகள் தங்கியிருந்தனர். யாழ்ப்பாணம் குருநகர் மற்றும் சின்னக்கடைப் பகுதிகளை நோக்கி இந்தியப் படையினர் ஷெல் வீச்சுக்களை சரமாரியாக மேற்கொண்டனர். அதனால் அப் பகுதிகளில் இருந்தவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி புகையிரத நிலையத்துக்குள் தஞ்சமடைந்தனர்.

சுமார் 600 பேர்வரை புகையிரத நிலையத்தில் தங்கியிருந்தனர். யாழ் புகையிரத நிலையப் பகுதியில் புலிகளும் ஆயுதங்களுடன் நடமாடினார்கள்.

புகையிரதப் பாதை வழியாக இந்தியப் படையினர் முன்னேறிச் சென்றனர்.

ரயில் பெட்டிகளின் மறைவில் இருந்து கொண்டு புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

ஏற்கனவே காங்கேசன்துறை ரயில் பாதைவழியாக இந்தியப் படையினர் கொக்குவில் வரை முன்னேறி பராகொமாண்டோக்களை மீட்டெடுத்திருந் தனர்.

அதனால் யாழ் நகருக்குள்ளும் புகையிரதப் பாதை வழியாக படைகள் முன்னேறலாம் என்று புலிகள் எதிர்பார்த்தனர்.

எனவே ரயில்பாதையோரங்களில் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்திருந்தனர்.

ரயில்பாதை வழியாக முன்னேறிய படையினர் கண்ணிவெடியில் சிக்கிக் கொண்டனர்.

கண்ணிவெடி வெடித்த சத்தமும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் ரயில் நிலையத்தில் தஞ்சம் புகுந்திருந்த அகதிகளுக்கு தெளிவாகக் கேட்டன.

கண்ணிவெடித் தாக்குதலில் படையினர் சிலர் பலியானதும், அவர்கள் பின்னால் வந்த படையினர் கடும் கோபம் அடைந்தனர்.

புலிகள் அப்பகுதியில் பெருமளவாக நிலைகொண்டிருப்பதாக நினைத்தனர்.

ரயில் பெட்டிகளின் மறைவுகளுக்குள் பதுங்கியிருந்துகொண்டு புலிகளின் துப்பாக்கிகள் முழங்கிக் கொண்டிருந்தன.

உண்மையில் புலிகள் பதினைந்து இருபது பேர்தான் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர். இந்தியப் படையினருக்கு அது தெரிய நியாயமில்லை. நூற்றுக்கணக்கான புலிகள்தான் திரண்டுவந்து தாக்குவதாக நினைத்தனர்.

உடனடியாக ஷெல் தாக்குதலை ஆரம்பித்தனர் இந்தியப் படையினர். ரயில் நிலையம் மீதும் ஷெல்கள் விழுந்தன. ரயில் நிலையத்தின் அருகிலுள்ள வீடுகளும் ஷெல்களால் நாசமாகின.

ரயில் நிலையத்துக்குள் இருந்த சுரங்கப் பாதைக்குள் அகதிகள் பலர் ஓடிச்சென்று பதுங்கிக்கொண்டனர். ரயில் நிலையத்துக்குள் விழுந்த முதலாவது ஷெல் ஒருதாயையும் மகளையும் பலியெடுத்தது.

அதேநேரம் ரயில்வே கடவை அருகில் நின்றிருந்த இந்தியப்படை மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். அத் தாக்குதலில் இந்தியப் படையினர் சிலர் கொல்லப்பட்டனர்.

திடீர்த்தாக்குதல் நடத்திவிட்டு புலிகள் பாய்ந்து சென்றுவிட்டனர். இந்தியப் படையினர் பதிலடியாக ஷெல் தாக்குதலை உக்கிரமாக்கினார்கள்.

ரயில் நிலையத்தை நோக்கி சரமாரியாக சுட்டபடியே படைகள் முன்னேறின.

## அவலக்குரல்

படையினர் சுட்டுக்கொண்டே முன்னேறி வருவதைக் கண்ட அகதிகள் அவலக்குரல் எழுப்பினர்.

தொடர்ந்து சுட்டுக்கொண்டே முன்னேறினார்கள் படையினர்.

'ஐயோ, ஐயோ....' என்று கதறியபடியே ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தப்பி ஓடத் தொடங்கினார்கள்.

கல்லோயா அபிவிருத்தி சபையில் பணியாற்றிய மூத்ததம்பி சாமுவேல் என்பவரும் ரயில்நிலைய முகாமில் இருந்து உயிர்தப்பியவர்களில் ஒருவர்.

'முறிந்தபனை' நூலாசிரியர்களுக்கு அவர் சொன்ன தகவல் கீழே வருகிறது.

"22ம் திகதி காலையில் சற்றே அமைதி நிலவியது. ஆனால் பின்னேரம் பலத்த ஷெல் தாக்குதல்கள் ஆரம்பமாகிவிட்டன.... பிற்பகல் 3.30 மணியளவில் நாங்களும் அங்கு போய்ச் சேர்ந்தோம்.

திடுமென பருத்தித்துறை வீதியிலிருந்து ரயில்பாதை வழியாக புகையிரத நிலையம் நோக்கி இந்தியப் படை முன்னேறிவந்தது.

அவர்கள் எங்களை நோக்கி சரமாரியாகச் சுட ஆரம்பித்தனர். ஈவிரக்கமில்லாமல் அவர்கள் எல்லாவற்றின்மீதும் சுட்டுத்தள்ளினார்கள். அகதிகள் பயத்தில் சிதறியோடினார்கள்.

**கிட்டத்தட்ட 30 முதல் 40 சடலங்கள்வரை எங்கும் பரவிக் கிடந்தன. இரண்டு தோட்டாக்கள் என் தலையில் இரு மருங்கிலும் விர்ரென்று சீறிப்பாய்ந்து சென்றன. எனது மனைவிக்கு வயிற்றில் அடிபட்டு இரத்தம் பெருகி ஓடியது. எனக்கும் காலில் அடிபட்டது. நல்ல வேளையாக துப்பாக்கிச் சூடு நின்றுவிட்டது. அது கடவுளின் கிருபையாக இருக்கலாம்.**

என் மனைவி இறந்துபோனாள். என் மனைவியின் உடலை அன்றிரவு கொண்டு செல்ல முடியவில்லை!" என்று தன் சோகக் கதையை சொல்லியிருக்கிறார் சாமுவேல். அப்போது அவரது வயது 69.

## சாவகச்சேரியில் விபரீதம்

1987 அக்டோபர் 27-சாவகச்சேரி சந்தையில் மக்கள் கூடியிருந்தனர். பொருட்களை வாங்கிக்கொண்டு போய்விடும் அவசரம்.

எப்போது ஊரடங்கு வரும், எப்போது முடியும், எப்போது மறுபடி கடைகள் திறக்கும் என்பதெல்லாம் நிச்சயமாகத் தெரியாத நிலை.

திடீரென்று சந்தைக்கு மேலே இந்தியப் படை ஹெலிகொப்டர் ஒன்று வட்டமிட்டது. அப்பகுதியை நோட்டமிட்டது.

புலிகளின் வாகனம் ஒன்று தெருவில் சென்று கொண்டிருப்பதை ஹெலி கவனித்துவிட்டது. அது பின்புறம் கூரையில்லாத வாகனம். டட்ஸன் பிக் அப் ரகவாகனம். பின்புறத்தில் கலிபர் 50 ரக துப்பாக்கி பொருத்தப்பட்டிருந்தது. ஹெலி தாழப் பறந்து வந்தால் அதனால் தாக்க முடியும்.

ஹெலி கொப்டர் அந்த வாகனத்தின்மீது தாக்குதல் நடத்தவில்லை. நோட்டமிட்டுக் கொண்டு பறந்து மறைந்துவிட்டது.

அதன்பின்னர் சுமார் ஒரு மணிநேரத்தின் பின்னர் மீண்டும் அதே ஹெலிகொப்டர் சாவகச்சேரி சந்தையின் மேலாக பறந்து வட்டமிட்டது.

அப்போது அப் பகுதியில் எங்குமே புலிகளின் நடமாட்டமோ, வாகனங்களோ கிடையாது. மக்கள்தான் சந்தையில் கூடியிருந்தனர்.

திடீரென்று ஹெலியில் இருந்து சந்தையை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன. மக்கள் சிதறி ஓடினார்கள். கட்டிடங்களுக்குள் சென்று பதுங்கிக் கொண்டனர்.

ஹெலி பறந்து சென்றுவிட்டது. ஷெல் சத்தங்கள் ஓய்ந்துவிட்டன.

மரண ஓலங்கள் எழத் தொடங்கின.

முப்பது முப்பத்தைந்து பேர்வரை ஹெலி தாக்குதலில் பலியானார்கள்.

## இந்தியப் பத்திரிகைகள் கண்டனம்.

இந்தியப் படையின் நடவடிக்கைகள் தொடர்பாக செய்திகளை இந்தியப் பத்திரிகைகள் பல உடனுக்குடன் வெளியிட்டன.

இந்தியாவின் பிரபல ஆங்கில சஞ்சிகையான 'இந்தியா ருடே' நவம்பர் 15ம் திகதிக்குரிய தனது வெளியீட்டில், இந்தியப்படை நடவடிக்கைகளை விமர்சனக் கண்ணோட்டத்தில் தெரியப்படுத்தியது.

தனது கட்டுரைக்கு 'இந்தியா ருடே' சூட்டியிருந்த தலைப்பு இதுதான்;

**'இரத்தக்கறை படிந்த ஒப்பந்தம்'**

இந்தியாருடேயின் கட்டுரையில் இருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறேன்.

"...புலிகளின் பலத்தைப் பற்றியும், அவர்களிடமிருந்த ஆயுதங்கள் பற்றியும் இந்தியப் படையினர் தப்புக் கணக்குப்போட்டிருந்தனர்.

யாழ்நகரை நோக்கிச் செல்லும் ஒவ்வொரு பாதையிலும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. தெருக்களின் நடுவே குழிகளில் வெடிமருந்துகள் நிரம்பிய பீப்பாய்கள் புதைக்கப்பட்டிருந்தன. பொறி வெடிகளும் பரவலாகக் காணப்பட்டன.

ஒரு கிலோமீட்டர் தொலைவில் இருந்து இயக்கக்கூடிய வகையில் பொறிவெடிகள் வைக்கப்பட்டிருந்தன. புலிகளிடம் இருந்த நவீனரக ஆயுதங்களும் இந்தியப் படைக்கு அபாயம் ஏற்படுத்தின. புலிகளின் தாக்குதலால் ஐந்து ஹெலிகள் சேதமாகிவிட்டன.

பிரமாதமாகப் பிரசாரம் செய்யப்பட்டது போல புலிகள் போதுமானளவு ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை. பெருவாரியான ஆயுதங்களை யாழ் குடாநாடெங்கும் பாதுகாப்பாக வைத்திருந்தனர்.

**கட்டிடங்களில் புலிகள் பொறிவெடிகளை வைத்திருந்தனர். அவற்றை தூரத்தில் இருந்து இயக்கினர். வீதிவழியாக தொடராகச் சென்ற இந்தியப் படையினர் 29 பேர் பொறிவெடித் தாக்குதலால் பலியாகினர். அதேயளவு தொகையினர் படுகாயமடைந்தனர்.**

இதன் காரணமாக இப்பகுதிகளில் பயன்படுத்த ரி.72 ரக டாங்கிகளை அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டது. இரண்டாயிரம் அடிகளுக்கு கீழே புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுப்பதற்காக எம்.24 ரக, குண்டு துளைக்காத உருக்கு கவசம் போர்த்திய ஹெலிகள் அனுப்பப்பட்டன.

## பிரிகேடியர் பாராட்டு

கெரில்லா யுத்தத்தில் பயன்படுத்துதற்கேற்ற ஏ.கே. 47, டாங்கி எதிர்ப்பு ஆயுதமான ஆர்.பி.ஜி-7, 60 மில்லிமீட்டர் ஷெல்களை வீசக்கூடிய மோட்டார்கள் போன்றவை புலிகளிடம் ஏராளமாக இருந்தன.

தென்பிராந்தியக் கொமாண்டின் துணைப் பிரிவு கொமாண்டர் பிரிகேடியர் குல்வந்த்சிங் பின்வருமாறு கூறுகிறார்; **"இலக்குகளைக் குறிபார்த்துச்சுடுவதில் அவர்கள் அவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்காதபோதும், உண்மையில் வேங்கைகளைப் போலவே போரிட்டனர்."**

மார்தா படைப்பிரிவைச் சேர்ந்த 38 வயதான ராவ்சாஹேப் கபேத் கூறுகிறார்; "நாங்கள் எதிர்கொண்டு போரிடுவோர் பெரும்பாலும் சிறுவர்களே! இருப்பினும் அவர்களிடம் ஏராளமான ஆயுதங்கள் இருக்கின்றன. மழை பொழிவதுபோல சுட்டுக் கொண்டே இருக்கிறார்கள்."

## பெண் தாக்கினார்

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு வீட்டில் உயர் அதிகாரி ஒருவர் தேடுதலில் ஈடுபட்டார்.

அந்த வீட்டில் ஒரேயொரு இளம் பெண் மட்டுமே இருந்தார்.

தேடுதலை முடித்துக்கொண்டு அந்த உயர் அதிகாரி திரும்பியபோது ஒரு 'ஸ்ரென் கண்' அவருடைய முதுகைத் துளைத்தது.

**பத்து வயதுக்கு மேற்பட்ட ஆணோ பெண்ணோ எவரையும் நம்பமுடியவில்லை. சிறு பெண்கள் தங்கள் உடைகளுக்குள் துப்பாக்கிகளை மறைத்துவந்து சந்தர்ப்பம் பார்த்து சுட்டுவிட்டு ஓடுகின்றனர். இதனை மற்றாஸ் ரெஜிமெண்டைச் சேர்ந்த சிப்பாய் கோவிந்தன் கூறினார்.**

41வது இன்ஃபெண்டரி பிரிகேடைச் சேர்ந்த பிரிகேடியர் மஞ்சித் சிங் பின்வருமாறு கூறுகிறார்; **"அவர்கள் நன்கு உற்சாகமூட்டப்பட்டவர்களாகப் போரிடுகின்றனர். ஆனால் நாங்களோ ஒரு கையைப் பின்புறமாக கட்டிக்கொண்டு மற்றொரு கையினால் மட்டுமே போரிடவேண்டியுள்ளது. கட்டிடங்களையும், பொதுமக்களையும் பாதுகாக்க வேண்டும் என்பது எமக்கான கட்டளை."**

## மாத்தையா நிபந்தனை

பாக்கு நீரிணையில் கடற்படைக் கண்காணிப்புக்களையும் கடந்து தமிழ்நாட்டுக்கு புலிகளின் படகுகள் சென்று திரும்புகின்றன.

'இந்தியாருடே'க்கு பிரபாகரனும், மாத்தையாவும் பேட்டி அளிக்கும்போது, **"எமது கைவசம் போதுமான அளவுக்கு வெடிமருந்துகள் உள்ளன. ஆயுதங்கள் போதாதுதான். ஆனால் எமது விநியோக பாதைகளை துண்டித்து விட்டதாக அமைதிப்படை கருதுவது வெறும் கற்பனை"** என்றனர்.

அக்டோபர் 27ம் திகதி ('87) 'இந்தியா ருடே'க்கு மாத்தையா அளித்த பேட்டியில் போர் நிறுத்தம் தொடர்பாக மூன்று நிபந்தனைகளைக் கூறியுள்ளார்.

**1. இந்தியப் படையினர் உடனடியாக போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட வேண்டும்.**

**2. அக்டோபர் 10ம் திகதி தாம் நிலை கொண்டிருந்த இடங்களுக்கு இந்தியப் படை திரும்பிச் செல்ல வேண்டும்.**

**3. போர் நிறுத்தம் செய்யப்பட்ட பின்னரே ஆயுதங்கள் ஒப்படைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமுடியும்.**

இந்த நிபந்தனைகளை இந்தியா எந்நிலையிலும் ஏற்கப்போவதில்லை.

## நிவாரண நடவடிக்கைகள்

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களை தம் வசமாக்கும் பொருட்டு இந்திய அரசாங்கம் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டுசென்று குவித்துள்ளது.

உடைந்து தகர்ந்த கட்டிடங்களை கட்டியெழுப்ப துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது. இதன்மூலம் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கலாம்.

அரச மருத்துவமனையை செப்பனிடவும், இயங்கவைக்கவும் டாக்டர்கள், தாதிமார்கள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர். தெருக்களைத் திருத்த பொறியியலாளர்களும் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவற்றின் மூலமாக 'இடைக்கால நிர்வாகம்' இயங்க வாய்ப்புக்கிட்டும். பொலிஸ் படையொன்றை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நடவடிக்கைகளின் வெற்றி தோல்வி 'ஒப்பரேஷன் பவான்' நடவடிக்கையின்போது உயிரிழந்த, பாதிக்கப்பட்ட மக்களின் தொகையை வைத்தே தீர்மானிக்கப்படும்.

**யாழ்ப்பாணத்தில் 200 அப்பாவிகள் கொல்லப்பட்டனர். பல கட்டிடங்கள் இந்தியப் படையினரால் நிர்மூலமாக்கப்பட்டன. யாழ் மருத்துவமனை தாக்குதலுக்கு உள்ளானது என்று புலிகள் கூறுகின்றனர்.**

**யாழ் கத்தோலிக்க ஆலயம் பொது மக்களின் இழப்பை 100 எனக் கூறியது. யுத்தம் தொடங்கும்போது யாழ்ப்பாணத்தில் இருக்கும் சந்தர்ப்பம் கிடைத்த வெளிநாட்டுச் செய்தியாளர்கள் பல கதைகளைக் கூறுகின்றனர்.**


தங்களில் ஒரு படைவீரன் தாக்குண்டு வீழ்ந்தால் இந்தியப் படையினர் பொது மக்கள்மீது ஈவிரக்கம் இல்லாமல் தாக்குதல் நடத்தியதையும், பல தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதையும் குறிப்பிடுகின்றனர்.

இதனால் மக்கள் IPKF என்பதை INNOCENT PEOPLE KILLING FORCE (அப்பாவி மக்களை கொல்லும் படை) என்று வர்ணிக்கின்றனர்.

மேற்கண்டவையெல்லாம் 'இந்தியா ருடே' வெளியிட்ட கட்டுரையில் தெரிவிக்கப்பட்டவை.

'இந்தியா ருடே' கட்டுரையில் சில மிகைப்படுத்தல்களும் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

(தொடர்ந்து வரும்)



சாவகச்சேரி சந்தையில் பலியான பொதுமக்கள். அமைதி என்ன விலை?

# ஆயுதக்களையெடுப்பு :- 'பைத்தியம் தலைக்கேறிய பின் வைத்தியம்தேடும் முயற்சி'

அலசுவது- இராஜதந்திரி

பைத்தியம் நன்கு தலைக்கேறிய பின்னர் வைத்தியத்துக்காக அலைவதுபோலவே சந்திரிகா அரசாங்கத்தின் ஆயுதக்களையெடுப்பு நடவடிக்கை விளங்குகின்றது.

நாட்டில் இன்று ஆயுதக்கலாசாரம் நன்கு விரிவடைந்துள்ளது. அரசியல் புள்ளிகள் முதற்கொண்டு ஏறத்தாழ முக்கிய புள்ளிகள் அனைவருமே ஆயுதபாணிகளாக வலம்வருகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்தகால ஆட்சியில் ஒரு கொலைகார யுகமே நிலவியதென இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தெரிவித்துவருகின்றனர்.

கொலை செய்யப்பட்டோர், கைது செய்யப்பட்டு விசாரணைகளின்றி வைக்கப்பட்டோர், காணாமல் போனோர் என்று நீண்ட பட்டியல்கள் நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமிருந்து வெளிவந்தன.

இப்பட்டியல்கள் வெளிவர ஆயுதக்கலாசாரமே காரணமாகவிருந்தது.

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தற்போது இரு வருடங்களை ஆட்சி செய்து முடித்து விட்டுள்ளது. ஆயினும் கொலைசெய்யப்படுவோர், காணாமல் போவோரின் பட்டியல் தற்போது கூட வெளிவருவதையே அவதானிக்கமுடிகின்றது.

வடக்கே 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை முடிவடைந்ததைத் தொடர்ந்து அங்கே நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர சூட்டுச் சம்பவங்கள், கொலைச் சம்பவங்கள் என்று நாட்டில் ஆங்காங்கே வன்முறைகள் மலிந்து போயுள்ளன.

எனவே இலங்கையில் ஆயுதக் கலாசாரமென்பது நன்கு ஆழமாக வேரோடியிருக்கின்றது. அதனை முழுமையாக சந்திரிகா அரசினால் வேரறுக்கமுடியுமா? என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

ஆயுதக்களையெடுப்பென்று அரசு அறிவித்ததுமே அரசியல் கட்சிகள் பல, தமது பாதுகாப்புப்பற்றிக் குறிப்பிடலாயின. ஆயுதமின்றி ஒரு பாதுகாப்பான சூழ்நிலையில் தம்மால் இருக்கமுடியாது என்பதனையும் அந்த அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டியுமிருந்தன.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் யுத்தம் நீடித்துச் சென்று கொண்டிருக்கின்றது. அரசபடைகளும், எல்.ரி.ரி.ஈ. அமைப்பும் விதவிதமான ஆயுதங்கள், வெடிபொருட்களுடன் யுத்தத்தில் குதித்துள்ளன.

இலங்கையிலிருந்து வெளிவரும் நாளிதழ்களைப் புரட்டும்போது ஆயுதப்படையின் ஆட் சேர்ப்புக்காக பாரிய விளம்பரங்கள் காணப்படுகின்றன.

இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மை என்ற பிரச்சினைக்கு தீர்வைக் கொடுப்பதாக இராணுவ ஆட்சேர்ப்பு இருக்கின்றது.

இராணுவத்தில் ஆயிரமாயிரம் இளைஞர்கள் சேர்ந்து ஆயுதப் பயிற்சி பெறுகின்றனர். இதன் மூலம் நாடளாவிய ரீதியில் ஆயுதங்களின் பயன்பாடு, அவற்றின் தன்மைகள், அவற்றைக் கையாளும் விதம் என்பவற்றில் ஏறத்தாழ அனைத்து இளைஞர்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பரிச்சயமாகியிருப்பதையே அறிய முடிகின்றது.

இது தவிர நாட்டில் இடம்பெறும் கொள்ளை, கொலைகள், என்பவற்றின் பின்னணியில் ஆயுதப்படைகளிலிருந்து தப்பிவந்தோரும் பரவலாக ஈடுபட்டுள்ளதையும் காணமுடிகின்றது.

இவை அனைத்தையும் விரிவாக ஆராயும்போது, வன்முறைகளோடு கூடிய வாழ்க்கை முறையையே ஆயுதக் கலாசாரம் இலங்கையில் உண்டுபண்ணியிருப்பதைக் காணமுடிகின்றது.

ஆயுதங்களை வீடு, வீடாகத் தேடிக் கண்டு பிடிப்பதன் மூலமும், அரசியல்வாதிகளிடமிருந்து உருவி எடுப்பதன் மூலமும் ஆயுதக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடியாது.

அரசியல் நடவடிக்கைகளில் எப்போது வன்முறைகளற்ற சிந்தனை வெளிப்படுகின்றதோ, ஆட்சியதிகாரங்களிலிருப்போர் முற்று முழுதான ஜனநாயக அரசியலில் எப்போது நம்பிக்கை வைத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றைக் காணமுன்வருகிறார்களோ, அப்போதுதான் ஆயுதக் கலாசாரமென்பது இலங்கையில் முற்றுப்பெறும்.

பழைய மொந்தையிலிருந்த கள்ளு புதிய மொந்தையில் வார்க்கப்பட்டிருப்பது போலவே கடந்த ஐ.தே.க. ஆட்சியில் நிலவிய ஆயுதக்கலாசாரம், தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் பரவியுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரங்களில் குதித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா, வடக்கு-கிழக்கில் விரைவில் அமைதி ஏற்படுத்தப்படும், என்ற கோஷத்தை முன்வைத்துள்ளார். ஜனாதிபதி சந்திரிகா தமது முன்னைய தேர்தல் பிரசாரங்களின் போதும் வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படும்; சமாதானம் கொண்டுவரப்படும் என்றெல்லாம் கூறியிருந்தார்.

ஆனால் சந்திரிகா அரசு பதவிக்குவந்த கடந்த இருவருடகாலங்களில் அமைதி, சமாதானம் என்பவை எட்டாக் கனிகளாக இருப்பதையே காணமுடிகின்றது.

தலைநகர் முதற்கொண்டு நாட்டின் அனைத்துப் புறத்திலும் யுத்தப் பீதியின் தாக்கத்தை அவதானிக்க முடிகின்றது.

தலைநகர் கொழும்பில் அகலமான முக்கிய பாதைகள்கூட இரும்புத்தடுப்புகளாலும், மணல் மூடைகளாலும் அரண் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இதுதவிர நாட்டில் திரும்புமிடமெல்லாம் ஆயுதமேந்திய படையினரும், சோதனைச் சாவடிகளுமாக இருக்கின்றன.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிடும் அமைதி, சமாதானம் என்பவை 'மந்திரத்தால் மாங்காய் விழுத்தும்' கதையாகவே உள்ளன.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முழுமையாக எட்டுவதற்கு ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்குமிடையே ஒருமித்த கருத்து நிலவவேண்டும்.

ஆனால் அண்மைக்காலச் சம்பவங்களால் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையேயான முரண்பாடுகளில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இவ்விரிசலை நிவர்த்தி செய்வதில் இருதரப்பினரும் எவ்வளவு தூரம் உடன்பாடொன்றுக்கு வருவார்கள் என்பது முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

மறுபுறத்தே வடக்கு-கிழக்கில் ஆயுதப்போராட்ட சக்தியான எல்.ரி.ரி.ஈ. அமைப்புடன் தொடர்ச்சியாக மோதல்களையே கொண்டிருக்கின்ற நிலையில், அந்த அமைப்பு அரசியல் நீரோட்டத்தில் குதிக்குமா என்பதுவும் சந்தேகமாகவே இருக்கின்றது.

இனப்பிரச்சினைத்தீர்வுக்கு தென்னிலங்கையில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.வின் உடன்பாட்டைப் பெற வேண்டிய அதேசமயம், வடக்கு-கிழக்கில் எல்.ரி.ரி.ஈ. அமைப்புடனும் அரசியல் அணுகுமுறைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இந்த இரு விடயங்களிலும் பொ.ஜ.ஐ.மு. அரசு வெற்றிகாணும் பட்சத்திலேயே தீர்வு என்பதும் கைகூடும்.



தேர்தல் கால பிரசாரங்களும், அப்பிரசாரங்களின்போது வெளியாகும் வாக்குறுதிகளும் வெறுமனே வாக்கு வேட்டையைக் குறிவைத்தவையாகும்.

ஆனால் அச்சமோ, அவலமோ அற்ற உறுதியான அரசியலை நடத்துவதற்கு நேர்த்தியான, நேர்மையான அணுகுமுறைகளே தேவைப்படுகின்றன.

வார்த்தை ஜாலங்களாலும், பரஸ்பர கண்டனக் கணைகளாலும் தற்போதைய தேர்தல் பிரசாரம் களை கட்டியுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் எந்தவொரு கட்சியும் உள்ளூர் நிர்வாகங்களைக் கைப்பற்றலாம். ஆனால் நாட்டில் எந்தவொரு நிர்வாகமும் நேர்த்தியாக நடைபெறுவதற்கு முக்கிய அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

எனவே ஏற்கனவே பல்வேறு காரணங்களினாலும் பின் தள்ளப்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சி, உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் எத்தகைய வடிவத்தில் இருக்குமென்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

இனப்பிரச்சினை என்பது வெறுமனே அரசியல் சார்ந்ததாக மட்டும் காணப்படவில்லை. பொருளாதாரம், மற்றும் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் பலவற்றுக்கும் அடிகோலியதாகவே இனப்பிரச்சினை விளங்குகின்றது.

வடக்கு-கிழக்கில் நிலவிவரும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் சொல்லொணாத் துயரக் கதைகளைக் கொண்டுள்ளன.

புலம்பெயரும் போது ஆபத்துக்களில் சிக்கி உயிர்துறக்கும் நிலை ஏற்படுகிறது. அத்துடன் அகதிமுகாம்களில் உரியவற்றைப் பெறமுடியாது தவிக்கவேண்டியுள்ளது.

எனவே இலங்கையின் இனப்பிரச்சினை என்பது வெறுமனே அரசியல் சார்ந்தது மட்டுமல்ல.

அது இந்த நாட்டின் எதிர்காலம் சார்ந்தது. ஒட்டுமொத்தமான பாதுகாப்பு சார்ந்தது. அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகள் சார்ந்தது.

இந்நிலையில் இவற்றை ஆட்சியாளர்கள் உணராதவரை இலங்கைக்கு விமோசனம் என்பது இல்லை என்றே குறிப்பிடமுடியும்.

---

**தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் பிரபல நாளிதழ் 'தினமணி'. இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக வாசகர்களின் கருத்தைக் கேட்டிருந்தது. 'தினமணி' வாசகர்கள் எழுதிய கடிதங்களே இவை. நமது பிரச்சனை தொடர்பாக தமிழக மக்களின் நாடித்துடிப்பை இக் கடிதங்கள் நமக்கு உணர்த்தலாம்.**

# "கருணாநிதிக்கு ஆர்வம் இல்லை"

### பிரபாகரனுடன் பேச்சு

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விரைவாக முடிக்கமுடியாது என்று மத்திய அரசு கருதினால் புலிகள் மீதான தடையை விலக்கவேண்டும். தமிழகத் தலைவர்களின் உதவியோடு பிரபாகரனுடன் பேசவேண்டும்.

தனித்தமிழ் ஈழமா? ஒன்றுபட்ட இலங்கையா? என்பதைக் கண்டறிந்து அதைப் பெற்றுத்தரவேண்டும். சிங்கள அரசின் மீது மத்திய அரசு நிர்ப்பந்தம் செய்து அவர்களைப் பணியவைக்கவேண்டும். போரை நிறுத்தி இலங்கையில் தமிழ் இனப்படுகொலையை நிறுத்தவேண்டும்.

த.கி.இராசன், மதுரை.

### தி.மு.க.அரசின் கடமை

ஆப்பிரிக்க, பாலஸ்தீனப் போராட்டங்களைப் போலவே ஈழப்போராட்டத்தையும் மத்திய அரசு ஆதரிக்கவேண்டும். ராஜீவ் காந்தி கொலையையும், ஈழப்போராட்டத்தையும் வெவ்வேறு அம்சங்களாகப் பார்க்க வேண்டும். எனவே, விடுதலைப்புலிகள் மீதான தடையைத் திரும்பப் பெறுவதோடு, ஈழப்பிரச்சினை தீர ஆக்கப்பூர்வ நடைமுறைகளைத் தொடங்க வேண்டும், மாநில அரசானது அகதிகளை அவமானப்படுத்தாமல் மனிதாபிமான முறையில் தேவையான வசதிகளை செய்யவேண்டும்.

ஈழத் தமிழ் மக்களின் இன்னல்களைப் போக்கவும் அவர்களின் போராட்டத்திலுள்ள நியாயத்தை வலியுறுத்தவும் கடமைப்பட்டது தி.மு.க அரசு.

கோபு, சென்னை-11.

### முதல்வர் அணுகுமுறை

தமிழகத்தில் அரசால் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் சிலர் போதைப் பொருள் விற்பனையிலும், வேறு சில தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் கண்டனத்திற்கு உரியது. இதனால் தமிழகத்தில் சட்ட, ஒழுங்கு சீர்குலைய நேரிடும். தற்போது தமிழக முதல்வரின் அணுகுமுறையில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளதை வரவேற்கிறோம்.

எஸ்.டி.விஜய், தம்மம்பட்டி.

### இந்தியாவுக்குப் பாதகம்

இன்று உள்ள நிலைமைகளை வைத்துப் பார்க்கும் போது, நாம் இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவது தமது நாட்டுக்குப் பாதகமாக முடியும் என்பது எள்ளளவும் மறுக்க முடியாத உண்மை. ஆகவே இப் பிரச்சினையை அவர்களின் உள்நாட்டு விஷயமாக கருதி அவர்களின் முடிவுக்கு விட்டுவிட வேண்டியதுதான். வேறு வழியில்லை.

பி.சுந்தரமூர்த்தி, வண்ணாந்துறை.

### தீர்க்க முடியும்

வங்கதேசம் விடுதலை பெற இந்தியா பல வகைகளில் உதவியது. ஆனால் இலங்கையில் கொல்லப்படுவது தமிழர்கள். அவர்கள் கேட்பது தனிநாடு. மக்கள் தொகை முப்பது லட்சத்துக்கும் அதிகம். மனிதாபிமான அடிப்படையில் ஈழத்தமிழர் தலைவர்களுடனும், இலங்கை அரசுத் தலைவர்களுடனும் இந்திய அரசு கலந்து பேசி இப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். தமிழக அரசு அஞ்சும் காரணம் அனைவருக்கும் தெரியும். அதனால் இந்தியப் பேரரசு முயன்றால், இலங்கையில் இனப்பிரச்சினையை உறுதியாகத் தீர்க்க முடியும்.

ஆறுமுகம், சென்னை-11.

### தனி ஈழம் தேவையில்லை

'தமிழ் ஈழமே எங்கள் இறுதி லட்சியம்' என்பது ஈழத் தமிழ் மக்களின் ஏகோபித்த முடிவல்ல. இது தன் முனைப்புள்ள சிலரது முடிவேயாகும். இதனால் மிகுதியும் பாதிக்கப்படுவது பல லட்சம் தமிழ்மக்களே. மக்கள் நலன் கருதி 'திராவிட நாடு' கொள்கையை அண்ணா கைவிட்டது போல ஈழத் தமிழ் மக்களின் நலன் கருதி விடுதலைப் புலிகள் தனி ஈழம் கோரிக்கையைக் கைவிட்டு ஆயுதத்தைக் கீழே போடவேண்டும்.

மே.அ.கிருஷ்ணன், ஈரோடு-3.

### புலிகளின் தவறுகள்

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா செய்த நற்பணிகளையெல்லாம் விடுதலைப் புலிகள் சீரழித்துள்ளார்கள். மற்ற தலைவர்களையெல்லாம் திட்டம் தீட்டி கொன்று குவித்து உள்ளார்கள். ஆகவே இலங்கை விஷயத்தில் இந்திய அரசும், மாநில அரசும் தலையிடாமல் அவர்கள் நாட்டு விஷயம் என்று விட்டு விடுவதே மிகவும் நல்லது.

மேலும் இங்கு உள்நாட்டு விவகாரங்களைக் குறிப்பாக மதவெறி, காவிரித் தண்ணீர் போன்ற பிரச்சினைகளையே தீர்க்க முடியாத இவர்கள் இலங்கைப் பிரச்சினையில் தலையிடாமல் இருப்பதே நல்லது.

கோ.வேணுகோபால், வேலூர்.

### கச்சத் தீவு


தமிழீழத்தில் அமைதிக்கான பேச்சு வார்த்தை நடத்த வசதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதித்திருக்கும் தடையை இந்திய அரசு விலக்கிக் கொள்ள வேண்டும். தடையை நீக்க இந்திய அரசைத் தமிழக - புதுவை அரசுகள் வற்புறுத்த வேண்டும். கச்சத்தீவின் மீது தமிழகத்தின் உரிமையை நிலை நாட்ட வேண்டும்.

தமிழீழத்தை ஆதரித்துப் பேச, எழுத, தமிழக மக்களுக்கு உரிமை அளிக்க வேண்டும். அவர்களை தேசியப் பாதுகாப்புச் சட்டம் போன்ற கறுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யக் கூடாது.

த.சோ.பிரபாகரன், விழுப்புரம்.

### பேரவையில் தீர்மானம்

ஈழத் தமிழரை ஆதரித்து பந்த் நடத்திய கருணாநிதி, ஆட்சிக்கு வந்த பிறகு இப்பிரச்சனையில் ஆர்வம் காட்டவில்லை. இனி காட்டவும் மாட்டார் என்பது அவருடைய சமீபகாலப் பேச்சிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது.



இந்தியாவின் தலையீடு இல்லாமல் அங்கு அமைதி ஏற்படச் சாத்தியமில்லை. இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்ற தீர்மானத்தைச் சட்டப் பேரவையில் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். நமது மீனவர்கள் நடுக்கடலில் தாக்கப்படுவதால் கச்சத்தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்ய வலியுறுத்த வேண்டும்.

ஆர்.எம்.சாமி, அவலூர்பேட்டை.

### கடத்தல் கூடாது

விடுதலைப் புலிகளுக்காக இந்தியாவிலிருந்து பெட்ரோல், டீசல், மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களைக் கடத்துவதையும் இந்திய மண்ணில் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதையும் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

கச்சத்தீவில் பாரதத்திற்குள்ள உரிமையை நிலைநாட்டி நமது மீனவர்கள் தொடர்ந்து மீன் பிடிக்க மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.

எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக ஈழப்பிரச்சின்னையை முடிவுக்குக் கொண்டு வந்து இந்தியாவில் உள்ள இலங்கை அகதி மக்களைத் திருப்பி அனுப்ப ஆவன செய்வது மிக முக்கியம்.

ஜி.குமார், திருச்சிராப்பள்ளி.

### சுயநிர்ணய உரிமை

ஈழத்தமிழினம் ஒரு தனித்தேசிய இனம் என்பதை அங்கீகரித்து, ஈழமக்களுக்கு சுய நிர்யண உரிமையை வழங்குவதே நிரந்தரத் தீர்வாகும். வெறும் அதிகாரப் பரவல் என்ற பசப்பு வார்த்தை சிங்களப் பேரினவாதத்தைத் தக்க வைத்துக் கொள்ளவே!

வேலு.கலைச்செல்வி, ஈரோடு-11.

### மக்கள் நலனே முக்கியம்

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலையைக் காரணம் காட்டி நாம் வேண்டுமானால் விடுதலைப்புலிகளை எதிர்க்கலாம். ஆனால் ஈழ மக்கள் விரும்பும் அமைதியான, சுதந்திரக் காற்றை, அவர்கள்தான் வாங்கிக் கொடுக்க முடியும் என்றால் மக்களின் நன்மையை மனத்தில் கொண்டு நாம் ஈழத்தை ஆதரித்தே தீர வேண்டும்.

மு.கதிரவன், திருச்சி.

# கொள்ளை ராணி

# பூலான் தேவி

34

தருவது ரசிகன்

**கடந்த வாரம்**

பூலான்தேவிக்கு
புதிய சீருடை கிடைக்கிறது
விக்கிரம் மல்லாவிடம்
துப்பாக்கியால் சுடும் பயிற்சி
பெறுகிறாள் பூலான்.
மல்லா பூலானுக்கு
பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கும்போது
மாது சிங்கும் இரண்டுபேரும்
ஓடிவருகிறார்கள்...

இனி......

மாதுசிங்கும் அவனோடு மேலும் இரண்டு பேரும் ஓடிவருவதைக் கண்டதும் மல்லாவும் அவர்களை நோக்கி வேகமாகச் சென்றான்.

நானும் மல்லாவின் பின்னால் ஓட்டமும் நடையுமாகச் சென்றேன்.

மாது சிங்கின் வாயிலிருந்து வந்த செய்தி என்னைத் தூக்கிவாரிப்போட்டது.

"மல்லாஜி! பொலிஸ் வருகிறது. யாரோ ஒரு வேசிமகன் தகவல் கொடுத்துவிட்டான். நாம் உடனே இந்த இடத்தைக் காலி செய்தாக வேண்டும்.." என்றான் மாது சிங்.

மாது சிங்கின் குரலில் தெரிந்தது பயமா அல்லது பதட்டமா? என்று தெரியவில்லை.

விக்கிரம் மல்லாவிடமும் பரபரப்புத் தொற்றிக்கொண்டது.

"உடனே நம் ஆட்களை உஷார்படுத்து. முக்கியமான பொருட்களை மட்டும் மூட்டை கட்டச் சொல்.. ஓடு.." என்று கட்டளை பிறப்பித்தபடியே மல்லாவும் முகாமை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான்.

நானும் மல்லாவின் பின்னால் ஓடினேன். நாங்கள் முகாமைச் சென்றடைவதற்கிடையில், முகாமிலிருந்த ஆட்களுக்கும் செய்தி தெரிந்துவிட்டது.

மாது சிங் அவர்களிடமும் சொல்லிவிட்டுத்தான் மல்லாவைத் தேடி ஓடிவந்திருக்கிறான்.

நாம் தங்கியிருந்த பகுதி மலைக்குன்றுகள் சூழ்ந்த பகுதியாகும். மலைக் குன்றுகளின் உச்சியில் நின்று பார்த்தால் நீண்ட தூரம்வரை அவதானிக்க முடியும்.

எமது ஆட்களில் சிலர் மலைக்குன்றுகளின் உச்சிகளில் காவலுக்கு இருப்பார்கள். அப்பகுதிகளில் ஆள் நடமாட்டம் இருந்தால் கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு கவனிப்பார்கள்.

பொலிசார் வந்துகொண்டிருப்பதையும் அப்படித்தான் எங்கள் ஆட்களில் ஒருவன் கண்டுவிட்டான். அதனால்தான் முன்கூட்டியே நாம் தயாராகி தப்பிச் செல்ல வாய்ப்புக் கிடைக்கிறது.

ஆனாலும் நமக்கு அவகாசம் போதாது. எந்த நேரத்திலும் அவர்கள் வந்துவிடலாம்.

நோட்டம் பார்த்தவனை விக்கிரம் மல்லா அழைத்தான். "எத்தனைபேர் இருப்பார்கள்?" என்று கேட்டான்.

"பதினைந்து இருபதுபேர் இருக்கலாம். துப்பாக்கிகளும், பைனாக்குலர்களும் வைத்திருக்கிறார்கள். ஒன்றிரண்டு வேட்டை நாய்களும் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்றான் அவன். தகவல் சொல்ல வேகமாக ஓடிவந்திருப்பான் போல இருக்கிறது, மூச்சுவாங்கிக் கொண்டு பேசினான்.

எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அந்தப் பரபரப்பின் மத்தியில் மல்லாவும், நான் ஒருத்தி அங்கிருப்பதையே மறந்துவிட்டான் போலிருந்தது.

நான் முகாமுக்குள் போய் என் பொருட்கள் என்று எடுத்துக்கொள்ள என்னதான் இருக்கிறது?

ஒரு பழைய சேலை, இனி அது உபயோகப்படாது. வேறென்ன இருக்கிறது? துப்பாக்கியை மட்டும் கொண்டு சென்றால் போதும்.

எல்லோரும் புறப்பட ஆயத்தமான போது மல்லாவின் குரல் அமைதியைக் கிழித்துக்கொண்டு எழுந்தது.

"நான்குபேர் மட்டும் இங்கிருந்து தப்பிச் செல்லுங்கள். மாதுசிங்! நீ பூலானையும் உனக்கு உதவியாக மூன்று பேரையும் அழைத்துக் கொண்டு செல்! அஸ்டாவுக்கு பக்கத்திலுள்ள எங்காவது இருங்கள். நாங்கள் வந்து சேருகிறோம்!" என்றான் மல்லா.

அப்படியானால் மல்லா எங்களுடன் வரப்போவதில்லையா? எனக்குப் பகீர் என்றது.

மாது சிங்தான் கேட்டான்: "ஏன் மல்லாஜி, நீங்கள் வரவில்லையா?"

"பாடம் புகட்டவேண்டும் மாது! தவிர, சண்டைபோட்டும் நீண்டநாளாகிறது. அதனால் மோதிப் பார்க்கலாம் என்று முடிவு செய்துவிட்டேன். ஒருவேளை அவர்கள் பலம் உயருவதாகத் தெரிந்தால் சண்டையை நிறுத்திவிட்டு விலகிக் கொள்ளலாம்!"

"வேண்டாம் மல்லாஜி. பிறிதொரு நாள் பார்த்துக் கொள்ளலாம். அவர்களாக நம்மைத் தேடி வருவதால் ஜாக்கிரதையாகத்தான் இருப்பார்கள்..." என்று தயங்கித் தயங்கிப் பேசினான் மாதுசிங்.

"இல்லை மாது சிங், புலியேயானாலும் நம் கோட்டைக்குள் வந்து மாட்டிக்கொண்டால் அது பூனைதான். புரிகிறதா? பூனைதான்! நாம் இன்று ஓடத் தொடங்கினால் அவர்கள் துரத்திக்கொண்டே இருப்பார்கள். மல்லாவின் கோஷ்டி கோழைகள் என்று நினைத்துவிடுவார்கள். அந்த நினைப்பே அவர்களுக்கு ஆயிரம் மடங்கு பலமாகிவிடும். அதனால்தான் அடிக்கப் போகிறேன். அடி சரியாகப்பட்டது என்று வைத்துக்கொள், நாம் இருக்கும் பக்கம் தலைவைத்தே படுக்க மாட்டார்கள்!"

"அப்படியானால் நானும் உங்கள் பக்கத்தில் நின்று சண்டைபோட அனுமதி தாருங்கள் மல்லாஜி! என்னைமட்டும் போகச் சொல்லாதீர்கள்!" மாது சிங் மன்றாடுவதுபோலக் கேட்டான்.

அப்போதுதான் மல்லாவின் பார்வை என் மீது திரும்பியது.

'நானும் போகமாட்டேன் மல்லா! உன்னைவிட்டுப் போக மாட்டேன் மல்லா!' என்று சொல்லத்தான் நினைத்தேன். தொண்டைக் குழியில் முள் சிக்கியது மாதிரி வார்த்தைகளும் சிக்கிக் கொண்டன.

"மாது! பூலான் தேவி இன்னமும் சண்டை போடத் தயாராகவில்லை. அவளை ஏன் வீணாக இதில் மாட்டச் செய்யவேண்டும்? அதுதான் பூலானைப் பாதுகாப்பாகக் கொண்டுசெல்ல உன்னை அனுப்புகிறேன்!" என்றான் மல்லா.

மல்லா சொன்னதைக் கேட்டதும் ஒரு புறம் மகிழ்ச்சியாக இருந்தது. என்மீது அக்கறையும், அன்பும் இருந்ததால்தானே அப்படியொரு ஏற்பாடு செய்திருக்கிறான்.

ஆனாலும் மல்லாவைப் பிரிந்துபோவதை நினைத்தால்தான் நெஞ்சு அடைப்பதுமாதிரி துக்கம் பீறிட்டது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னேன்! "நான் போக மாட்டேன்! என்ன நடந்தாலும் சரி நான் இங்குதான் இருப்பேன், சத்தியமாகப் போக மாட்டேன்." படபடவென்று சொல்லிவிட்டு மல்லாவின் முகத்தை நோக்கினேன்.

என்னை வியப்பாகப் பார்த்துக்கொண்டு ஏதோ யோசித்தான். அதற்கிடையே மலைக் குன்றுகளின் மேலே இருந்து பொலிசாரின் நடமாட்டத்தைக் கவனிப்பதும், மல்லாவிடம் வந்து தகவல் சொல்வதுமாக எங்கள் ஆட்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

யாருடைய முகத்திலும் பயச்சாயல் ஒரு துளிகூடத் தெரியவில்லை. அதனைப் பார்த்த பின்னர்தான் எனக்கும் துணிச்சல் வந்தது.

மல்லா என்ன நினைத்தானோ தெரியவில்லை. "அப்படியானால் சரி, பூலான் இங்கேயே இருக்கட்டும்" என்றான். மாது சிங் என்னைத் திரும்பிப் பார்த்த பார்வையாலேயே நன்றி சொன்னான்.

மாது சிங் நல்லவன், இவன் தன் தலைவனுக்கு உண்மையான விசுவாசி. தலைவன் ஆபத்தில் இருக்கிறான் என்னும்போது தான் மட்டும் தப்பிக்கொள்ள மறுத்தானே! இவன்தான் உண்மையானவன். மாது சிங் என் மரியாதைக்குரியவனாகிவிட்டான்.

பொலிசாரை- பாக்கு வெட்டிக்குள் சிக்கிக் கொண்ட பாக்கு மாதிரி- மடக்கிப் போட ஒரு திட்டம் போட்டான் மல்லா.

மல்லா தலைமையில் ஒரு குழுவும், மாது சிங், பரத் சிங் ஆகியோர் தலைமையில் ஒவ்வொரு குழுக்களுமாக மொத்தம் மூன்று குழுக்களாக ஆட்களைப் பிரித்தான் மல்லா.

மாது சிங் தலைமையிலான குழு நாம் இப்போது இருக்கும் மலைக் குன்றில் இருந்து பொலிசாரை நோக்கிச் சுட்டுக் கொண்டிருக்க வேண்டும். பொலிசாரும் பதிலுக்குச் சுட்டுக்கொண்டே வருவார்கள்.

தப்பியோடுவதுபோல பாசாங்கு செய்தபடி மாது சிங் குழுவினர் பொலிஸ் கோஷ்டியை மலைக் குன்றின் மையப்பகுதிக்கு இழுத்துச் செல்ல வேண்டும்.

அந்த நேரம் மலைக் குன்றின் இடது பக்கத்தில் இருந்து பாரத் சிங் குழு பொலிஸ் கோஷ்டியை நோக்கித் தாக்கத் தொடங்கும். பொலிஸ் கோஷ்டியின் கவனம் அப் பக்கம் நோக்கித் திரும்பும்போது வலதுபக்கம் இருந்து மல்லாவின் குழு பொலிஸ் கோஷ்டிமீது பாய்ந்து தாக்கும்.

மல்லா தன் திட்டத்தை மளமளவென்று சொல்லிவிட்டு, அதே வேகத்தில் தன் குழுவுடன் புறப்பட்டான்.

மூன்று குழுக்களாகப் பிரித்தபோது என்னை மட்டும் எந்தக் குழுவிலும் மல்லா சேர்க்கவில்லை. எனக்கு வெட்கமாக இருந்தது. நான் ஒரு சுமைமாதிரி அவர்கள் மத்தியில் இருப்பதுபோல கூச்சமாகவும், சங்கடமாகவும் இருந்தது.

புறப்படும்போது சட்டென்று என்னை நோக்கினான் மல்லா. "நீ என்னோடு வா. என் அருகிலேயே நின்றுகொள். நான் சொல்வதை மட்டும்செய், சரியா?" என்றான் மல்லா. மகிழ்ச்சியோடு தலையசைத்தேன்.

மலைப்பாதை என்பதால் பொலிஸ் கோஷ்டி மெல்ல மெல்ல நிதானமாக- ஜாக்கிரதையாகத்தான் மேலே ஏறி வந்துகொண்டிருந்தது. அதனால் மலைக் குன்றுகளின் மறைவில் நாங்கள் நீண்டநேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று.

காத்திருந்தபோது, எனக்குள் அந்தக் கேள்வி எழுந்தது. இங்கே வரப்போகும் பொலிஸ் கோஷ்டியில் என்னைக் கடித்த அந்தப் பொலிஸ்காரர்களும் இருப்பார்களா?

நினைத்தபோதே உச்சியில் சுள்ளென்று கோபம் ஏறியது. உடம்பெல்லாம் இரத்தம் கொதிப்போடு பாய்வது மாதிரி தகிப்பாக இருந்தது.

எங்கும் ஒரே பயங்கர அமைதி.

நான் மல்லாவின் காதருகே, அவனுக்கு மட்டும் கேட்கும்படியாகச் சொன்னேன்: "நானும் சுட வேண்டும். நானும் சுட வேண்டும். சுடட்டுமா?"

மல்லா தன் உதட்டில் விரல் வைத்து சைகை காட்டினான். பின்னர் சைகையாலேயே சொன்னான்; சுடலாம். சுடு!.

திடீரென்று துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. மலைக்குன்றுகள்.. அவற்றை எதிரொலித்து பயங்கரத்தை உணர்த்தத் தொடங்கின.

மாது சிங் ஆட்கள் நாங்கள் பதுங்கியிருந்த மலைக்குன்றுகளைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் உண்மையாகவே ஓடுவதாக நினைத்துக்கொண்டு பொலிஸ் கோஷ்டி துரத்திக்கொண்டு வந்தது.

இப்போது எமக்கு அவர்களை தெளிவாகப் பார்க்க முடிந்தது. அந்த நாய்களையும்தான்.

காதுகள் பெரிதாகி முன்புறமாக மடங்கி இருந்த பெரிய பெரிய நாய்கள்- சங்கிலியால் கட்டி பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவை வேட்டுச் சத்தத்துக்கு மத்தியில் ஓங்கிக் குரைத்துக் கொண்டிருந்தன.

துப்பாக்கிகள் சீறிக் கொண்டிருந்தன. எனக்கு படபடப்பாக இருந்தது.

"தலையைத் தூக்காதே" என்று காதருகே கிசு கிசுப்பாகச் சொன்னான் மல்லா. நான் குப்புறப்படுத்துக் கிடந்தேன். அப்படித்தான் படுத்திருக்க வேண்டும் என்று மல்லா சொல்லிவிட்டான்.

எங்களால் பொலிஸ் கோஷ்டியைப் பார்க்க முடியும். அவர்களால் எங்களைப் பார்க்க முடியாது.

பரத் சிங் இடதுபுறமிருந்து தாக்குதலைத் தொடுத்தபின்னர்தான் நாங்கள் தாக்க வேண்டும்.

ஆனால் திட்டமிட்டதற்கு மாறாக அந்தச் சம்பவம் நடந்துவிட்டது.

எங்கள் குழுவில் யாரோ ஒருவன் தலையை வெளியே நீட்டிவிட்டான்.

அவனைக் கண்டுவிட்ட நாய் ஒன்று நாம் கிடந்த திசை நோக்கி பாய்ந்துவர முயற்சித்தபடி குரைத்தது.

நாயின் சங்கிலியைப் பிடித்துக் கொண்டிருந்த பொலிஸ்காரன், நாய் குரைத்த திசையில் சந்தேகமாகப் பார்ப்பதும், திடீரென்று சங்கிலியில் இருந்து நாயை விடுவிப்பதும் எமக்குத் தெரிந்துவிட்டது.

நாம் பதுங்கியிருந்த திசைநோக்கி நாக்கைத் தொங்கப்போட்டபடி அந்த நாய் ஒரே பாய்சலாகப் பாய்ந்து வந்து கொண்டிருந்தது.

பொலிஸ் கோஷ்டியின் கவனமும் நாய் இருந்த திசை நோக்கித் திரும்பியது.

இனித்தான் விபரீதம்.

**(தொடர்ந்து வரும்)**



பூலான்

# பூலான் விடுத்த எச்சரிக்கை!

பூலான் தேவியைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டும் பொலிசாரால் அவரைக் கைது செய்ய முடியவில்லை.

'பொலிசார் தேடினார்கள், பூலான் தேவி கிடைக்கவில்லை' என்று செய்திகள் வெளியாகின. இறுதியாக தன்னைக் கைது செய்யும் உத்தரவுக்கு உயர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கினார் பூலான். அதன்பின்னர் பத்திரிகையாளர்கள் முன்னால் தோன்றி அசத்தினார்.



பத்திரிகையாளர்கள் முன்பாக உற்சாகமாகப் பூலான்

உண்மையில் பொலிசார் நினைத்திருந்தால் பூலானை பிடித்திருக்கலாம். நீதிமன்ற உத்தரவுக்காக பூலானைத் தேடுவதுபோல போக்குக் காட்டினார்களே தவிர தீவிரமாகத் தேடவில்லை.

தனது தனிப்பட்ட பாதுகாவலர்கள் மற்றும் ஆதரவாளர்கள் புடைசூழ படுஹாயாக இருந்தாராம் பூலான். அவர் இருக்கும் இடம் நன்கு தெரிந்தும் பொலிசார் அவரை நெருங்கவில்லையாம்.

ஒரு முக்கிய அமைச்சர் பூலானுக்கு மிக நெருக்கமானவர். அவர் மூலமாக அரசாங்க மேல் மட்டத்திற்கு பூலான் தெரிவித்த செய்தி ரொம்பக் காரமாக இருந்ததாம்.

"என்னை மீண்டும் பழைய பாதையில் செல்ல வைக்கப்போகிறீர்களா? அப்படி நான் செல்ல வேண்டி ஏற்பட்டால், அரசாங்கம்தான் என்னை ஏமாற்றியது. சரணடையச் சொல்லிவிட்டு முதுகில் குத்திவிட்டது என்று உலகமே காறி உமிழும். இனிமேல் யாருமே சரணடையமாட்டார்கள். மீண்டும் சம்பல் பள்ளத்தாக்கில் வாழ்வது எனக்கொன்றும் கஷ்டமான காரியமல்ல!" என்பதுதான் பூலான் விடுத்த செய்தி.

பூலானின் செய்தியைக் கேட்டு மேலிடம் ஆடிப்போய்விட்டது. அதன்பின்னர்தான் பொலிசாருக்கு சில இரகசிய வாய்மூல உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாம். 'பூலானைக் கைதுசெய்யவேண்டாம். தேடுவதுபோல போக்குக் காட்டினால் போதும்' என்பதுதான் உத்தரவின் சாராம்சம்.

ஆக, தன்னைக் கைது செய்யுமாறு உத்தரவிட்ட நீதிபதிக்கே தண்ணிகாட்டிவிட்டார் பூலான். பிடிவாத குணம் இன்னமும் போகவில்லை.

# டயானா போட்ட உடை என்றால்...

இங்கிலாந்து முன்னாள் இளவரசி டயானாவுக்கு காதல் விவகாரங்களில் மூழ்கி மூழ்கி அலுத்துவிட்டது.

அதனால் இப்போது சமூக சேவையில் இறங்கியிருக்கிறார் அம்மணி. 'எய்ட்ஸ்' எதிர்ப்பு பிரசாரத்தில் குதித்திருக்கிறார். 'எய்ட்ஸ்' நோயாளிகளுக்கு உதவும் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்.

தனது திட்டங்களுக்குப் பணம் திரட்ட தனது உடைகளையே தியாகம் செய்யத் துணிந்தார் டயானா. அதாகப்பட்டது- தன்னிடம் குவிந்து கிடக்கும் உடைகளில் ஒரு பகுதியை ஏலம் விட்டுள்ளார் டயானா.

டயானாவுக்கு இந்த அருமையான யோசனையைச் சொன்னது அவர் மகன் வில்லியம்ஸ்தானாம். 14 வயது மகனான வில்லியம்ஸ் மூளையில் இப்படியொரு ஐடியா தோன்றியதையிட்டு டயானாவுக்கு கொள்ளை மகிழ்ச்சி.



தனது திருமண உடை உட்பட கிட்டத்தட்ட 500 உடைகளை ஏலம் விட்டார் டயானா. அவரிடம் ஆயிரக்கணக்கான கவுன்கள் இருக்கின்றன. அதில் 500 கவுன்களை ஏலம் விட்டார். அதிலும் 60 கவுன்கள் மிக விலை உயர்ந்தவை.

மற்றொரு சமாச்சாரம் என்னவெனில், கவுன்களில் இரவு நேர ஆடைகளும் இருந்தனவாம். டயானாவின் இரவு ஆடை என்றாலே அதனை வாங்க பலத்த போட்டி இருக்கும்தானே! அதுதான் அவற்றையும் ஏலம் விட்டாராம் டயானா.

எதிர்பார்த்தபடியே பல கோடீஸ்வரர்களும், பெரும் புள்ளிகளும் டயானாவின் இரவு உடைகளை வாங்க முண்டியடித்தனராம்.

தங்கள் மனைவிகளுக்காக வாங்கிச் சென்றனர் என்றா நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை. மனைவிமாருக்குத் தெரியாமல் அந்தரங்கமாக வைத்துக் கொள்ளத்தான் வாங்கிச் சென்றார்களாம். டயானாவின் உடைகளுடன் இருப்பது டயானாவே பக்கத்தில் இருப்பது மாதிரி இருக்குமாம்.



இதற்கிடையே டயானா தன் கவுன்களை விற்று லாபம் சம்பாதித்துவிட்டதாக ஒரு இலண்டன் பத்திரிகை செய்தி வெளியிட்டு விட்டது. காதல் கிசு கிசுக்கள் என்றால் கவலையே படாத டயானா, மேற்படி செய்தியால் வெகுண்டெழுந்துவிட்டார். குறிப்பிட்ட பத்திரிகை மீது மான நஷ்ட வழக்குத் தொடுத்துள்ளார்.

# புரட்டி எடுத்த மனைவி

சுவிற்ஸர்லாந்தில் உள்ள ஜெனிவாவில் நடைபெற்றுள்ள ஒரு சுவாரசியமான சமாச்சாரம் இது.



அவர் ஒரு வழக்கறிஞர். வயது 47. ஒரு நாள் உடம்பு முழுக்கக் காயத்தோடு பொலிசில் புகார் கொடுத்தார். காயம் எப்படி ஏற்பட்டது? அவரது மனைவி செமர்த்தியாக அடித்துத் துவைத்துவிட்டாராம்.

பொலிசார் விசாரித்தனர். "அடிக்கடி வழக்கறிஞர் அலறும் சத்தம் கேட்பதுண்டு. அவரது மனைவி அடிக்கடி வாட்டி எடுப்பது வழக்கம்தான். ஆரம்பத்தில் கொஞ்சம் கவலைப்பட்டோம். பின்னர் எங்களுக்கு சகஜமாகிவிட்டது" என்று அயலவர்கள் சாட்சி சொல்லியிருக்கிறார்கள்.

அடியோடு நிறுத்திக்கொண்டால் பரவாயில்லை. மன்னிப்புக் கேட்டு குறிப்புப் புத்தகத்தில் எழுதும்படியும் மிரட்டுவாராம். மன்னிப்புக் கேட்டு எழுதிய குறிப்புப் புத்தகங்கள் கட்டுக் கட்டாகக் கைப்பற்றப்பட்டன.

அனைத்தையும் ஆற அமர விசாரித்த நீதிபதி அந்த மனைவிக்கு ஒன்றரையாண்டு சிறைத் தண்டனை வழங்கியிருக்கிறார்.


வேடிக்கை என்ன தெரியுமோ? சிறையில் உள்ள மனைவியை தினமும் சென்று பார்வையிடுவதுடன் காதல் சொட்டும் கடிதங்களையும் எழுதிக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வருகிறாராம் அந்தக் கணவன்.

# மொட்டை ராசி

பாகிஸ்தான் தேர்தலில் இம்ரான்கான் படுதோல்வி அடைந்தது தெரிந்த விடயம்தான். தெரியாத மொட்டை சமாச்சாரம் ஒன்று:

இம்ரான்கானுக்கு ஆண்குழந்தை பிறந்ததல்லவா? தேர்தல் பரபரப்பு, முன்னாள் காதலியின் தலைவலியான புகார்கள் மத்தியிலும் தன் மகனுக்கு மொட்டை போட்டாராம் இம்ரான்கான்.

இம்ரான்கானின் குழந்தைக்குப் பெயர் சுலைமான். இஸ்லாமிய முறைப்படி நாவிதரை வீட்டுக்கு அழைத்து மொட்டை போட்டாராம் இம்ரான்கான்.



இச்செய்தியை தற்போது ஜோக்காகச் சொல்கிறார்கள், இம்ரானின் அரசியல் போட்டியாளர்கள்.

"இம்ரான் மகனுக்கு மொட்டை போட்டார்; பாகிஸ்தான் மக்கள் இம்ரானுக்கு மொட்டை போட்டு விட்டார்கள்!" என்கிறார்கள்.

## மணமகள் தேவை



பார்த்தாலே தெரிகிறதல்லவா, மாமிச மலையேதான்! எடை அறிய ஆவலா? அதிகம் இல்லை, ஒரு 545 கிலோ! (யப்பா!)

எந்தக் கட்டிலும் இவரை தாங்க முடியாமல் இன்ப வேதனையில்... மன்னிக்கவும் துன்ப வேதனையில் உடைந்து போய்விடுவதால், ஸ்பெஷலாக சொல்லிச் செய்திருக்கிறாராம். இவருக்குக் கட்டில் செய்து கொடுத்தோர் தங்கள் கட்டிலின் உறுதிக்கு உத்தரவாதமாகச் சொல்ல இவரது பெயரைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

இவருக்கு திருமணமாகிவிட்டது. கல்யாணமான புதிதில் கட்டழகனாகத்தான் இருந்தாராம். பின்னர்தான் இப்படி குண்டழகனாகிவிட்டார். மனைவியால் தாங்கமுடியவில்லை சோகத்தை. விவாகரத்து வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

'எதையும் தாங்கும் இதயம் கொண்ட மணமகள் கிடைத்தால் வசதியாக இருக்கும்' என்று தேடிக்கொண்டிருக்கிறார் அண்ணர். பொலிவான அண்ணரின் பெயர் வால்ரெல் வாட்சன். ஏன், வாட்டசாட்டன் என்று வைத்திருக்கலாமே.

## சுட்டிக் குழந்தை

↓ படத்தில் இருக்கும் குழந்தையைப் பாருங்கள். பால்மா விளம்பரக்காரர்கள் கண்டால் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள்.

பிறந்து 18 மாதங்கள்தான் ஆகின்றன. கொஞ்சவிரும்புவோர் கஷ்டப்பட்டுத்தான் தூக்கிக்கொஞ்ச வேண்டும். எடை 30.8 கிலோ (68 இறாத்தல்) உயரம்: 0.9 மீட்டர். (3 அடி).



பிறந்தவுடன் 10 இறாத்தலும் 6 அவுன்சும் எடை இருந்ததாம். இப்போது 68 இறாத்தலுக்கு வந்துவிட்டது. டாக்டர்கள் வியந்து போயுள்ளனர். குழந்தையின் பெயர் ஷாக்ஸ்றென் கேர்ற். அம்மா பெயர் லூரி. அமெரிக்கா நியூயோர்க் நகரைச் சேர்ந்தவர்கள்.

கண்ணுக்கு நிறைவாக குழந்தை பிறந்தால் மகிழ்ச்சிதான். ஆனால் இந்தக் கொழு கொழு குழந்தையைக் காண இரண்டு கண் சத்தியமாகப் போதாது.

**தகவல் பெட்டி**

## இருவர்

இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் டுனி நகரில் உள்ள தனியார் மருத்துமனை ஒன்றில் பிறந்த குழந்தைதான் இது.

தலை இரண்டு, மூன்று கைகள், இரண்டு கால்கள் ஆகியவற்றுடன் பிறந்துள்ளது. உடம்பு ஒன்றுதான். அதனால் தனித்தனியாக பிரிக்கவும் முடியாது. வழக்கமாக இப்படிப் பிறக்கும் குழந்தை விரைவாக இறந்துவிடும். இக் குழந்தை மட்டும் டாக்டர்களின் கவனிப்புக் காரணமாக ஒருவாரகாலம் உயிரோடிருக்கிறது. இத் தகவலை எழுதும்வரை குழந்தை ஆரோக்கியமாக இருக்கிறது. இனி என்னாகுமோ?!



## முடியரசி



## பலமறிய ஆவல்

↓ சினிமாப் படங்களில் கதாநாயகியை உப்பு மூட்டை, புளி மூட்டை மாதிரியெல்லாம் கதாநாயகன் தூக்கிக் கொண்டு ஆடுவதை பாடுவதை (வாயசைப்பதை) பார்த்திருப்பீர்கள். (பாரமே இல்லையா? எப்படித் தூக்க முடிகிறது என்று வியந்த சில ஆண்கள் தங்கள் காதலிகளை, மனைவிமாரை தூக்க முயற்சித்து இடுப்பில் சுளுக்கு ஏற்பட்ட சம்பவங்கள் படு இரகசியம்)

படத்தில் வாட்ட சாட்டமான அழகியை பற்களால் தூக்கிப் பதம் பார்க்கிறார் மன்னிக்கவும்... பலம் பார்க்கிறார் ஒருவர். பெரியக்காவின் (ஒரு மரியாதை தான்)

எடை 220 இறாத்தல். அந்த எடையிருந்தும் அசத்தலாக தூக்கி பல்லால் வித்தை காட்டிக் கொண்டிருப்பவரும் சாதாரண ஆளல்ல. ஈக்வடோர் நாட்டு பொலிஸ் அதிகாரிதான் அவர். பெயர் ஏஞ்சள் றூபியோ!

இதற்கு முன்னர் விமானம் ஒன்றை பல்லால் இழுத்தாராம். மூன்று கார்களை ஒன்றாகக் கட்டி பல்லால் இழுத்தும் சாதனை செய்தாராம். அதன்பின்னர் தான் பாவையை தூக்கிப் பார்க்கத் துணிந்தாராம். இவர்தான் உண்மையான ஹீரோ!



← மேல் நாடுகளில் நாளொரு ஸ்டைல் வந்து கொண்டிருக்கிறது. பாடசாலை மாணவ மாணவிகளையும் புதுப் புது மோகங்கள் தொற்றிக் கொள்ளுகின்றன. படத்தில் உள்ள பெண்ணின் தலையில் கொம்புகளாக முளைத்திருப்பது போல காட்சியளிப்பது புதுவித முடி அலங்காரம். 'பங்க்' ஸ்ரைலில் ஒரு ரகம். சரி, தெரு வழியே எங்கே செல்கிறார் இந்த சேல்விழியாள்? பாடசாலைக்குச் செல்கிறாள். மாணவியின் முடிகண்டு மெய் மறந்து நிற்பவர் ஜெர்மன் பொலிஸ்காரர். முடிக்கு கொம் பழகு?!

## குஷ்புவும் - ஹீராவும்

விஜய் நடித்த 'சந்திரலேகா', ஜெயராம் நடித்த 'நிலா' ஆகிய படங்களை இயக்கியவர் நம்பிராஜ்.

'நடிப்புச் சொல்லிக்கொடுப்பதைவிட நாமே நடித்தால் என்ன?' என்ற யோசனை வந்தது நம்பிராஜுக்கு. அதனால் 'ருக்குமணி' படத்தில் கதாநாயகனாக நடித்து இயக்கி வருகிறார்.

நம்பிராஜுக்கு தன்னம்பிக்கை அதிகம்தான் இல்லாவிட்டால் 'ருக்குமணி' படம் வெளியாக முன்னரே மற்றொரு படத்திலும் கதாநாயகனாக நடிக்கும் துணிச்சல் வருமா?

நம்பிராஜ் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் 'கெட்டிமேளம்'. நம்பிராஜின் ஜோடியாக நடிப்பவர் குஷ்பு. நம்பிராஜ் இரு வேடங்களில் நடிக்கப் போகிறார். குஷ்பு வெகுளித்தனமான பெண்ணாக நடிக்கப்போகிறார். மற்றொரு கதாநாயகி ஹீரா. மணிவண்ணன், செந்தில், பாண்டு ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இசை: தேவா. பாடல்கள்: பழனி பாரதி.

## கஜோலின் கனவு

'மின்சாரக் கனவு' படத்தின் சூப்பர் வெற்றியால் கஜோலை நாடி பல தமிழ்ப்பட வாய்ப்புக்கள் சென்றுள்ளன. 'பின்னர் பார்க்கலாம்' என்று மறுத்துவிட்டாராம் கஜோல். ஹிந்தியில் நம்பர் வன் இடம்தான் கஜோலின் கனவு.

இதற்கிடையே கஜோல் பற்றி மற்றொரு செய்தி: கஜோலுக்கு இப்போது 22 வயது. பதினான்கு வயதில் நடிக்க வந்தவர். அதனால் 24 வயதில் திரையுலகைவிட்டு ஓய்வு பெறலாமா என்று யோசிக்கிறாராம்.

## சொதப்பல் மன்னன்

மள மளவென்று புதிய படங்களில் ஒப்பந்தமாகிவிட்டு திருதிருவென்று முழிக்கிறார் அஜித்குமார். எந்தப் படத்தில் எந்தத் தேதியில் நடித்துக் கொடுப்பது என்று தீர்மானிக்க முடியாமல் திண்டாடுகிறார்.

மணிரத்னம் தயாரிக்க வஸந்த் இயக்கும் 'நேருக்கு நேர்' படத்தில் இரண்டு ஹீரோக்கள். ஒருவர் அஜித், மற்றவர் விஜய்.

படப்பிடிப்புக்குச் செல்லாமல் இழுத்தடித்தார் அஜித்குமார். தயாரிப்பாளருக்கும், இயக்குநருக்கும் பொறுக்க முடியவில்லை. பொங்கி எழுந்தனர். இப்போது அஜித்குமார் படத்திலிருந்து தூக்கப்பட்டுவிட்டார். 'காதல் மன்னன்' என்ற பட்டத்தோடு 'சொதப்பல் மன்னன்' பட்டமும் அஜித்குமாருக்குச் சேர்ந்துவிட்டது.

## மலேசியாவில் படப்பிடிப்பு

'அருணாச்சலம்' படத்தின் இரண்டு பாடல் காட்சிகள் மலேசியாவில் படமாக்கப்பட உள்ளன.

படப்பிடிப்புக்காக ரஜினி உட்பட ஒரு பெரிய பட்டாளமே மலேசியாவுக்குச் செல்கிறது. சித்திரைப் புத்தாண்டுக்கு ரஜினி ரசிகர்களுக்கு சர்க்கரைப் பொங்கலாகத் தயாராகிறது அருணாச்சலம்.

எதிர்பார்க்கப்பட்ட தொகைக்கு மேலாகவே செலவிட்டு படத்தை தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். லேட்டஸ்ட் செய்தி 'அருணாச்சலம்' படத்தில் சில காட்சிகளில் இரட்டை வேடத்தில் வருகிறாராம் ரஜினி.

## தேவி கொடு...

ஸ்ரீதேவி-போனி க...
செய்தி ஒன்று.

'ரூபகி ராணி சோ...
படத்தை ஸ்ரீதேவிக்கா...
செலவில் எடுத்தவர் ...
மகா தோல்வி. அதனா...
போனி கபூர். இத்த...
முன்னரே வெளியிட்டி...
கிடைத்திருப்பது புது...

ஸ்ரீதேவியின் அம்...
வில் ஒப்பரேஷன் நடந்...
ஒப்பரேஷன் என்று வ...
தால் ஸ்ரீதேவியின் அம்...
தஷ்ட ஈடாகக் கிடை...
கோடியில் 40 கோடி...
கொடுத்தாராம் ஸ்ரீதே...

போனி கபூருடன் ...
நட்பு இருந்தாலும் ...
வருடமாகத்தான் நெரு...



ராம்கி-குஷ்பு
படம் தாலி புதுசு

## கலரும் தந்திரம்

பிரபு தேவா-அப்பாஸ் இணைந்து நடிக்கும் கதாநாயகிகளில் ஒருவர் சிம்ரன். சினிமா கொடி நாட்டத் தேவையான பயிற்சிகளுடன்தான் ...

படப்பிடிப்பில் மட்டுமல்லாமல், படப்பிடி... வரும் பிரபல தயாரிப்பாளர்கள், பிரபல நடிகர்க... தாராளமாகப் பழகுகிறாராம்.

சிம்ரனுடன் பேசும் நடிகர்கள் பாடுதா... வேறொன்றுமில்லை. சட்டையின் மேல் பட்... விட்டுக்கொண்டு ப்ரியாகவே பழகுகிறாராம் ... படம் மூலம் பிரபலமாவதைவிட தெளிவு கழி... மூலமாக திரையுலக வட்டாரத்தில் பிரபலமாக...

விஷயமறிந்த பல தயாரிப்பாளர்கள் சிம்... பேசிக்கொண்டிருக்க படையெடுக்கிறார்களா... பாதகம் இல்லாவிட்டால் சரிதான் என்கி... படப்பிடிப்புக் குழுவினர்.

## கமல் கேட்ட தொகை

கமலஹாசனை வைத்து 'இந்தியன்' படத்தை தயாரித்தவர் ஏ.எம்.ரத்னம். அவருக்காக குறைந்த ஊதியத்தில் நடித்துக் கொடுத்தவர் கமல். அடுத்ததாக ரஜினியிடம் போய் தன் படத்தில் நடிக்குமாறு கேட்டாராம் ரத்னம். ரஜினி மறுத்துவிட்டார் மறுபடியும் கமலிடம் ஓடினார் ரத்னம். ரஜினியிடம் ரத்னம் போன விஷயம் கமல் காதுகளுக்கு எட்டியிருந்தது.

"நடிக்கத் தயார், ஆனால் சம்பளம் ஐந்து கோடி" என்றாராம் கமல். நன்றி மறந்த ரத்னம் கலங்கிப்போனாராம்.



## மனிஷாவின் மாற்றம்

நடிகை மனிஷா கொய்ராலாவிற்கு பாகிஸ்தானிலும் எக்கச்சக்கமான வரவேற்பு. மனிஷா மனிஷா என்று அவர் இளமை முன்பு உருகிப் போகிறார்களாம் பாகிஸ்தான் ரசிகர்கள்.

பாகிஸ்தான் தயாரிப்பாளர் ஒருவர் மனிஷாவை ஒப்பந்தம் செய்துள்ளார். ஹிந்தியில் தற்போது வாங்குவதைவிட இரு மடங்கு அதிகமாக வாங்கிக் கொண்டு ஓ.கே. பண்ணியிருக்கிறாராம் மனிஷா.

மனிஷா பற்றி மற்றொரு உபரித் தகவல்: இப்போதெல்லாம் ஆண் நண்பர்களுடன் இணைந்து மது போன்ற உற்சாக சமாச்சாரங்கள் பாவிப்பதைத் தவிர்த்துவருகிறார் மனிஷா. போதையேறிவிட்டால் ஆண்நண்பர்களின் தொல்லை தாங்கமுடியாமல் போய்விடுகிறதாம். அதனைத் தவிர்க்கவே அந்த முன்யோசனை.

## திரையில் எம்.எஸ்.வி

அஜித்குமார் நடிக்கும் காதல் மன்னன் படத்தில் ஒரு வி.ஐ.பியும் நடிக்கிறார். அவர்தான் மெல்லிசை மன்னர் விசுவநாதன். முதன் முதலாக எம்.எஸ்.விசுவநாதன் நடிக்கும் படமும் இதுதான். நீண்டகாலமாக திரையுலகில் ஊறிக்கிடந்தும்கூட இப்போதுதான் திரையில் முகம் காட்ட சம்மதித்திருக்கிறார் எம்.எஸ்.வி.

உண்மையில் படத்தில் நடிப்பதற்காகத்தான் முதலில் விரும்பினாராம் எம்.எஸ்.வி. பின்னர் பிரபல இசையமைப்பாளராகிவிட்டதால் நடிக்கும் ஆசையை மூட்டை கட்டிப் போட்டுவிட்டார். அந்த மூட்டையை அவிழ்க்க வைத்துவிட்டார் படத்தின் இயக்குநர் சரண்.

## புதுக் கூட்டணி

சத்யராஜின் 'வள்ளல்' படப்பிடிப்பு முடிவடைந்துவிட்டது. அதனையடுத்து 'பெரிய மனுஷன்'. அதன் பின்னர் 'பகைவன்' படம் வெளிவருமாம்.

'பகைவன்' படத்தில் அஜித்குமார்தான் இன்னொரு ஹீரோ. இளைஞர்களுடன் நடிப்பதால் புதுமையான விஷயங்களை அறிந்து கொள்ளலாம் என்கிறார் சத்யராஜ். 'பகைவன்' படத்தில் சத்யராஜுடன் இணைந்து நகைச்சுவைக் காட்சிகளில் தோன்றுகிறார் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார். கவுண்டமணி, மணிவண்ணன் ஆகியோரின் பின்னர் சத்யராஜுக்கு பொருத்தமான நகைச்சுவை கூட்டணி கே.எஸ். ரவிக்குமார்தானாம்.

## பலே சுவாதி

மார்க்கெட் ஓரளவு உள்ள ஹீரோக்களை நேரடியாகச் சந்தித்து வாய்ப்புக் கேட்கிறார் சுவாதி.

நீலகிரி ஹோட்டலில் தங்கியிருந்த அப்பாஸை அங்கு சென்று தனியாக சந்தித்த ஒரே நடிகை சுவாதிதான். இருவரும் விடிய விடிய பேசிக் கொண்டிருந்தனராம். ஏற்கனவே அஜித்குமாருடன் காதலாக இருந்து தோல்வி கண்டவர் சுவாதி. இப்போது காதல் எல்லாம் கிடையாது. சான்ஸ் மட்டும்தான் நோக்கம். பலே ஆளப்பா.

## தாயின் புல...

ஜெய்சங்கர் நடித்த பட...
சொத்து'. அப்படத்தை தூர...
வில் ஒளிபரப்பினார்கள். ...
இரவு 12 மணிக்கு காண்பி...
பவர் பார்த்திருக்க மாட்ட...
'எங்கள் பாட்டன் சொ...
ஒளிபரப்பியதால் மீனாவி...
மல்லிகா கடுப்பில் ...
படத்தில் இசகு பிச...
தில் ராஜமல்லி...
கிறாராம்.



பாக்யராஜ்-நக்மா
படம் வேட்டிய மடிச்சுக்கட்டு



சரத்குமார்
படம்-இந்தியன் எக்ஸ்பிரஸ்
சிவரஞ்சனி

கார்த்திக்-...
படம் சி...

## ரஜினி பாராட்டு

'அருணாச்சலம்' படத்தின் ஆறு பாடல்களும் அருமையாக வந்துள்ளனதாம். பாடல்களைக் கேட்ட ரஜினி குஷியாகிவிட்டார். தேவாவை முதுகில் தட்டிக் கொடுத்து பாராட்டு மழையில் நனைத்துவிட்டாராம்.

ரஜினியின் பாராட்டு என்றால் சும்மாவா? குளிர்ந்துபோன தேவா நேரடியாக நகைக் கடைக்கு ஓடினாராம். 84 மோதிரங்களை வாங்கிவந்தாராம். மோதிரங்கள் யாருக்கு? எல்லாமும் அவரது இசைக்குழுவில் உள்ளவர்களுக்குத்தான். தேவா எளிமையானவர் மட்டுமல்ல இனிமையானவரும்தான். அவரது வெற்றியின் இரகசியமும் அதுதான்.

## வருகிறது இராணுவம்

மோகன்லால்-ப்ரியாராமன் ஜோடியாக நடித்து மலையாளத்தில் வெற்றி பெற்ற படம் ஒன்று தமிழில் மொழி மாற்றப்பட்டுள்ளது. 'இராணுவம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மோகன்லாலின் மற்றொரு ஜோடியாக வினிதா நடிக்கிறார். கவர்ச்சி விருந்தை தாராளமாக படைத்திருக்கிறார்.

## 'பூமணமே வா'

ராமராஜன்- சங்கீதா ஜோடியாக நடித்து வெற்றிபெற்ற படம் 'நம்ம ஊரு ராசா'. அப்படத்தை தயாரித்த நளினி சினி ஆட்ஸ் நிறுவனம் அடுத்துத் தயாரிக்கும் படம் 'பூமணமே வா'. இப்படத்திலும் ராமராஜன், சங்கீதா ஜோடியாக நடிக்கின்றனர்.

நளினி சினி ஆட்ஸ் என்பது ராமராஜனின் சொந்தப்பட நிறுவனம். ராமராஜனின் மனைவிதான் நடிகை நளினி. படத்தை இயக்குவதும் ராமராஜன்தான்.

மணிவண்ணன், விசித்ரா, பெரியார்தாசன், சந்தானபாரதி, சந்திரசேகர் ஆகியோர் நடிக்கின்றனர். இசை: சிற்பி. பாடல்கள்: பழனிபாரதி, கங்கை அமரன்.

# மினி சினி

* முதன் முறையாக நடிகர் திலகம் சிவாஜி கணேசனை 'ஒன்ஸ்மோர்' படத்தின் மூலம் இயக்கி வரும் எஸ்.ஏ.சந்திரசேகரன், நடிகர் திலகம் நடித்த 'உத்தமன்', 'வசந்தமாளிகை' ஆகிய படங்களுக்கு உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர்.

* 'கிளிப்பேச்சுக் கேட்க வா' படத்திற்குப் பின்னர் மலையாளப்பட இயக்குநர் பாசில் இயக்கும் தமிழ்ப் படத்தில் விஜய் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இதில் இவருக்கு ஜோடியாக (பேபி) ஷாலினி நடிக்கிறார்.

* சத்யராஜ்-அம்பாஸ் நடிக்கும் 'உன்னை விட மாட்டேன்' படத்தில் சத்யராஜிற்கு ஜோடியாக ரம்பா நடிப்பதாக இருந்தது. இப்போது ரம்பாவை நீக்கி விட்டு மீனாவை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

* 'மகாபிரபு', 'செல்வா' ஆகிய படங்களை இயக்கிய ஏ.வெங்கடேசன் அடுத்து அரவிந்தசாமி நாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இப்படம் தமிழ்-தெலுங்கு-இந்தி ஆகிய மொழிகளில் உருவாகிறது.

* குருதனபால் இயக்கும் 'பெரியமனுஷன்' மூலம் மறுபடி நடிக்க வந்திருக்கும் அம்பிகா, 'ராசாமகன்' என்ற படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இந்தப் படத்தில் 'கல்கி' சுருதி கதாநாயகியாக நடிக்கிறார்.

* 'காதல் தேசம்' வெற்றியடைந்தபோதிலும் இயக்குநர் கதிர் அடுத்த படத்தைச் சிறிது இடைவெளிக்குப் பின் இயக்குகிறார். 'தாஜ்மஹால்' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தை கதிரே சொந்தமாகத் தயாரிக்கிறார்.

* ராஜ்கிரண் நடிக்கும் 'பொன்னு வௌஞ்ச பூமி' படத்தைத் தொடர்ந்து ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரிக்கும் படத்தில் பாண்டியராஜன் கதாநாயகனாக நடிக்கிறார். இந்தப்படத்தை 'டாட்டா பிர்லா' ரங்கநாதன் இயக்குகிறார்.

* கரண் கதாநாயகனாக அறிமுகமாகும் ஆலயம் படத்தில் ஊர்வசியின் தம்பி இரண்டாவது கதாநாயகனாக நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக அஞ்சு அரவிந்த் நடிக்கிறார்.

* 'இந்தியன்' படத்தைத் தயாரித்த ஏ.எம்.ரத்னம், நாகார்ஜுன்-தபு நடித்த தெலுங்குப் படமொன்றை தமிழில் மொழி மாற்றம் செய்கிறார். இப்படத்திற்கு 'கல்யாணம் பண்ணிக்கிறேன்' என்று பெயரிட்டுள்ளார்.

* தமிழில் பிஸியாக கதாநாயகன், வில்லன் என நடித்து வரும் பிரகாஷ்ராஜ் முதன் முதலாக இந்திப் படமொன்றில் நடிக்கிறார். இந்தப் படத்தில் அமிதாப்பச்சன்-விஜயசாந்தி ஜோடியாக நடிக்கின்றனர்.

# 'பிரிவோம் சந்திப்போம்'

## சரத் மனைவி பேட்டி

சரத்-நக்மா காதல் விவகாரத்தால் சரத்தின் மனைவியும், இரண்டு பிள்ளைகளும் தனியாகச் சென்றுவிட்டனர். ஆனாலும் சரத்குமாரின் மனைவி சாயாவுக்கு ஒரு நம்பிக்கை. "சரத் மீண்டும் நம்மிடம் வருவார். ஒருவேளை அப்படி நடக்காவிட்டாலும் சரத்தும் நானும் நல்ல நண்பர்களாகவே இருப்போம்" என்று பேட்டியொன்றில் சொல்லியுள்ளார்.

சாயாவின் பேட்டியிலிருந்து சில பகுதிகள் மட்டும்.

**கே:- வருகிற செய்திகளில் எந்தளவுக்கு உண்மை இருக்கிறது?**

**சாயா:-** சரத் போன்ற ஒரு ஆணிடம் பெண்களுக்குக் கவர்ச்சியும், காதலும் உண்டாவது இயல்புதான். அதேபோல ஒரே சமயத்தில் நூறு பெண்களைக் காதலிக்கிற உரிமையும் அவருக்கு இருக்கிறது. அதுவும் ஒரு நடிகருக்கு பெண்களின் நட்பு இருப்பது தவிர்க்க முடியாததும்கூட. ஆனால் சரத் விஷயத்தில் இதெல்லாம் வெறும் வதந்தியாக இருந்துவிட வேண்டும் என்பதுதான் என் ஆசை.

**கே:- பிரிந்து வந்து வாழும் அளவுக்கு என்ன நடந்தது?**

**சாயா:-** பழைய விஷயங்களைப் பேச வேண்டாமே. இதைப் பிரிவு என்று சொல்ல முடியாது. இல்லறத்தில் சின்ன இடைவேளை. இந்த இடைவேளை சரத்துக்கு மட்டுமல்ல எனக்கும்கூட தேவைதான் என்னு தோணுது. குழந்தைகளும் அப்பா நீண்ட நாட்களுக்கு வெளியூருக்கு ஷூட்டிங் போயிருப்பதாகத்தான் ஃபீல் பண்ணுறாங்க.

**கே:- சினி ஃபீல்டைப் பொறுத்தவரை விவாகரத்து சாதாரணமாகிவிட்டது. உங்கள் சொந்த வாழ்க்கையிலும் நடந்துவிடும் என்று அச்சம் இருக்கிறதா?**

**சாயா:-** இந்த இடைவெளியில் கூட நான் அவரை மனதாரக் காதலிக்கிறேன். சரத் எனக்கு நண்பராக அறிமுகமாகித்தான் கணவரானார். பிருத்திவிராஜ் பாணியில் என்னைக் கடத்திக் கொண்டு போய்த்தான் கல்யாணம் செய்தார். அது பிரச்சனைக்கு நடுவே நடந்த திருமணம். நானும் அவரும் என்றைக்குமே நல்ல நண்பர்கள்.

ஒரு வேளை ஏதாவது தவிர்க்க முடியாத காரணங்களால் எங்கள் உறவில் விரிசல் வந்தாலும் சரத் என்றைக்கும் நான் மதிக்கும் நண்பராகத்தான் இருப்பார்.

# மீனா இளமை

'பாரதி கண்ணம்மா' படத்தின் வெற்றியால் மீனாவுக்கு சுக்ரதிசை. 'வர வர இளமை திரும்புகிறது' என்று பத்திரிகைகள் அனைத்தும் பாராட்டியிருப்பதும் மகா சந்தோசம்.

இனிமேல் நல்ல வேடங்கள் கிடைத்தால் மட்டுமே நடிப்பேன் என்கிறார். வித்தியாசம் வித்தியாசமாகத் திறமை காட்டவேண்டுமாம். 'பாசமுள்ள பாண்டியரே' படத்தில் ராஜ்கிரண் ஜோடியாக, குறிசொல்லும் பெண் வேடத்தில் நடிக்கிறார் மீனா.




பிரபு-மந்த்ரா
படம் தேடினேன் வந்தது

# நினைத்தது நடக்கவில்லை

மணிரத்னம் இயக்கத்தில் வெளியாகிப் படுதோல்வி கண்டுள்ள படம் இருவர். படத்தின் தோல்வியால் பாதிக்கப் பட்டிருப்பவர்களும் இருவர். ஒருவர் மோகன்லால், இன்னொருவர் ஐஸ்வர்யாராய்.

'இருவர்' ஹிட்டானால் தமிழில் ஒரு ரவுண்ட் வரலாம் என்று நினைத்தார் மோகன்லால். தனது முதல் படம் என்பதால் படத்தின் வெற்றி திருப்பமாக அமையும் என்று நம்பியிருந்தார் உலக அழகி ஐஸ்வர்யாராய். பல இயக்குநர்கள் ஹிந்தியில் நடிக்க அழைத்தபோதும் மணிரத்னத்துக்கு முன்னுரிமை கொடுத்தார் ஐஸ்வர்யாராய். அவரது எதிர்பார்ப்பு மண்ணாகிவிட்டது!

ஏமாற்றத்தை வெளியே காட்டாமல் 'திரில்' படமாவது கைக்கொடுக்காதா என்று ஏங்கிக்கொண்டிருக்கிறார் ஐஸ்வர்யாராய்.

மற்றொரு உலக அழகியான 'சுஷ்மிதா சென்' ஹிந்தியில் நடித்து வெளியான படம் ஹிட்டாகிவிட்டது. அதுதான் ஐஸ்வர்யாராய்க்கு ஜீரணிக்க முடியாத சோகம்.

எனினும் 'இருவர்' படம்தான் படுதோல்வியே தவிர ஐஸ்வர்யாராயின் நடிப்பும், கவர்ச்சியான எடுப்புக்களும், துடிப்புக்களும் அமோகமான பாராட்டைப் பெற்றுள்ளன.

# கமலியில் சரவணன்

மார்க்கெட் சரியாக இல்லையென்றாலும் மனம் தளராமல் இருக்கிறார் சரவணன். டிம்பிள், ரசிகா ஆகியோர் ஜோடிகளாக நடிக்க சரவணன் நடிக்கும் புதிய படத்திற்கு 'கமலி' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

மணிவண்ணன், தலைவாசல் விஜய், ஜனகராஜ், ஜோதிமீனா உட்படப் பலர் நடிக்கின்றனர். திரைக்கதை, இயக்கம் எஸ். ஜீவா. இசை: தேவா. பாடல்கள்: பழனிபாரதி, அகத்தியன், காளிதாசன். ஒளிப்பதிவு ஏ. சபாபதி. மார்ச் 10ல் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

# பரம ரசிகர்

நடிகர் பிரபுவின் படுக்கையறையில் ஒரு நடிகையின் போட்டோ தொங்குகிறது. உடனே நீங்கள் எந்த நடிகையை நினைப்பீர்கள் என்று தெரியும். ஆனால் பிரபுவின் படுக்கை அறையில் இருப்பவர் நடிகை ஸ்ரீதேவி. அவரது பரம ரசிகராம் பிரபு. ஸ்ரீதேவிக்கு திருமண வாழ்த்தும் சொன்னாராம் பிரபு.




# பூதக் கண்ணாடி

நடிகை சுகன்யாவுக்கு அடிமேல் அடி. அத்தனையும் தாங்கிக் கொண்டு மலையாளப் படவுலகப் பக்கம் போயிருக்கிறார்.

தமிழ்ப் பட உலகில் சுகன்யாவோடு நெருங்கிப் பழகப் பயப்படுகிறார்களாம். ஆளும் கட்சியை பகைத்துக்கொள்ளக் கூடாது என்ற எச்சரிக்கையாம்.

சுகன்யா வீட்டே கதியென்று கிடந்த ஒரு நடிகர்கூட சமீபத்தில் சுகன்யாவை நேரில் கண்டபோது காணாததுபோலச் சென்றாராம். 'இதுதான் படவுலகம்' என்று வெறுப்புடன் அழாக்குறையாகச் சொன்னாராம் சுகன்யா.

மலையாளப் படவுலகில் தி.மு.க. பயம் கிடையாது, எல்லோரும் நன்றாகப் பழகுகிறார்களாம்.

மம்முட்டியுடன் மலையாளப் படம் ஒன்றில் ஜோடியாக நடிக்கிறார் சுகன்யா. படத்தின் பெயர்: பூதக்கண்ணாடி. அதனால் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்.



# "வேலைக்குச் சென்றாலும் வீட்டோடு இருந்தாலும் அதிகம் உழைப்பவள் பெண்!"

'**ஆ**ண்களே கடும் உழைப்பாளர்கள்!' இதுதான் ஒரு பொதுவான நம்பிக்கை- நீண்ட நெடுங்காலமாக நிலவி வந்த நம்பிக்கை.

இந்த ஒரு நம்பிக்கையிலேயே ஆண் ஆதிக்கம் வேரூன்றியது. கணவன் வேலைக்குச் சென்று பணம் சம்பாதித்துக் குடும்பம் நடத்துவதற்கான பொருளாதாரம் தேடும் நிலையில் இருப்பதனால் குடும்பத்தில் ஆணுக்கே முதல் மரியாதை தரப்படுகிறது. சுருக்கமாகச் சொல்லப்போனால் ஒரு குடும்பத்தின் சர்வாதிகாரி ஆண்தான் என்ற கருத்தே நிலைபெற்றுவிட்டது.

'பெண் வீட்டில் முடங்கிக் கிடக்க வேண்டியவள்' என்ற நிலை மாறி படித்துப் பட்டம் பெற்று உயர்ந்த தொழில் பார்த்து, கூடுதலான ஊதியம் பெற்றவளானாலும், வீட்டில் அவள் கணவனுடைய அந்தஸ்தைப் பெற முடியாது.

கணவனும் மனைவியும் வேலைக்குச் சென்று பொருளீட்டினாலும் கணவனுக்கு அவ்வீட்டிலிருக்கும் செல்வாக்கு மனைவிக்குக் கிடைப்பதில்லை.

காலையில் வேளைக்கு எழுந்து பாத்திரங்களைக் கழுவி, பிள்ளைகளைக் குளிப்பாட்டி, கணவனுக்கு வேண்டிய அலுவல்களைக் கவனித்து, காலைக்கு வேண்டிய உணவுகளை மட்டுமல்லாமல் பகலுக்கும் வேண்டிய உணவு வகைகளைத் தயாரித்து, பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பி, கணவனையும் காரியாலயத்துக்கு அனுப்பி வைத்துவிட்டுத் தானும் தன் பணிக்குச் செல்ல வேண்டும்.

கணவன் தன் காரியாலயத்தில் எத்தகைய பணியிலிருந்தபோதிலும் அவர் வீடு திரும்பியதும், அவரேதான் அளப்பரிய பணி புரிந்து விட்டு களைப்புடன் வீடு திரும்புவதாகத்தான் கணக்கெடுக்கப்படும். அதே நேரத்தில், தனது பணிமனையில் மனைவியானவள் மிகக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். உடலும் உள்ளமும் சோர்வடைந்து வீடு திரும்புவாள்.

அலுவலகத்திலிருக்கும் போதும் வீட்டு நிலமையே அவள் உள்மனத்தை உறுத்திக் கொண்டிருக்கும். அலுவலகப் பணிகள் முடிவடைந்ததும் அங்கிங்கு அலைமோதாமல், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு விரைவாக நெருக்கியடித்துக் கொண்டு பஸ்ஸில் இடம்பிடித்து, களைத்துப்போய் வீடு வந்து சேர்வாள்.

மனைவி அலுவலகம் சென்றாலும் வீட்டோடு இருந்தாலும் அவளும் கடுமையாக உழைக்க வேண்டித்தான் இருக்கிறது என்பது ஏனோ மறைக்கப்பட்டு விடுகிறது.

குழந்தைக்கு நோய் கண்டு மருத்துவரைப் பார்க்கப் போவதானாலும் அவள்தான் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு ஓட வேண்டும். பிள்ளைகளுக்குப் பாடம் சொலித் தருவதானாலும் அவள்தான் செய்ய வேண்டும். பிள்ளைகளின் உடை களையும் கணவனுடைய உடைகளையும்கூட அவளே தான் துவைக்க வேண்டும்.

**இந்தியாவின் முதல்தர எழுத்தாளர்களில் ஒருவர் ஷோபா டே. பெண்ணாக இருந்தபோதும் விமர்சனங்களுக்கு அஞ்சாமல் துணிச்சலாக எழுதுபவர். எத்தனை பெரிய உண்மையை மிக எளிமையாக விளக்குகிறார் பாருங்கள்......**



ஷோபா டே

தொட்டிலில் படுத்துத் தூங்கும் பிள்ளை வீரிட்டு அழும். சமையலறையில் பாத்திரங்களை அலம்பிக் கொண்டிருப்பாள் அவள். பத்திரிகை படித்துக் கொண்டிருப்பவருக்குப் பற்றிக் கொண்டு வரும் கோபம். "ஏய்! உன்னைத்தான்! இது கத்துறகத்து உன் காதுகளுக்குக் கேட்கல்லியா? பகல் முழுவதும் பாடுபட்டுவிட்டு கொஞ்ச நேரம் நிம்மதியாக இருக்கலாம் என்று வந்தால் இந்த வீட்டில் ஒரே தொல்லைதான்!" இவ்வாறு அர்ச்சனை தொடரும்.

பாவம்! அவளும் இவரைப் போலவே அலுவலகத்தில் பாடுபட்டு விட்டு வந்தவள் தான்! அந்த உண்மையை அவள் மனதுள் போட்டு மூடிவிட வேண்டியதுதான். வெளியே சொல்ல அவளால் முடியுமா?

மூத்த மகன் படிக்கும் பள்ளியில் ஏதோ தப்புத் தண்டா பண்ணியமையினால் அவனை அதே பள்ளியில் தொடர்ந்து படிக்க அனுமதிக்க முடியாதென அதிபர் கூறிவிட்டார். தந்தையின் காதில் தகவல் எட்டியதும், "எல்லாம் நீ வளர்த்த வளர்ப்புத்தான்!" என்று எரியும் சொற்களால் திட்டுவார்.

"அந்தப் பள்ளியில் எல்லாம் அப்படித் தான்! அவனை வேறு நல்ல பள்ளியில் சேர்க்க வேண்டும்," என்பாள் அவள். உடனே அவர் கொதித்தெழுவார்! "ஓ அந்த அளவுக்கு வந்துட்டியா? அதுக்கெல்லாம் பணத்துக்கு எங்கே போவது?"

"பணம் தானே? என்னுடைய செயினை விற்றுப்போட்டு வழி பண்ணலாம்?"

"ஓஹோ...அப்போ... என்னை மிஞ்சியே எல்லாக் காரியமும் நடக்குது இந்த வீட்டிலே...!"

இவ்வாறான சம்பவங்களும் பல வீடுகளில் இடம் பெறத்தான் செய்கின்றன.

பொதுவாக ஆண்கள்தான் எல்லாவகையான அழுத்தங்களையும் தாங்கி அவதிக்குள்ளாகிறார்கள்; அவர்களுக்குத்தான் அமைதியும் ஆறுதலான ஓய்வும் தேவை என்ற நிலைதான் நிலவுகிறது.

பெண்கள் மாடாக உழைத்தாலும் அவர்களுக்கு அமைதியோ ஓய்வோ தேவையில்லை என்பதுதான் தொன்றுதொட்டு நீடித்து நிலைத்து நிற்கும் ஒரு கோட்பாடாகிவிட்டது.

## தையல் அட்வைஸ்

**தை**யல் மெஷின் வைத்திருக்கும் தோழியரே! உங்களுக்குச் சில டிப்ஸ்.



- தையல் மெஷினில் பெல்ட் லூசாகி விட்டால், அதை குளிர்ந்த நீரில் 1/2 மணிநேரம் ஊறவைத்து, வெயிலில்காய வைத்து எடுங்கள். இப்போது ஓ.கே.
- கனமான துணியைத் தைக்கப் போகிறீர்களா? ஊசியில் சிறிது சோப் தடவிப் பிறகு தையுங்கள். ஊசி உடையாது. இலகுவாக இருக்கும்.
- தையல் இயந்திரப் பெட்டியில் ஒரு காந்தத் துண்டை வைத்துக்கொள்ளுங்கள். ஊசி மற்றும் ஊக்குகள் கீழே விழுந்தால் 'டக்' என்று எடுத்து விடலாம்.
- கத்தரிக்கோல் மழுங்கிப்போய் விட்டதா? கண்ணாடிப் போத்தலில் கழுத்துப் பகுதியை வெட்டுங்கள். கத்தரிக்கோல் போத்தலில் உராய்ந்து கூர்மையாகிவிடும்.
- நீண்ட நேரம் தையல் வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள், கையை ஒரு சிறு தலையணை மீது வைத்துக்கொண்டு தைத்தால் கை வலிக்காது.
- முனை மழுங்கிய ஊசிகளைத் தூர வீசி விடாதீர்கள். அவற்றைத் தையல் பிரிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- ஊசியில் நூலைக் கோர்ப்பதற்கு முன்னர் நூலை, நகப் பொலிஷில் தொட்டுக் கோர்த்துப் பாருங்கள்; இலகுவாக நுழைந்து விடும்.
- பழைய ஆடைகளில் இருந்து நன்றாக இருக்கும் பகுதிகளை வெட்டி எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். அவ்வப்போது அவை தேவைப்படும்.

## இயற்கை வைத்தியம்

**வெ**ங்காயப் பூவின் மருத்துவ சிறப்பை அறிந்து கொள்வோம். நோய்க்கிருமிகளை கட்டுப்படுத்தி அழிக்கும் வல்லமை விட்டமின் 'சி'க்குண்டு. இந்த விட்டமின் 'சி' பச்சை வெங்காயத்திலும். வெங்காயப் பூவிலும் மிகுதியாக உள்ளது எனக் கண்டறியப் பட்டுள்ளது.

வெங்காயப் பூவை அடிக்கடி உணவோடு சேர்த்துக் கொண்டால் நாடித்துடிப்பு சீராக இருக்கும். மிகுதியான உடல் சூட்டைக் குறைக்கும்.

வெங்காயத்தையும், வெங்காயப் பூவையும் சம அளவாகச் சேர்த்து வதக்கி வெல்லம் கலந்து சாப்பிட்டால் வரட்டு இருமல் குணமாகும்.

வெங்காயத்தையும், வெங்காயப் பூவையும் இடித்து சாறு எடுத்து சம அளவு தேன் கலந்து வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் ஒரு நாளைக்கு இரண்டு வேளைக்கு சாப்பிட வயிறு தொடர்பான- முக்கியமாக அஜீரணம் காரணமாக ஏற்பட்ட- வலிகள் துரிதமாகக் குணமாகும்.

பல்வலிக்கு வெங்காயத்தையும், வெங்காயப் பூவையும் சம அளவு எடுத்து சாறு பிழிந்து அன்றாடம் வாய் கொப்பளிக்க வேண்டும். பல்வலி, ஈறுவலி குணமாகும்.

வெங்காயத்தையும், பூவையும் தயிரில் அரிந்து போட்டு சாப்பிட்டால் மூலம் தொடர்பான எரிச்சல்,குத்தல், வலி முதலியன நீங்கும். வெங்காயப் பூவை நெய்விட்டு வதக்கி தினமும் சாப்பிட்டால் நல்ல உறக்கம் வரும்.

தொகுப்பு: ஜே. புளோரன்ஸ், கெங்கல்ல.

## சமைப்போம் சுவைப்போம்

### காளான் வறுவல்

(தொகுத்துத் தருவது சுகந்தினி)

**தேவையானவை:**

| | |
|---|---|
| காளான் | - 250 கிராம் |
| தக்காளி | - 1 |
| மிளகாய்த் தூள் | - 3 தேக்கரண்டி |
| சோம்புத் தூள் | - 1 தேக்கரண்டி |
| சீரகத்தூள் | - 1/2 தேக்கரண்டி |
| பூண்டு(அரைத்தது) | - 1 தேக்கரண்டி |
| பெரிய வெங்காயம் | - 2 |
| மஞ்சள் தூள் | - 1/2 தேக்கரண்டி |
| கடுகு | - 1/2 தேக்கரண்டி |
| உளுத்தம் பருப்பு | - 1 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | - சிறிது |
| உப்பு | - அளவாக |

**செய்முறை:**

முதலில் காளான், வெங்காயம், தக்காளி ஆகியவற்றை நறுக்கவும். வாணலியில் எண்ணெயைக் கொதிக்கவிட்டு, கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, வெங்காயம் ஆகியவற்றைப் போட்டு வதக்கி, பிறகு காளான், தக்காளி ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும். அதன் பின் மிளகாய்த்தூள், சோம்புத்தூள், சீரகத்தூள், பூண்டு விழுது, மஞ்சள் தூள் ஆகியவற்றைச் சேர்த்து உப்புப்போட்டு வேக விட்டு நன்கு வற்றியதும் இறக்கிவைக்க வேண்டும்.

அவ்வளவுதான். சுவையான காளான் வறுவல் ரெடி.

## லேடீஸ் ஸ்பெஷல்

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? பொரல்லை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

கமலேஸ்வரி ராமலிங்கம்,
88/8, கொட்டா வீதி, பொரல்லை, கொழும்பு-02.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

### பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BG

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15-03-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## பிரசவம்

(சென்றவாரத்தின் தொடர்ச்சி)

**கேள்வி: பொய்ப் பிரசவ வலி என்றால் என்ன? அதை எப்படித் தெரிந்து கொள்வது?**

சிலர் வலி வந்ததும் மருத்துவமனைக்கு வந்து விடுவார்கள். அவர்களை உடனடியாகப் பரிசோதனை பண்ணிப்பார்ப்போம். அப்படிப் பார்க்கும்போது எல்லா வலியும் பிரசவ வலிதான் என்று சொல்ல முடியாது. இன்னும் சில பெண்களுக்கு வலி வரும். நாங்கள் பரிசோதனை பண்ணிவிட்டு ஒரு எனிமா கொடுத்தவுடன் வலி தானாக நின்றுவிடும். அது உண்மையான பிரசவ வலி கிடையாது. இது 'பொய்ப் பிரசவ வலி' என்கிறோம். அவர்களுக்கு மலச்சிக்கல் இருக்கும். அந்த மலச்சிக்கல் கர்ப்பப்பையை எரிச்சலூட்டுவதால் உண்டாகக்கூடிய வலி. இது எனிமா கொடுத்தவுடனேயே நின்றுவிடும்.

**"முதலில் பத்து நிமிடத்திற்கு ஒருமுறை வலி வரும். பின்னர் ஐந்து நிமிடம், இரண்டு நிமிடம் என்று கிட்டக்கிட்ட வரும்"**


**கேள்வி: உண்மையான பிரசவ வலிதான் என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?**

வலி வந்தால்தான் குழந்தை பிறக்கும் என்பதெல்லாம் கிடையாது. சிலருக்கு வலி வராமலும் வெறும் இரத்தப்போக்கு மாதிரிக் கூட ஏற்படும். இன்னும் சிலருக்குப் பனிக்குடம் உடைந்து வெறும் நீராக வெளியேறும். இந்த மாதிரி இருந்தாலும் இன்னும் வலி வரவில்லையே என்று வீட்டில் உட்கார்ந்திருக்கக்கூடாது. உடனடியாக ஆஸ்பத்திரிக்கு வந்துவிட வேண்டும். உண்மையான பிரசவ வலி என்பது எனிமா கொடுத்த பிறகும் இன்னும் நன்றாக வலி எடுக்கும்.

முதலில் பத்து நிமிடத்திற்கு ஒருமுறை வலிவரும். பின்னர் ஐந்து நிமிடம், இரண்டு நிமிடம் என்று கிட்டக்கிட்ட வலி வரும். வலி வர வர குழந்தையின் தலையும் கீழிறங்கிப் பிரசவிக்கும். இதுதான் உண்மையான பிரசவ வலி. அப்படி வலி வராமல் இருந்தால் (குழந்தை அசையாமல் இருப்பதால்) குறிப்பிட்ட தேதி வரும்போது ஆஸ்பத்திரிக்கு வந்துவிட வேண்டும். காரணம், குறிப்பிட்ட காலம் வரைக்கும்தான் குழந்தை கர்ப்பப்பையில் இருக்கலாம். அதற்கு மேல் இருப்பது தாய்க்கும் நல்லதல்ல, குழந்தைக்கும் நல்லதல்ல. எனவே நாங்களே மருந்தைக் கொடுத்து வலியை வரவழைத்து விடுவோம்.

**கேள்வி: அறுவைச் சிகிச்சை மூலமாகப் பிரசவம் பார்ப்பதற்கு முக்கிய காரணங்கள் என்ன?**

ஏழாவது மாதமோ, ஒன்பதாவது மாதமோ ஸ்கேன் பண்ணிப் பார்க்கும்போது சிலருக்கு நஞ்சுக்கொடி கீழே இறங்கி இருக்கும். அப்படி இல்லையென்றால் குழந்தை குறுக்கே இருக்கின்றது என்பதைக் கண்டு பிடித்து விடுவோம். எட்டாவது மாதமோ, ஒன்பதாவது மாதமோ இவர்களுக்குப் பிரசவ வலி வருவதற்காக நாம் காத்திருக்க முடியாது. உயிர்ச்சேதம் ஏற்பட்டு விடும். அதைத் தவிர்க்கத்தான் சிசேரியன் முன்கூட்டியே செய்யப்படுகின்றது. இன்னும் சிலர் திடீரென்று இரத்தப் பெருக்கோடு வருவார்கள். ஸ்கேன் பண்ணிப் பார்க்கையில், உள்ளுக்குள் நஞ்சுக்கொடி தானாகப் பிரிந்திருக்கும். பாதி பிரிந்திருக்கும். பாதி பிரியாமல் இருக்கும். இதனால் உள்ளுக்குள்ளேயே இரத்தப் போக்கு இருந்து கொண்டே இருக்கும். கருவறையில் குழந்தை நீரில் இருப்பதற்குப் பதிலாக இரத்தத்தில் இருக்கின்ற மாதிரியான சூழ்நிலை வந்து விடும். இந்த நிலை தாய், குழந்தை உயிர்களுக்கே ஆபத்து. இந்தமாதிரி இருந்தது என்றால், நாம் உடனே சிசேரியன் செய்து குழந்தையை எடுத்து விடுகின்றோம்.



இந்த மாதிரி நேரங்களில் குழந்தையின் உயிரை விட, தாயின் உயிர்தான் நமக்கு முக்கியமாக இருக்கும்.

இன்னும் சிலருக்கு நஞ்சுக்கொடி நாலைந்து தடவை சுற்றியிருக்கும். அது குழந்தையுடைய கழுத்தையும் சுற்றி இருக்கும். பிரசவ வலி வந்தவுடனே, குழந்தையின் கழுத்தை ஒருவர் நெரிப்பது மாதிரியான சூழ்நிலை இது. இந்த நேரங்களில் குழந்தை சாதாரணமாகப் பிறக்கும். ஆனால் உயிரோடு இருக்காது. இதைத் தவிர்ப்பதற்கு நாம் முதலிலேயே சிசேரியன் பண்ணி எடுத்து விட்டால் அது தாய்க்கும் நல்லது; குழந்தைக்கும் நல்லது; எனவே சிசேரியன் செய்து கொள்வோரின் எண்ணிக்கை இப்போது அதிகமாகி வருகின்றது.

'தாய்க்கு மிகவும் கஷ்டம், சிசேரியன் ஆன உடம்பு' என மிகவும் பயப்படுவார்கள். அப்படி எந்தப்பயமும் வேண்டாம். சிசேரியன் ஆன பிறகு இரண்டு மூன்று வருடங்கள் தேவையான ஓய்வு எடுத்துக் கொண்டால், அதன் பிறகு எந்தப் பின் விளைவுகளும் ஏற்படப்போவதில்லை. அந்த மூன்று வருடங்களுக்கு அவர்களுக்குக் குழந்தை உண்டாகாமல் இருப்பது நல்லது. உடனே உடனே குழந்தை பிறந்தால்தான் பிரச்சனை.

**— டாக்டர் ஷீலா சத்யகுமார் —**


இந்த வாரம் முதல் ஆரம்பம்

தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 01


- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- இந்த வாரம் முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.



## யார் இவர்கள்?

← யார் இந்தச் சிறுமி? இவரது குடும்பமே உலகம் அறிந்த குடும்பம். தந்தையார் இன்று உயிரோடு இல்லை. சமீபத்தில்தான் இவருக்கு திருமணம் மிக எளிமையாக நடந்துமுடிந்தது. தகவல் போதும். கண்டுபிடியுங்கள். ■

↓ மத்தியில் இருக்கும் சிறுமியின் புன்னகையில் மின்சாரம் அடிக்கிறதா? இப்போது பிரபல நடிகையாகிவிட்டார். சமீபத்தில் தமிழ்ப்பட ரசிகர்களுக்கும் அறிமுகமாகியுள்ளார். நடனம் ஆடுவதில் வல்லவர். 'க' என்ற எழுத்தில் பெயர் ஆரம்பிக்கும். என்ன ஓ.கேயா? உங்கள் விடைகளைச் சரிபார்க்க 18ம் பக்கத்துக்குச் செல்லுங்கள். ■



↓ குழந்தையாகப் பார்க்கும்போது பரமசாதுபோல தெரியலாம். ஒரு காலத்தில் உலகத்தையே ஆட்டிப் படைத்தவரின் குழந்தைத் தோற்றம்தான் இது. யார் என்று தெரிகிறதா? எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?



## காதல் புழுக்கமும் கடற்கரைக் காற்றும்

அவள் வீட்டுத் தெருவில்
நீ திரி!
யன்னல் திறந்து பார்த்திருப்பாள்
சைக்கிளில் சென்று வா...!
**
பள்ளிக்குப் போனால்
அவள் பின்னால்
நீ போ!
யாரும் காணாதபடி
மெல்லப் பேசு.....!
**
கடிதம் கொடுத்து
காதலிக்க அழை....!
பதில் கிடைக்கும் வரை–
நீ படிக்க முடியாதவனாய்
பாய் விரித்துப் படு...!
**
கேள்...!
ஆனால் கெஞ்சாதே!
தந்தால் பெற்றுக்கொள்...!
**
'நாய்' என்று அழைப்பாள்;
வாலாட்டிக்கொண்டு போ!
துரத்தினாலும் தூரப் போகாமல்,
அவள் காலோடு சுற்று!
**
சம்மதம் கிடைத்துவிடும்;
இனி அவள் உனக்குரியவள்...!
**
அவளுக்காக ரோஜா பறிக்கச் சென்று
விரலில் முள் குத்திக் கொண்டு போ!
தாவணி கிழித்து
காயத்தில் கட்டி விடுவாள்..!
**
கடற்கரைக்கு கூட்டிச் செல்...!
'காற்று வாங்க...!'
**
கடற்கரை மணலில்
சிப்பி கூட்டம் பண்ணும்
அவள் விரல்களுடன்–
உன் விரல்கள் சண்டைபோடும்!
**
உப்புக்காற்றுப்பட்டு உடல் சிலிர்க்கும்;
நீ அவள் உதட்டில்
உப்பு ருசி பார்....!
**
நீ மல்லாக்கப்படுத்தால்
அவள் மடி தலகாணி;
குப்புறப் படுத்தால்
முத்தக் கூடை...!
**
இருட்டுப்படமுன்
எதையாவது பேசு– அவளுடன்;
இரவான பின்
பேச நேரமிருக்காது...!
**

சிந்தனைப் பித்தன், (றகீம்)

## கனவு தந்த கவிதை!

பல திசைகளிலும் படரவிட்ட எல்லாமே
ஒரே இடத்தில் வந்து தடைப்பட்டதும்
சிக்குக் கட்டியது சிந்தனை!
***
ஒரு கணம் இயங்க மறுத்து விறைத்துப்போனது
தலை!
அக்கணமே
இனம் புரியாத ஒரு சக்தி உடலெல்லாம் பரவி;
முறுக்கேறி விம்மிப் புடைத்தன
நரம்புகள்!
***
சாதனை வெறி தலைக்கடிக்க
நிதானத்தை இழந்தது மூளை!
***
எழுந்து சென்று
கருக்கிய முந்திரிகை விதையை தட்டுவதாய்
ஒரு கல்லில் தலையை வைத்து,
இன்னொரு கல்லால்
எனது தலையை நானே உடைத்து,
மூளையை எடுத்து
பிரித்துப் பார்த்தேன்!
அதில் எல்லா இடத்திலும்
"வேலை கிடைக்காதா?" என்ற வினாக்குறிகள்!
***
தாமதியாமல்
நெஞ்சைப் பிளந்து,
இதயத்தை வெளியே எடுத்து,
இரண்டாய் கிழித்து
உள்ளே உற்றுப்பார்த்தேன்!
அதற்குள்
அவளைத் தவிர வேறொன்றுமில்லை!
***
'நான் என்ற இளைஞனுக்குள்
இவ்வளவுதானா?'
என்ற ஏக்கப் பெருமூச்சோடு இறந்து போகிறேன்!

மீராவோடை எஸ். நஸீம்.

## விழித்தெழு!

துருப்பிடித்துப்போன
தூசுகளாய்
தேசம்!
▫▫▫
மூச்சிரையாகி
முதலுதவி செய்யாமல்
அவதிப்படும்
வாழ்க்கை!
▫▫▫
சரித்திர சாசனமாய்
இன்று வரையும்
இளைப்பாறாத
யுத்தம்!
▫▫▫
அலட்சிய
சின்னங்களாய்
அஸ்தமித்துப் போகும்
ஆன்மாக்கள்!
▫▫▫
இடைவெளி இல்லாத
இடைக்கால
இருட்டில்
மறைந்து போன
மனிதம்!
▫▫▫
இந்தக்
கலியுகத்திலும்
வயதுக்கு
வராமலிருக்கும்
சுதந்திரம்!
▫▫▫
வெள்ளைப் புறாவோடு
எப்போதோ
பறந்து போன
சமாதானம்!
▫▫▫
போதும் இனியும்
விழித்தெழு மனிதா!
உன்
இமைகளைப் பிடுங்கி
விழிகளை கேட்குமுன்!

வன்னியூராள் வைசிகி

## தேன் கிண்ணம்

## யுத்தம்

ஆண்–பெண்
என்பதற்கப்பால்
மூன்றாம் இனம்
தோன்றலின் சாதனை!
♆♆
அன்பு என்ற– அறமொழி
வீழ்த்தப்பட்டு
பிறமொழிகளின்
தோற்றத்தின் உச்ச வளர்ச்சி!
♆♆
கருணை–எனும் மதம்
காணாமல் போனதால்
கருத்தரித்த புதிய மதத்தின்
தலைமைப் பிரசவம்!
♆♆
ஆசையும்– ஆக்கிரமிப்பும்
அரியணை ஏறியதால்
உயிர் பெற்ற
உயிர்கொல்லி விளையாட்டு!
♆♆
ஆண்டான் அடிமை
சாசனத்தின் ஆணிவேர்
ஆழப்பதிந்ததால்
கிளைவிரித்த புதியசாசனம்!

கலாதிரு.

## மன்னித்துவிடு

என்–
உயிரின் ஓரம்
எந்நேரமும்
உரசிக் கொண்டிருக்கிறது
உன்–
நினைப்பு!
–0–
என்
காய்ந்த மனதின்
ஈரப் பரப்பினிலே,
மீண்டும் ஒரு
காதல் பயிர்!
–0–
பூக்களையும் நிலவையும்–
நேசிக்கிறேன்;
ஏனென்றால்–
பூக்களிலெல்லாம்
உனது–
புன்னகை;
நிலவினிலே
உன்–
கன்னத்தின்
கறுப்பு மச்சம்!
–0–
உன்
பெயரை உச்சரிக்கும்போது,
உமிழ்நீரும் இனிப்பாகிறது!
–0–
மௌன பாஷைகளால்
நீ
பேசும்போதெல்லாம்
என்
இதயத்தால் மொழி பெயர்க்கப்பட்டு,
சிலிர்த்திருக்கிறது
என் மனதின்
மயிர்க் கால்கள்!
–0–
மன்னித்துவிடு!
மண்ணிற்குள் தலை புதைக்கும்
தீக் கோழியாய்
காதலை மறைத்ததற்கு
என்னை–
மன்னித்துவிடு...!
–0–

வாழை இப்னு ஹஸன்.

## கடுகுக் கவிதைகள்

**காதல்**
கடலேயின்றி
அலைகள்
ஆர்ப்பரிக்கும்
அதிசயம்!

**மௌனம்**
ஆயிரம்
ஆத்தங்களை
சப்தம்
இன்றியே
ஒலிக்கும்
சங்கீ(கே)தம்...!

**மனிதன்**
விலங்கினம்
அனைத்தையும்
இணைத்தே இறைவன்
நினைத்துப்
பார்த்ததில்
நிலைத்ததோர்
படைப்பு!

**குடும்பம்**
இது
ஒரு கோவில்!
'குறி'
தவறிப் போய்விட்டால்,
வெறுங்கோணல்–வில்!

**மது**
நன்றிக்கு இலக்கணம்
உறவாடத்
தொடங்கிப் பார்!
உன்
உயிர்
போகும்வரை
உறவாடும்!

நீர்கொழும்பு தருமலிங்கம்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(09.03.1997 தொடக்கம் 15.03.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், வெள்ளி. |
| மீனம் | - சனி, கேது, புதன். |
| சிம்மம் | - செவ்வாய் (வக்கரகம்) |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |

★ சந்திரன்- மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | காலை 7 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. 3 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- துயர் நீங்கும், பொருள் வரவு. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியசித்தி. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| சனி- பலவித பேறு, பெரியோர் உதவி. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | பி.ப. 3 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, பொருள் பேறு. | பி.ப. 4 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் மந்தம், செலவுமிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, பெரியோர் நட்பு. | மு.ப. 9 மணி |
| திங்கள்- இனசன நன்மை, தொழில் பேறு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- கடன் சுமை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 3 மணி |
| சனி- மனக் கலக்கம், பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பொருள் பேறு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- இனசன நன்மை, காரியசித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| புதன்- உயர்ந்த நட்பு, இனசன நன்மை. | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, அந்நியர் பகை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| சனி- வீண் விரோதம், பொருட் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, | பகல் 12 மணி |
| புதன் - வீண் முயற்சி, பணச் செலவு. | பி.ப. 4 மணி |
| வியாழன்- கௌரவம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, காரிய சித்தி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி உறவினர் உதவி. | பி.ப. 4 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் பகை, மனக் கலக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- பலவித பேறு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், மனக்குறை நீங்கும். | பி.ப. 4 மணி |
| புதன்- வீண் முயற்சி, தொழில் பேறு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, ப'ணப் பேறு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, பலவித பேறு. | பகல் 12 மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- வீண் தொல்லை, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, தொழில் பேறு. | பி.ப. 2 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, பொருள் பேறு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் தொல்லை, கௌரவக் கேடு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, பணச் செலவு. | பி.ப. 3 மணி |
| வியாழன்- இனசன நன்மை, தொழில் மந்தம். | பி.ப. 4 மணி |
| வெள்ளி- பலவித பேறு, கடன் தொல்லை நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- அந்நியர் நட்பு, அதிகார விருத்தி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, பலவித தொல்லை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, காரியசித்தி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| சனி- காரியசித்தி, பொருள் பேறு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1





## மேதினியை உயர்த்தப்படி!

அம்மா அப்பா சொன்னபடி
அறிவு வளர தினம் படி
ஆசான் ஓதிய நெறிப்படி
ஆன்றோர் வழியைக் கடைப்பிடி.


ஒன்றுபட்டு வாழும்படி
ஒழுக்க நெறியில் திகழும்படி
என்றும் போற்றும் நூலைப்படி
இனிதே உயர்வாய் நீதிப்படி.

நண்பர் சுற்றம் புகழும்படி
தம்பி தங்கை வணங்கும்படி
அண்ணன் அக்கா போற்றும்படி
அன்பு காட்டிப் பணிந்துபடி

நல்ல நூலை விரும்பிப்படி
தீய நூலை விலக்கிப்படி
மெல்ல மெல்ல முயன்றுபடி
மேதினியை உயர்த்தப்படி.

எம். வில்லவன்.

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோமென்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம்:
தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்!
—சுப்பிரமணிய பாரதியார்.



## பாப்பா முரசு சிறுகதை

# நரியின் நட்பு

ஒரு காட்டில் சிங்கம் ஒன்றுடன் நட்பாக இருந்தது நரி.

அந்தச் சிங்கம் தான் வேட்டையாடும் மாமிசத்தில் நரிக்கு ஒரு பகுதியைக் கொடுத்து வந்தது. நரி தனக்கு வேண்டாதவர்களை எல்லாம் சிங்கத்திடம் கோள் மூட்டி தன்னிடம் பயம் கொள்ளச் செய்தது.

நரி, சிங்கத்துடன் இருந்ததால் பன்றி, காட்டெருமை போன்ற மிருகங்கள் எல்லாம் நரியிடம் பணிந்தே இருந்தன. சிங்கம் மட்டும் இல்லாவிட்டால் இவை எப்போதோ நரியை அடித்துக் கொன்று போட்டிருக்கும்.

சிங்கத்தின் நட்பால் நரி நாளுக்கு நாள் கொழுத்து வந்தது.

ஒருநாள் பன்றி, இன்னொரு நாள் காட்டெருமை, மான், மரை என்று வித விதமான விலங்குகளின் மாமிசத்தைத் தின்று வந்தது நரி.

ஒரு நாள் சிங்கத்தைப் பார்த்து நரி, "சிங்க நண்பனே! உன் நட்பால் நான் இந்தக் காட்டில் உள்ள எல்லா மிருகங்களின் மாமிசத்தையும் ருசி பார்த்து விட்டேன். இதற்குக் காரணம் நீதான்," என்று புகழ்ந்தது.

மறுநாள் வேட்டைக்குச் சென்ற சிங்கம் குகைக்குத் திரும்பி வரவில்லை. சிங்கத்தைக் காணாத நரி காட்டிற்குள் சிங்கத்தைத் தேடிச் சென்றது.

நடுக்காட்டில் வேடர்கள் வைத்த பொறிக்குள் சிங்கம் மாட்டிக்கொண்டதைக் கண்டது நரி. உடனே அருகில் சென்றது.

நரியைக் கண்ட சிங்கம், மகிழ்ச்சியுடன், "நண்பனே! வந்து விட்டாயா? என்னை எப்படியாவது வெளியே கொண்டு வா," என்று கேட்டது.

நரி அமைதியாக நின்று கொண்டிருந்தது.

"நரியே! என்னால்தானே நீ வித விதமான விலங்குகளின் மாமிசங்களைச் சுவைத்தாய்? அந்த நன்றியுணர்வோடு என்னைக் காப்பாற்று. உதவி செய்!" என்று கெஞ்சியது சிங்கம்.

"நண்பா! எல்லா மிருகங்களின் மாமிசத்தையும் தின்று சுவைத்து விட்டேன். ஆனால் சிங்கத்தின் மாமிசத்தை மட்டும் தின்று சுவைக்கவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் வேடர்கள் வந்து உன்னை அடித்துப் போட்டு விடுவார்கள். அப்போது உன் மாமிசத்தை நான் சாப்பிடலாம்," என்று சொன்னது நரி.

அருகில் உள்ள மரத்தில் உட்கார்ந்திருந்த கிளி, இவற்றின் உரையாடல்களைக் கேட்டது. உடனே பறந்து சென்று மற்ற மிருகங்களுக்கு நடந்தவைகளைக் கூறியது.

இதைக் கேட்ட மிருகங்கள் எல்லாம் கிளி கூறிய இடத்திற்கு வேகமாக ஓடிவந்தன.

அங்கே சிங்கம் அகப்பட்டிருந்த பொறிக்குச் சற்றுத் தூரத்தில் நரி ஒளிந்து நின்று வேடர்கள் எப்போது வருவார்கள் என்று காத்திருந்தது.

இவ்வளவு காலமும் சிங்கத்துடன் சேர்ந்து தங்களைத் துன்புறுத்திய நரியைக் கண்டதும் மிருகங்களுக்கு கடும் சினம் ஏற்பட்டது.

ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து நரியை அடித்துக் கொன்று விட்டன காட்டு மிருகங்கள்.

## வாரம் ஒரு நாடு — துருக்கி



தலைநகர்- அங்காரா
பரப்பு-7,79,452 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை- 6.19 கோடி
மொழி- துர்கிஷ், குர்திஷ், அரபி
எழுத்தறிவு- 80%
சமயம்- சமயச்சார்பற்றது, இஸ்லாம்
நாணயம்- துருக்கிய லிரா
தனிநபர் வருமானம்- 2931 டொலர்.

**அமைவிடம்:**

இது தென்கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆசியா மைனரில் உள்ள ஒரு குடியரசு. இதன் பெரும்பகுதி ஆசியாவில் இருக்கின்றது.

**வரலாறு:**

கொன்ஸ்டான்டிநோபிள் என்று முன்னர் துருக்கி அழைக்கப்பட்டது. முஸ்தபா கமால் பாஷா தலைமையில் 1919-22 வரை நடைபெற்ற சுதந்திரப்போராட்டம் வெற்றி பெற்றது. தேசிய பாராளுமன்றம் அதிகாரத்தை ஏற்றது. 1923ல் குடியரசானது. 1960லும், 1980லும் இராணுவப் புரட்சி. 1982ல் புதிய அரசியல் சட்டம் உருவாக்கப் பட்டது.

**பொருளாதாரம்:**

மொத்த மக்களில் 64% பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். புகையிலை, கோதுமை முக்கிய விளை பொருட்கள், இதைவிட உலர் திராட்சை உற்பத்தி, கால்நடைவளர்ப்பு ஆகியவை முக்கியமானவை. இரும்புத்தாது, நிலக்கரி, செம்பு போன்ற கனிப்பொருட்கள் கிடைக்கின்றன.


## உறங்குவது எப்படி?

* நாய், பூனை போன்றவை உடலைச் சுருட்டிக்கொண்டு உடலின் வெப்பத்தைக் காப்பாற்றி தலையை உள்பதித்து உறங்குகின்றன.
* ராக்கூன் என்னும் ஒருவகை கீரிப் பிள்ளை தலையை மடித்து உடலின் மேல் வைத்து உறங்கும்.



* யானை மற்றும் குதிரைகள் நின்று கொண்டே தூங்கும்.
* பாம்புகள் அனைத்தும் உடலைச் சுருட்டிக் கொண்டே தூங்கும்.
* சிலவகை மான்கள் தூங்கும்போது தமது சுவாச சக்தியின் மூலம் பகை விலங்குகளின் நடமாட்டத்தை அறியும் ஆற்றல் கொண்டவை.
* ஐரோப்பியக் கிளிகள், வெளவால்கள் போன்று கால்களால் மேலே உள்ள கிளைகளைப் பற்றிக்கொண்டு தூங்கும்.
* வாத்து தரையில் நின்று கொண்டே, தண்ணீரில் நின்று கொண்டே தூங்கும்.
* எறும்புகள் மண்ணில் படுக்கை போன்ற திட்டுக்களை அமைத்து கால்களை உடலுடன் அழுத்தி ஒய்யாரமாகத் தூங்கும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.03.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 183
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 181

பரிசுக்குரியவர்,
எம்.ரி. பாத்திமா சஹானா,
பாத்திமா முஸ்லிம் மகா வித்தியாலயம், புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| மதிவதனி பரமசிவம், தமிழ் மகா வித்., டல்லி.ப.கனக்கு, டிக்கோயா. | பி. முஹமட் சிபான், கமு/ ஸம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை. |
| சு. அர்ச்சனா, புனித சிசிலியா மகா வித்., மட்டக்களப்பு. | எஸ். சுதர்ஷினி, அல் அக்ஷா மத்திய கல்லூரி, கல்பிட்டி. |
| சூ. மதுரன், வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | கி. கிஷோகுமார், இ/ஸ்பிரிங்வூட் த.வி. இறக்குவானை. |
| தஸ்ஹா அன்வர், புனித அந்தோனியர் மகளிர் க., கட்டுகஸ்தோட்டை. | செல்வன் இராமச்சந்திரன் சரண்ராஜ், கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு. |
| செல்வி. எஸ். சிவநாதன், சைவமங்கையர் கழகம், வெள்ளவத்தை, கொழு.06. | சகாப்தீன் மிஸ்பாஹி, கி/ முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம், கிண்ணியா. |


## ஹோமர்

இலக்கிய உலகில் கிரேக்க நாட்டுக் கவிஞரான ஹோமர் என்றும் அழியா இடத்தைப் பெற்றுள்ளார். இவர் கிறிஸ்துவுக்கு முன்னர் 9ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பிறப்பதற்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர்- 13ம் நூற்றாண்டில்- கிரேக்க நாட்டுக்கும் டோர்ஜன் நாட்டுக்கிடையில் 10 ஆண்டுகளாக நடைபெற்ற யுத்தத்தை மையக்கருவூலமாக வைத்து இருகாவியங்களை இயற்றினார்.

'இல்லியட்' மற்றும் 'ஒடிசே' என்பவையே ஹோமர் இயற்றிய இறவா இலக்கியங்களாகும். கிறிஸ்துவுக்குமுன் 13ம் நூற்றாண்டில் கிரேக்கநாடு எத்தகைய சிறப்புக்களைப் பெற்றுத் திகழ்ந்தது என்பதை இன்றைய உலகுக்கு எடுத்துக்காட்டும் வரலாறுகளாக இந்நூல்கள் விளங்குகின்றன. கிரேக்கமொழியில் இயற்றப்பட்ட இக்காவியங்கள் இன்றைய உலகின் பிரதான மொழிகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. உலக மகா காவியங்களுள் இவையும் இடம் பிடித்துள்ளன.

'இல்லியட்' கிரேக்க- டோர்ஜன் யுத்தம் 10 வருடங்கள் நடைபெற்ற தன்மையினை விரிவாகக் கூறுகிறது. 'ஒடிசே'-யுத்தம் நடைபெற்ற அந்தப்பத்து ஆண்டுகளும் கிரேக்கப் படையின் தளபதி ஒடேசியஸ், எத்தகைய துன்பங்களை அனுபவித்தான் என்பதை கவிதை வடிவில் எடுத்துக் கூறுகிறது.

இரு காவியங்களும் கிட்டத்தட்ட ஒரே காலம், ஒரே இடம், ஒரே பொருள் பற்றியதாக இருந்தபோதிலும் ஒன்றுக்கொன்று



மாறுபட்டு நிற்கின்றன. இதன் காரணமாக, இவ்விரு காவியங்களையும் ஒருவரே எழுதியிருக்க முடியாது என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். இருப்பினும் இவை இரண்டும் ஹோமரின் ஆக்கங்களே என்பதற்கு பல ஆதாரங்கள் கிடைக்கின்றன.

எவ்வாறிருப்பினும் புலவர் ஹோமரின் காவியங்கள் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## விடுகதைகளும் விடைகளும்

1. மூலையில் நிற்கும்;
முத்துக்களைக் கொண்டிருக்கும்;
ஆடாது அசையாது-
இது இல்லாத உழவன் வீடே
உலகில் இருக்காது.
அது என்ன?

2. காகிதம் வருமுன்னே
கவிதை வளம் எல்லாம்
காப்பாற்றித் தந்த இவரைக்
காப்பாற்ற மறந்து விட்டனர்.
இது என்ன?

3. வீராதி வீரரெல்லாம்
சூராதி சூரரெல்லாம்
தலைவணங்கிச் செல்லுமிடம்-
தரணியில் ஓரிடந்தான்.
அது என்ன?

4. புதரின் நடுவே
பொன்போலப் பூத்திருக்கும்;
பொய் சொன்ன பூ
என்று புராணக்கதை கூறும்.
இது என்ன?

5. அழகுப்பெண் இதழ்கள் என்பர்;
பள்ளிப் பிள்ளைகள்
பலகையில் தேய்ப்பார்;
பழமானால் பறித்துத் தின்பார்
அது என்ன?

**விடைகள்**

1. வைக்கோல்போர்
2. ஓலைச் சுவடி
3. வாசல்படி
4. தாழம்பூ
5. கோவைப்பழம்.

தொகுப்பு:
எம். முனீரா பேகம்,
சம்மாந்துறை.

## முதல் பாராளுமன்றம்

உலகின் முதலாவது பாராளுமன்றம் ஐரோப்பிய நாடான ஐஸ்லாந்தில் உள்ள அல்திங் (ALTHING) ஆகும். கி.பி. 930ல் முதன் முறையாகக் கூடியது.

ஐஸ்லாந்தின் தலைநகர் ரெய்ஜவிக் நகரில் உள்ள இப்பாராளுமன்றத்தில் மேல்சபை, கீழ்சபை என இருசபைகள் உள்ளன. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை 63 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.



## சீனப் பெருஞ் சுவர்



உலகிலேயே மிக நீளமான சுவர், சீனப் பெருஞ்சுவர்தான். சீனாவின் எல்லையின் அமைந்துள்ள இதன் நீளம்-3460 கிலோமீட்டர் (2150 மைல்). கிட்டத்தட்ட பிரித்தானியாவின் நீளத்தின் மூன்று மடங்கு.

இதன் உயரம்- 4.5 தொடக்கம்-12 மீட்டரும் (15-39 அடி) அகலம் அதாவது தடிப்பம்-9.8 மீட்டரு(32 அடி) மாகும். இச்சுவருக்குக் கிளைகளாகவும் பல சுவர்கள் உள்ளன. இவற்றின் மொத்த நீளம்-2860 கிலோ மீட்டர் (1780மைல்) கிறிஸ்துவுக்கு முன் 221ம் ஆண்டு தொடங்கப்பட்டு, 210ம் ஆண்டில்- அன்றைய மன்னன் குயின் ஷி ஹுஃ ஆங்டி தலைமையில்-பல்லாயிரக் கணக்கானோரால் கட்டி முடிக்கப்பட்டது.

க்கண்களில் குரூரம்.
"ப்ளீஸ்ட் டு மிட் யூ ஸார். இந்திரா கட்சிக் காரர்கள் ராஜமானியம் ஒழிப்பதை அவ்வளவு பெரிது படுத்து கிறார்களே, அந்தப் பணம் எவ்வளவு தெரியுமா? இந்துஸ்தான் ஸ்டீலின் நஷ்டத் தில் நாலில் ஒரு பங்...."
"கெட் லாஸ்ட்."
"ஏன் ஸார், நீங்கள் காங்கிரஸ் ஆளா?"
"காங்கிரஸ் எம்! எம் ஃபார் மர்டர்."
"ஒரு டம்ளர் தண்ணீர் தருகிறீர்களா? இந்தப் பெண் யார்? உங்கள் பெண்ணா?" என்று கேட்டான் கணேஷ் அனிதாவைப் பார்த்து.

### சென்றவாரம்

**காரை பெட்ரோல் நிலையத்தில் நிறுத்தி விட்டு அந்த வீட்டை நோக்கி நடந்து செல்கிறான் கணேஷ்.**

**திறந்திருந்த ஜன்னல் வழியே உள்ளே பார்க்கிறான். அனிதா உயிருடன் இருக் கிறாள். டெலிஃபோனில் கூப்பிட்ட குரலுக் குரியவன் போதையில் அனிதாவைக் கட்டாயப் படுத்துகிறான். அறைக் கண்ணாடி பிம்பத்தில் அவனைக் காண்கிறான்.**

**அங்கிருந்து புறப்பட்டு டெலிஃபோன் எக்ஸ் சேஞ் சென்று இன்ஸ்பெக்டர் ராஜேஷை 'உடன் வரும்படி' அழைக்கிறான். மோனிக்கா வுக்கும் தெரிவித்து, எதிரேயிருந்த தேர்தல் அலுவலகம் சென்று கட்சிச் சின்னத்தை சட்டையில் பொருத்தி 'வாக்குக் கேட்பவன்' போல் அந்த வீட்டுக்குத் திரும்புகிறான்.**

**அனிதா அவனை சைகையால் எச்சரிக்க, தந்திரமாக அந்த ஆசாமியை அழைக்கிறான்.**

**திரை மறைவிலிருந்து கோபத்துடன் வெளிப்படுகிறான் அவன்....... இனி....**

"என் கையில் என்ன இருக்கிறது தெரியுமா?"
"துப்பாக்கியா அது?"
"ப்ளீஸ், வேண்டாம். ப்ளீஸ். எனக்குப் பயமாக இருக்கிறது," என்றாள் அனிதா.
"அனிதா, நீ உள்ளே வா," என்றான் அந்த ஆசாமி.
அனிதா மலைத்து நின்றாள்.
"நிஜத் துப்பாக்கி. போ வெளியே!"
"நான் என்ன குற்றம் செய்தேன்? ஜனசங்கிற்கு ஓட்டுக் கேட்டால் குற்றமா! துப்பாக்கியைக் காட்டுகிறீர்களே?"
"பஹதூர்! எங்கே போய்த் தொலைந் தான்!"
"பஹதூர் யார்? பாடி கார்டா?"
"டேய், நீ போடா வெளியே," என்று அருகில் வந்தார்.
"மிஸ்டர் யாதவ்."
"நான் யாதவ் இல்லை"
கணேஷ் மிக வேகமாகக் காலால் உதைத்தான். துப்பாக்கி தூர விழுந்தது, அனிதாவின் அருகில்.
"நான் ஓட் கேட்க வந்தவன் இல்லை. என் பெயர் கணேஷ்." அவன் கண் விழுந்த துப்பாக்கியின் மேல் கவனமாக இருந்தது.
எதிரே இருந்தவர் முகம் மாறி விட்டது.
"கணேஷ் நீ இங்கேயும் வந்து விட்டாயா? பஹதூர்! பஹதூர்," என்று அந்தத் துப்பாக்கியை நோக்கி நடந்தார்.
"நகராதே! நகர்ந்தால் உன்னை...." என்றான் கணேஷ். "அனிதா, அந்தத் துப்பாக்கியை எடுத்துக்கொள்ளுங்கள். பயப்படாதீர்கள்!"
"அனிதா, இவனுக்கு நான் யார் என்று தெரியுமா?"என்று கேட்டார் அந்த ஆசாமி. "நீ சொல்லியிருக்கிறாயா?"
"இல்லை," அவள் தலையை ஆட்டி னாள்.
"அனிதா! அந்தத் துப்பாக்கியை எடுங்கள்!" என்றான் கணேஷ்.
"எதற்காக மற்றொரு கொலை செய்ய விரும்புகிறீர்கள்! எனக்கு உன்னை நன்றாகத் தெரியும். நீ யார் என்பது தெரியும்!"
அந்த ஆசாமி கணேஷின் மேல் பாய்ந்தார். கணேஷ் இளைஞன். பாய்ந்தது சாமர்த்தியமில்லாத பாய்ச்சல். அதன் வேகத்தை உபயோகப்படுத்திக் கொண்டு கணேஷ் ஓர் இடறு இடறினான்! அவர் நாற்காலியில் மோதி விழுந்தார். எழுந்தார். ஆத்திரம் அதிகமாகி, "அனிதா, கொடு துப்பாக்கியை!" என்று சொல்ல, "அனிதா கொடுக்காதே!" என்றான் கணேஷ்.

அனிதாவின் கையில் அந்தத் துப்பாக்கி இருந்தது.
"அனிதா! சுடு இவனை! சுடு!"
அனிதா இரண்டு கைகளையும் சேர்த்து, "கணேஷ்!" என்றாள். அவன் மேல் குறி வைத்தாள்.
"அனிதா, நீ என்னைச் சுடுவாயா?"
"சுடு அனிதா! சுடு!"
"அனிதா! அந்தத் துப்பாக்கியைத் தூர எறி! ஜன்னலுக்கு வெளியே எறி!"
"எறியாதே! எறியாதே!"
அனிதா பின் வாங்கினாள். ஜன்னல் கதவைத் திறந்தாள். அவளை நோக்கி ஓடியவரை கணேஷ் அப்படியே பிடித்து இறுக்கி நிறுத்தினான்.
"விடு என்னை. என்னைத் தெரியாது உனக்கு. என்னைப் பார்த்தபின் இந்த வீட்டை விட்டு நீ உயிருடன் போகப்போவ தில்லை. உன்னைக் கொன்று சமாதி கட்டி விட்டுத்தான் நான் போகப் போகிறேன். தெரியுமா?"
"நகராதீர்கள்! அனிதா.....ம்."
அனிதா அந்தத் துப்பாக்கியை ஜன்ன லுக்கு வெளியே எறிந்தாள். அந்த ஆசாமியின் பாதிபலம் வெளியே விழுந்து விட்டது. அந்த ஆத்திரத்தில் கணேஷை வீழ்த்த முயன்றார்; முடியவில்லை. கணேஷ் அவரைச் சுவரில் ஒரு தள்ளுத் தள்ளிவிட்டு ஒரு மோது மோதி, "வலிக்கிறதா?" என்றான். சரியான அப்பர் கட் ஒன்று கொடுத்து, "வலிக்கிறதா?" என்றான். ரத்தக் கோடு ஒன்று வாயில் தெரிந்தது.
அனிதா கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.
"அனிதா, என்ன செய்ய வேண்டும்?" என்றான் கணேஷ்.
"கில் ஹிம்," என்றாள்; "மெதுவாக நிதானமாகக்கொல்லுங்கள்," என்றாள்.
"பஹதூர்!" என்று மிக உரக்க, தொண்டை நரம்புகள் வெடிக்கக் கத்தினார் அந்த ஆள்.
தடதடவென்று யாரோ ஓடிவரும் சத்தம் கேட்டது.
உள்ளே நுழைந்த பஹதூர் வாட்ட சாட்டமாக இருந்தான்.
காக்கி சட்டை, மங்கோல் கண்கள், மீசை, புல்வோர்க்கர் விளம்பரத்தில் போல புஜங்கள்.
"அனிதா. அந்த அறைக்குச் செல்லுங் கள். உள்ளே தாளிட்டுக் கொண்டு விடுங்கள்! க்விக்" என்று கத்தினான் கணேஷ்.
பஹதூர்-கணேஷ்.
கணேஷ்-பஹதூர்.
பஹதூர் கணேஷை நெருங்கினான். அனிதா தற்சமயத்திற்குப் பத்திரமாக இருக் கிறாள். துப்பாக்கி வெளியே கிடக்கிறதே!
கணேஷ் கவலைப்பட்டான்.
'எதிராளி உன்னை விடப் பலமாக இருக்கும் போது நீ ஆயுதமின்றி இருக்கும் போது, அவனை ஒரே தாக்குதலில் வெல்ல இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று அவன் இடுப்பின் கீழ் நேர்த்தாக்குதல். இரண்டு அவன் முழுப்பலத்தையும் திசை திருப்பி அவனை விழ வைப்பது' -பெற்றி ருந்த ஜூடோ பயிற்சி முழுவதும் கணேஷுக் குத் தேவையாக இருந்தது.
பஹதூர் மெதுவாகத்தான் நெருங் கினான். கணேஷ் மிக வேகமாக அவன் இடுப்பை இலக்காக வைத்துக்கொண்டு உதைத்தான்.
பஹதூர் விலகிக் கொண்டு சிரித்தான். ஹாஸ்யமில்லாத சிரிப்பு. விஷயம் தெரிந்த வன்!
பஹதூரின் இடது புறங்கை அரை வட்ட மின்னலாகக் கணேஷின் தாடையில் இறங்கியது,
கணேஷ் சரிவதைப் பார்த்து, அவர் "அடி வயிற்றில் ஒன்று கொடு." என்றார் "பிடித்துக்கொள். நான் வருகிறேன்," என்றார்.
பஹதூரின் கவனம் தடைப்பட்டது. அதுபோதும். அந்தச் சமயத்தில் கணே ஷின் முழங்கால் அவன் நினைத்த இலக்கில் பஹதூரில் அழுத்த, முதல் தடவையாகப் பஹதூருக்கு வலித்திருக்க வேண்டும். ஆத்திரத்தில் கணேஷின் மேல் வேகமாகப் பாய்ந்தான். கணேஷ் சுதாரித்துக்கொண்டு விலக, பஹதூர் கதவின் முனை மேல் மோதி, கதவு பைத்தியக்காரத்தனமாகச் சாத்திக் கொண்டு திறந்தது. பஹதூரைக் கணேஷ் எழுந்திருக்க விடவில்லை. அவர் கணேஷின் மேல் பாய்ந்தார். பஹதூர் எழுந்திருந்தான். அவனிடம் நிறைய ஸ்டாமினா இருக்க வேண்டும். மறுபடியும் இருவரும் சேர்ந்து கொண்டு அவனை அடித்தார்கள். கணேஷ் உடம்பு முழுவதும் தனித்தனியாக உடைந்து போனது போல் உணர்ந்தான், விழுந்தான்.
"பஹதூர், ஜன்னலுக்கு வெளியே ஒரு துப்பாக்கி கிடக்கிறது, எடுத்துவா," என்றார் அந்த ஆள்.
பஹதூர், வெளியில் சென்றான்.
அவர் கணேஷைப் பார்த்து, "எங்கே





சுட வேண்டும்? நெற்றிப் பொட்டிலா, அடிவயிற்றிலா?" என்று கேட்டார்.
கணேஷ் நேராக அவரைப் பார்த் தான்.
"என்னைக் கொல்வதால் என்ன லாபம்?" என்றான்.
"என்னை நீ பார்த்ததே தப்பு."
"என் மனத்தில் நான் பார்த்த செய்தி புரிவதற்கு முன்பே என்னைக் கொன்று விட......."
"பேசாதே! பஹதூர்! துப்பாக்கி அகப் பட்டதா?"
பதிலில்லை. கணேஷ், "அந்தக் காலண்டர் அழகாக இருக்கிறது!" என்றான்.
"சாவதற்குமுன் அவ்வளவு அலட்சிய மாக இருப்பதாகக் காட்டிக் கொள்கிறாயா? காலண்டர் அழகாக இருக்கிறதா என்பது உன்னுள் ஈயம் பாய்ந்ததும் சொல். என்ன!"
"ஈயம்!"
"ஆம். பஹதூர்!"
"ஜீ ஸாப்!" என்று ஜன்னலுக்கு வெளியே இருந்து பதில் வந்தது.
"கிடைத்ததா?"
"புல் அதிகமாக வளர்ந்திருக்கிறது ஸாப்! அதோ பாருங்கள்!"
"என்ன?"
"ஜீப் வருகிறது! போலிஸ் ஜீப் போலத் தோன்றுகிறது!"


அவர் சட்டென்று ஜன்னலுக்குப் போய்ப் பார்த்தார். "பஹதூர்! ஜல்தி! கராஜுக்குப் போ! காரைக் கிளப்பு!" கணேஷின் பக்கம் திரும்பினார்.
அவர் பார்வையில் இருந்த கொடூரம் கணேஷைக் கலவரப்படுத்தியது.
"எலக்ஷன் ஜீப்பாக இருக்கும்," என்றான்.
"பாஸ்டர்ட்! உன்னை....உன்னை....." என்று அருகில் வந்தார்.
"ஈஸி ஸார்! ஈஸி! என்னைக் கையால் கொல்வதற்குச் சற்று நேர மாகும்." கணேஷ் தன்னைப் பந்தாகச் சுருட்டிக் கொண்டான்.
வெளியே ரோலிங் ஷட்டர்கள் திறக்கும் சப்தம் கேட்டது. காரின் கதவை மூடும் சப்தம் கேட்டது. அவசர அவசரமாக உதறி, செல்ஃப் எடுத்து, சீறி கார் சப்தம் அருகில் வந்தது.
"ஸாப்! வேகமாக வருகிறார்கள்!"
அவர் அடித்த அடி கணேஷின் தோளில் அரை குறையாக விழுந்தது.
"ம்! மெதுவாக நிதானமாக அடி யுங்கள். அவசரமில்லை."
பூட்ஸ் காலால் உதைத்தார்; அதைப் பிடித்துக் கொண்டான்.
காரின் ஹார்ன் கேட்டது. "ஸாப்!"
காலை உதறினார். மறுபடி ஜன்னல் வரை சென்று எட்டிப் பார்த்துவிட்டு, "டேய்! உன்னை நான் மறக்க மாட்டேன், உன்னை நான் கொல்லுகிறவரை மறக்கப் போவ தில்லை?" என்றார்.
"ஸார்! என்ன அவசரம்!"
ஓடினார். ஒரு காலில் பூட்ஸ் இல்லாமல் ஓடினார். கணேஷினால் பிரயத்தனத்துடன் தான் நகர முடிந்தது. நொண்டி வந்து ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான்.
மண் ரோடில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஒரு ஜீப் வந்து கொண்டிருக்க, ஒரு கறுப்பு அம்பாஸிடர் அதி வேகமாக வீட்டைவிட்டுக் கிளம்பி, சரியாகச் செப்பனிடப்படாத குறுக்குப் பாதையில் அந்த ஜீப்பை எதிர்கொள்ள விருப்ப மில்லாமல் ஒரு விரியும் கோணத்தில் விலகிச் சென்றது.
ஜீப் நின்றது. யோசித்தது.
"துரத்துங்கள்! துரத்துங்கள் அதை!" என்று கணேஷ் கத்தினான். அது கேட்டிருக்காது.
அந்தக் கார் புழுதிப் படலத்தின் ஊடே ஸ்டண்ட் படத்தில் போல் குதித்துக் குதித்து மெயின் ரோடை நோக்கிச் செல்ல, தயங்கின ஜீப் கணேஷை நோக்கி வந்தது.
கணேஷ் "சே!" என்று அலுத்துக் கொண்டான். மெயின் ரோடை அடைந்த அம்பாஸிடர் வடக்குப் புறமாகச் செல்வ தைப் பார்த்தான்.
ஜீப் வீட்டு வாயிலில் வந்து நின்றது. அதிலிருந்து மோனிக்கா குதித்து இறங் கினாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். "இங்கே இருக்கிறேன்!" என்றான் கணேஷ்.
அவனைப் பார்த்துச் சிரித்தாள். இன்ஸ்பெக்டர் ராஜேஷும் இரண்டு மூன்று கான்ஸ்டபிள்களும் இறங்கினார் கள்.
"சீக்கிரம் வாருங்கள்!" என்று கத்தினான் கணேஷ்.
மோனிக்கா உள்ளே நுழைந்து, "மை காட்! என்ன ஆயிற்று? கணேஷ்! ஏன் இவ்வளவு ரத்தம்?" என்றாள்.
"சண்டை! அவர்கள் என்னை அடித்து விட்டு ஓடி விட்டார்கள். ராஜேஷ்! க்விக்....அந்த அம்பாஸிடரைத் தொடருங்கள்."
"அதில் யார் இருக்கிறார்கள்?"
"குற்றவாளி!"
"யார்?"
"சொல்கிறேன்."
"மற்றொரு ஜீப் வந்து கொண்டிருக் கிறது."
"நேரம் தாழ்த்தாதீர்கள். உடனே அதைத் தொடருங்கள். வடக்குப் பக்கம் மெயின் ரோடில் சென்றது."
ராஜேஷ் உடனே வெளியே ஓடினார்.
"அனிதா எங்கே?" என்றாள் மோனிக்கா.
"அந்த அறைக்குள் தாளிட்டுக் கொண்டிருக்கிறாள்."

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: என். சுந்தர்.
வயது: 21
முகவரி: மன்ராசி எஸ்டேட், அக்கரப்பத்தனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை.




பெயர்: எம். பலீல்.
வயது: 20
முகவரி: 83, நாவலப்பிட்டி வீதி, உலப்பனை.
பொழுதுபோக்கு: வானொலி, கிரிக்கெட்.



பெயர்: எஸ். பிரபாகரன்.
வயது: 24
முகவரி: LUZERNER STR-5, 28325 BREMEN, GERMANY.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: ஏ. மேரி இமெல்டா.
வயது: 13
முகவரி: 326/1, வீரநகர், என்.சி.வீதி, திரு மலை.
பொழுதுபோக்கு: ரீ.வி., வானொலி.



பெயர்: எம். சாக்கீர்.
வயது: 18
முகவரி: 173/3, நௌபர் மாவத்தை, சீனன்கோட்டை, பேருவளை.
பொழுது போக்கு: வானொலி, சினிமா.



பெயர்: ஏ. அப்துல் ஜலீல்.
வயது: 26
முகவரி: P.O.BOX - 22210, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எச். நியாஸ் முகமட்.
வயது: 17
முகவரி: 110, பாடசாலை வீதி, கல்ஹின்னை.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: எம். மாஹிர்.
வயது: 18
முகவரி: 11/1, உமர்தீன் ஒழுங்கை, காத்தான்குடி-4
பொழுது போக்கு: பேனாநட்பு, வானொலி.

பெயர்: ஏ. பத்மநாதன்.
வயது: 27
முகவரி: HALDEN STR - 19, 6020 EMMENRUCKE, SWITZERLAND.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். ஸ்ரீபன்.
வயது: 20
முகவரி: 407/1, பிரின்ஸ் ஒஃப் வேல்ஸ் அவனியு, கொழும்பு-14.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். சுதாகரன்.
வயது: 21
முகவரி: 297, கடற்படைத்தள வீதி, திரு மலை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: அனீஸ் எம். ஷாகீர்.
வயது: 26
முகவரி: 65/1, கும்புகந்துறை, தெல்தெனிய, கண்டி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

# கனவு மெய்ப்பட வேண்டும்



சுமதி, அந்த ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்த போது, இன்னும் விடிந்திருக்கவில்லை. ஆங்காங்கே விளக்குகள் அழுது கொண்டு எரிந்தாலும், இருள் குத்துச் செடிகளைப் போல முடிச்சு முடிச்சாய் பிளாட்பாரத்தைக் கவிந்து கொண்டிருந்தது.

'ஹோ' வென்றிருந்த பிளாட்பாரமும், ஆள் அரவமற்ற அமைதியும் அவளைப் பயம்கொள்ள வைத்தன.

இருட்டு, சுமதியைப் பயங்கொள்ள வைக்கிற விஷயங்களில் ஒன்று.

மனிதர்களைப் பயம் கொள்ள வைக்கிற விஷயங்கள் உலகில் அனேகம். சிலருக்குப் பாம்பு. சிலருக்குப் பூச்சி. சிலருக்கு வாழ்க்கை கூடப் பயம் தருகிறது.

சுமதிக்கு நினைவு தெரிந்த நாட்களில் இருந்து, இருட்டு, பயம் தருகிற நெஞ்சக் குலையைச் சில்லிட வைக்கிற, நினைத்தாலே மனம் பதைபதைக்கிற அனுபவமாகவே இருக்கிறது.

வயது நிறைந்து, கணேசனைக் கைப்பிடித்த நாளாய், ஏன், கணேசன் என்கிற மனிதனை அவள் அறியவந்த நாள் முதலாய், இருட்டு என்கிற அனுபவம் பின்னுக்குப் போய்விட, கணேசனே அவளை அச்சம் ஊட்டுகிற முதற்பொருளாய் மாறிப்போனான்.

காலியாய்க் கிடந்த ஒரு சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தாள். அவளுக்குச் சற்று தூரத்தில் ஒரு முதியவன் சுருட்டி மடக்கிப் போர்த்துக் கொண்டு படுத்துக் கிடந்தான்.

அந்த நேரத்தில் அவளுக்குத் துணையாய் வந்திருக்கிற ஒரே மனித ஜீவனாகிய அவனை- நன்றியுடன் நோக்கினாள்.

ரயில் நிலையம் கொஞ்சம் கொஞ்சமாக உயிர் பெறத் தொடங்கி இருந்தது. ரயில் நிலைய அலுவலர்கள் நடமாடத் தொடங்கியிருந்தார்கள். கணேசன் எந்த நிமிஷமும் வரக் கூடும்தான். வந்தான் எனில், அந்த இடத்திலேயே அவள் கூந்தலை இழுத்துப் போட்டு, அத்தனை மனிதர்களும் பார்க்கும்படி அவளை அடித்துச் சிறுமைப்படுத்தத் தயங்காதவன்தான் கணேசன்! அவனின் அந்த ஒரு சிறுமை காரணமாக அந்த ரயில் நிலையமே தலை கவிழக் கூடும்தான்.

சுமதி, அவள் அப்பாவிடம் எத்தனை முறை சொல்லியிருக்கிறாள், அவர்களின் வீடே ரயில் நிலையத்தை ஒட்டித்தான் இருந்தது. நினைத்துக் கொண்டு, வெளியே வந்தால், ஏதேனும் ஒரு ரயில் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். மாடிகளில் துணி காய்வதைப் போல, ரயில் பெட்டியில் ஜன்னல்களில் மனிதத் தலைகளைக் காணலாம்.

"கண்ணா! இந்த ரயில்கள் இப்படிச் சதா தொன தொனன்னு ஓடிக்கிட்டு இருக்கிறது. உனக்குச் சங்கடமா இல்லையா?"

அப்பா, அவளைக் கண்ணா என்றுதான் கூப்பிடுவார். ஆண் குழந்தைகளோ, அன்றி அவளைத் தவிர வேறு குழந்தைகளோ இல்லாத அப்பா, அவளை அன்பை மட்டுமா ஊட்டி வளர்த்தார்? உயிரையே பாலாகச் சொரிந்து அல்லவா வளர்த்தார்?

அப்பாவின் வார்த்தைகளில், இப்படி விசித்திரமான பதப்பிரயோகங்கள் கிடைக்கும். சுமதி சொன்னாள்:

"அது என்னப்பா? தொனதொனன்னு பேசறதைச் சொல்லுவாங்க. நீங்க வண்டி போறதைச் சொல்றீங்களே....."

அப்பா சிரித்துக்கொள்வார். அப்பா தமிழாசிரியர். வெறும் தமிழாசிரியராக அவர் இல்லை. தமிழைக் கசடறக்கற்றவர். மாணவர்களுக்கு வஞ்சம் இல்லாமல் வாரிக் கொடுத்துச் சொல்லிக் கொடுத்தவர்.

"தொன, தொனன்னா, சும்மா- அல்லது அடிக்கடின்னு அர்த்தம். இப்போ, யோசிச்சுப் பாரு. அந்த வண்டிகள் தொடர்ந்து, அடிக்கடி போறதை அந்த வார்த்தை சரியா வெளிப்படுத்துது இல்லையா?"

சுமதி மனசுக்குள்ளேயே எழுதி எழுதி, 'டிக்' போட்டு "சரிதாம்ப்பா" என்றாள்.

"ரயில்கள் இப்படித் தொனதொனன்னு போறது உனக்குச் சங்கடமா இல்லையே...?"

"இல்லைப்பா! சந்தோஷமா இருக்கு."

"சந்தோஷமா?"

"பின்னே! வாழ்க்கை, சதா இயங்கறது. அது மாற்றம் பெறும்; வேறு முகம் காட்டும்; தயங்கி நிற்கும்; தறி கெட்டு ஓடும்; ஆனா, எந்தக் காரணத்தைக் கொண்டும் நிக்காதுன்னு அடிக்கடி சொல்லுவீங்களேப்பா! அதை, இந்த ரயில் ஓட்டத்தைப் பார்த்தாதான் புரிஞ்சுக்க முடியுது."

அப்பா, சுமதியின் தலையில், எட்டி, வலிக்கக் கூடாது என்கிற நிச்சயத்தோடு குட்டுவார்.

இது அப்பாவின் பாராட்டும் பாணி!

பாராட்ட எத்தனை வார்த்தைகள் உலகில் உண்டு. அப்பா வார்த்தைகளின் உதவியை, இதற்கு மட்டும் ஏனோ நாடவே மாட்டார். செல்லமாகக் குட்டுவார்.

"என்னடா கண்ணா, வலிச்சுட்டுதா? இந்தப் பிள்ளையை மன்னிச்சிடு. முட்டாள் பிள்ளை...." என்பார் அப்பா. தன்னை அவளுக்குப் பிள்ளை என்பார் அடிக்கடி.

"உங்....அப்பா..." என்று தலையைத் தேய்த்து விட்டுக்கொள்வாள் சுமதி.

வலிக்கிற மாதிரியும், அப்பா ஓங்கிக் குட்டிவிட்டது மாதிரியும் ஒரு பாவனை அது. பாவனைகளே அந்தரங்க நண்பர்களுக்கு இன்பம் தருபவை. பாவனையின் மறுபெயர் ஊடல்.



சுமதி எட்டி அவர் வாயைப் பொத்துவாள்... லேசான, நிச்சயம் வலிக்காத, இந்தப் பொய்க் குட்டுக்கே, தனக்கு வலித்து விடுமோ என்று துடித்துப் போன அப்பா, இன்று முன் இரவில் நிகழ்ந்ததை அறிந்தால் எப்படித் துடித்துப் போவார்? அந்த நினைவு வந்ததுமே, அவள் உடலும் மனசும் பதறி நடுங்கின. அன்றும் கணேசன் மிகத் தாமதமாகத்தான் வீடு திரும்பினான். சுமதி மணியைப் பார்த்தாள்.

**தமிழக எழுத்தாளர் 'பிரபஞ்சன்' எழுதிய சிறந்த கதைகளில் ஒன்று இது! இது ஒரு பெண்ணின் கதை. பெண்ணை உணர்ச்சிகள் உள்ள மனுஷியாக அங்கீகரித்து அற்புதமான நடையில் எழுதப்பட்ட கதை. முரசில் வெளிவரும் மற்றொரு முத்தான தொடர் இது!**

**அங்கம் 01**

**பிரபஞ்சன்**

பதினொன்று இருபது.

லேசாக ஆடிக்கொண்டே உள்ளே நுழைந்தான் அவன்.

அவனிடமிருந்து எழுந்த பழ வாசனை வீட்டை நிரப்பியது. சுமதிக்கு அலுவலக வேலைகள் மிகுதியாய் இருந்தன. வீட்டுக்கும் ஃபைல்களை எடுத்துக் கொண்டு வர வேண்டியிருந்தது.

அல்லிக் குளம் ரயில் நிலையத்தை ஒட்டிய குடிசைகளைக் காலி பண்ண அரசு உத்தரவிட்டிருந்தது. மத்திய அரசுக்குச் சொந்தமான அந்த இடத்தில், அத்து மீறிக் குடிசை வாசிகள் ஆக்கிரமிப்பு நடத்தி விட்டதாக அரசு அபிப்பிராயம் தெரிவித்து இருந்தது.

இந்த விஷயம், சுமதியின் பார்வைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

அன்று காலை முதல் மாலை இருட்டும் வரை சுமதி அந்த 'ஆக்கிரமிப்பாளர்களைச்' சந்தித்துப் பேசினாள்.

எண்ணெய் காய்ந்த பரட்டைத்தலை, கிழிந்து தொங்கிய ஆடை, நம்பிக்கை சுத்தமாய்த் தீய்ந்து போன கண்கள், பிள்ளை பெறுவதைத் தவிர பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு வேறு வேலையே இல்லை என்பது போல் பெற்று வைத்திருக்கும், நைந்த ஈயப்பாத்திரம் போன்ற பெண்கள்!

இந்த 'ஆக்கிரமிப்பாளர்'களைப் பார்க்க மனசுக்குள் வருத்தமும் நோவும் ஏற்பட்டன சுமதிக்கு.

மாபெரும் ஜனநாயக நாட்டின் அரசு, தன்னாலேயே சீரழிக்கப்பட்ட அப்பாவி மக்களின் மேல் தொடுக்கும் யுத்தத்துக்குத் தானும் ஒரு கருவியாகி விட்டதை உணர்ந்து அரச அதிகாரியாகி இருக்கும் தன் துரதிருஷ்டத்தை எண்ணிக் குமைந்து போன சுமதி, அந்த மக்களின் கண்ணீர் வாசனை வீசும் மன்றாடும் விண்ணப்பங்களை கணேசன் வரும் வரைக்கும் படித்துக் கொண்டிருந்தாள்.

அதிலேயே மூழ்கிப் போயிருந்தவளை, கணேசனின் குரல்தான் மண்ணுக்கு இழுத்தது.

"என்னடி...நான் வருவது கூடத் தெரியாமல், அப்படி என்ன படிப்பு...?" என்றான் கணேசன் சுமதியைப் பார்த்து.

"ஒன்றுமில்லை. 'ஃபைல்'பார்க்க வேண்டியிருந்தது......" என்றவள், அவன் கையிலிருந்த பிரீப் கேஸை வாங்கப் போனாள்.

கணேசன் அவளை நெட்டித் தள்ளினான்.

"ஃபைல் பார்க்கிறாளாம், ஃபைல். பெரிய ஆபீசர். கவர்மெண்ட் செகரட்டரி.... நான் வெறும் தமிழ் வாத்தியார் தானே...." என்றவன் கையெட்டும் தூரத்திலேயே நின்ற சுமதியைக் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

**(தொடர்ந்து வரும்)**

---

# தூரம்

காலை வேளையின் நிசப்தத்தை குலைப்பது போல கடும் பனியையும் பொருட்படுத்தாது, தாண்டிக்குளம் தடை முகாமைத் தாண்டி வன்னிக்குச் செல்வதற்காக மக்கள் கூட்டம் தவம் கிடக்கிறது. பறவைகள்கூட உறக்கத்தில் இருந்து எழும்பவில்லை. அருகில் நிற்பவரின் முகம்கூடச் சரியாக தெரியாதபடி பனிப்புகார்.

இளைஞர்கள், வயதானவர்கள், நோயாளர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் பனியில் நடுங்கியபடி தடை தாண்டுவதற்காக தவம் கிடக்கிறார்கள். அந்த நூற்றுக்கணக்கானவர்களில் ஒருவனாக குமாரும் தவம் கிடக்கிறான். இன்றுடன் நான்காவது நாளாக காத்திருக்கும் குமாருக்கு பனி குளிராவிட்டாலும் பக்கத்தில் இருப்பவர்கள் பனிக்குளிரில் படும் இன்னலைப் பார்க்கும்போது, இயற்கைகூட எதிரியாகிவிட்டதுபோல அவனுக்குத் தோன்றியது.

குமார் தாண்டிக்குளத்தில் தவம் கிடந்தாலும் அவனின் மனம் தாண்டிக்குளம் தடை முகாமையும் தாண்டி தந்தையின் மரணப்படுக்கைக்கு அருகே சென்று விடுகிறது. 'இன்றைக்காவது வன்னிக்குச் செல்ல அனுமதிப்பார்கள்; நான் வீடு சென்றுவிடலாம்' என்று குமாரின் மனம் அடிக்கடி தனக்குத்தானே சொல்லிக் கொண்டது.

**விரக்தியும் வேதனையும் அவன் விரும்பி ஏற்றுக்கொண்டவையல்ல; அவை அவனைத் தேடி வந்தவை......**

அவனின் மனதில் ஏதேதோ சிந்தனைகள் தோன்றி மறைந்தன. எங்களுக்கெல்லாம் ஏன் இந்த நிலை? தேவையற்ற யுத்தம், அநியாய உயிரிழப்புக்கள், எத்தனை கஷ்டங்களையெல்லாம் மக்கள் சுமந்து கொண்டு காலத்தைக் கழிக்கிறார்கள். யாருக்காக இந்த யுத்தம்? எதற்காக இத்தனை இழப்புக்கள்? இந்தக் கேள்வியை ஆயுதம் ஏந்தியுள்ள எவரிடம் கேட்டாலும் விடை ஒன்றுதான்: "மக்களுக்காகவே யுத்தம்!"

ஒரு நாட்டின் ஒரு பகுதிக்குள் சென்றுவர ஏன் இத்தனை கஷ்டங்கள்? தடைகள்? சர்வதேச எல்லையை கடப்பது போன்ற உணர்வே அனைவரது மனதிலும் காணப்பட்டது. எப்பொழுது இந்த நிலை மாறுமோ? இந்த யுத்தம் இன்னும் எத்தனை சோக வரலாறுகளைப் படைக்கப்போகின்றனவோ? முடிவே இல்லாத இந்த யுத்தத்தால் முகவரியே தெரியாமல் போன எத்தனை ஆயிரம் குடும்பங்கள்!

சனங்கள் திடீரென தமது வரிசையை



சரிப்படுத்திக்கொள்ள முனைந்தது குமாரின் சிந்தனையைக் குலைக்கின்றது. இரவு நேரக் கடமையில் இருந்த படையினர் தமது கடமையை முடித்துக் கொண்டு செல்ல வேறு படையினர் பகல் நேரக் கடமையைத் தொடங்குகிறார்கள். சற்று நேரத்தில் படையினரில் ஒருவர் சனங்களை நோக்கி நடந்து வருகிறார்.

அனைவரது முகங்களிலும் சந்தோசமான எதிர்பார்ப்பு. இன்றைக்குப் பிரயாணத்தைத் தொடர அனுமதிக்கப்போகிறார்கள் என்ற ஆதங்கத்தில், அந்தப் படை வீரனின் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைகளுக்காக அனைவரும் அமைதியாகிறார்கள்.

படை வீரனின் உதட்டிலிருந்து வார்த்தைகள் வெளியேறுகின்றன: "அதுட்டத் யன்ன பா, ஒக்கம ஆப்பகு யன்ன!" (இண்டைக்கும் போக முடியாது. எல்லாரும் திரும்பிப் போங்கோ). அனைவரது முகங்களும் சோகமாக மாறிவிட்டன, சிலர் அழுது கொண்டு அதிலேயே இருக்கிறார்கள். பலர் ஏதேதோ முணு முணுத்துக்கொண்டு கலைந்து செல்கிறார்கள்.

**இமையாணன்**

வேறு வழியின்றி திரும்பிவர முனைந்த குமாருக்கு தடைமுகாம் விளம்பரப் பலகை கண்ணில் தென்பட்டது. அதிலிருந்த வாசகங்கள் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. 'தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி', அடுத்த விளம்பரப் பலகையில் 'நன்றி மீண்டும் வருக'.

பிரயாணம் கைகூடாது திரும்பி வந்த குமார், வவுனியா பஸ் நிலையத்தில் தனது பழைய நண்பன் விக்கியை சந்திக்கிறான். குமாரால் நம்ப முடியவில்லை,

விக்கி ஐந்து வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியா சென்றவன் ஏன் இங்கு வந்தான். விக்கிதானா, அல்லது வேறு யாரோவாக இருக்குமோ என்று சிந்திப்பதற்கிடையில் விக்கியே ஓடிவந்து குமாரைக் கட்டிப்பிடித்துத் தழுவிக் கொள்கிறான். இருவரும் நட்பைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

விக்கி குமாரிடம் சொல்கிறான்- "குமார்! என்னை இங்கு சந்திப்பன் என்று நீ எதிர்பார்த்திருக்கமாட்டாய், நானும்கூட இங்கே வரவேணும் என எதிர்பார்க்கவில்லை. போனகிழமை எங்கட தாத்தா கொழும்பில இறந்துவிட்டார். எங்களுக்கு உடனே அறிவித்தார்கள் அன்று இரவே நானும் அம்மா, அப்பா எல்லாரும் வந்துவிட்டோம். அடுத்த நாள் இறுதிக் கிரியைகள் செய்து முடித்து விட்டோம். அடுத்த கிழமை திரும்பி அவுஸ்திரேலியாவுக்குப் போகிறோம்." கதைத்துவிட்டு விக்கி விடைபெற்றுச் செல்கிறான்.

குமார் தன் நிலையை எண்ணிப்பார்க்கிறான். விக்கியின் பிரயாணத்துடன் தனது பிரயாணத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கிறான். தாண்டிக்குளம் தாண்டினால் வெறும் முப்பது மைல் தூரம் மட்டும்தான்.

குமாரின் வரவுக்காக நான்கு நாட்கள் காவல் கிடந்த அவன் தந்தையின் உடல் நான்காவது நாள் தீயில் சங்கமிப் பதற்காக மயானம் நோக்கி இறுதிப் பயணத்தைத் தொடர்கிறது.

# கப்பலேறிப் போயாச்சு..!

— ஜெயமணி —

'டக்.டக்.'

கதவைத் திறந்த சுரேஷ், மாமாவைப் பார்த்ததும் ஹோவெனக் கதறத் தொடங்கினான்.

பயணக் களைப்பு, தூக்கக் கலக்கத்துடன் சோர்ந்துபோய் நின்ற மாமா கதிரவன் நிறையப் பயந்தார்.

"என்ன, என்னடா சுரேஷ்? எதுக்கு கதறுகிறாய்? அண்ணன் ரவி எங்கை?"

மேலே கேட்கத் தயக்கமாக இருந்தது. எங்கிருந்து எந்தச்



செய்தி காதில் விழுமோ என்ற நடுக்கம் எல்லோருக்கும்.

"மாமா! ரவி அண்ணா இன்றைய பிளேனிலை யாழ்ப்பாணம் போய்விட்டார்."

"என்ன யாருக்கென்ன...?"

"மாமா, உங்களைக் கப்பலேற்றி நீங்கள் வந்துசேருமுன்னர், உங்களை வழியனுப்பிய தம்பி இ...இ....இறந்துபோன செய்தி... எங்களுக்கு...வந்துட்டுது....மா....மாமா... வந்திட்டுது."

விம்மல்களுக்கிடையே சொல்லி முடித்துவிட்டு அழுதான் சுரேஷ். கதிரவன் அப்படியே ஒடுங்கிப்போய் நிலத்தில் குந்திக் கொண்டார்.

'என்ன அக்கிரமம் இது!

முந்தாநாள் என்னைப் பயணம் அனுப்ப வந்தபோது எத்தனை குதூகலமாகச் சொல்லி அனுப்பினான். 'மாமா அண்ணாக்களிடம், முக்கியமாக சுரேஷ் அண்ணாவிடம் சொல்லுங்கோ- எனக்குப் பாஸ் தந்துட்டாங்க. அநேகமாக அடுத்தடுத்த கப்பலுக்கு வந்து உங்களை நேரில் சந்திப்பேன் என்று.'

முகமெல்லாம் பூஞ்சிரிப்பாக அப்படியொரு களையும், தேஜசும், அது இப்படிப் போவதற்காகவா?'

கப்பலேற்றி விட்டு உறவினர்களுக்கு கையசைத்து விடை கொடுப்பவர்களுக்கு மத்தியில் பளிச் என்று உயரமாய் கையை வீசி ஆரவாரம் செய்தவனை, அவனோடு சேர்ந்து நின்று பிரிவைப் பகிர்ந்துகொண்டவர்களைப் பார்த்து வேதனைப்பட்டு மண்ணை விட்டுச் செல்லும் பாரம், வெறுமை நெஞ்சை நெருட சோர்வாகத்தன் கையைப் பதிலுக்கு அசைத்தவர் திகைத்துப்போய் எழுந்து கப்பலின் அசைவில் சாிந்தார்.

அவரை மட்டுமல்ல, அத்தனைபேரையும் திகைக்க வைத்தது கரையில் கேட்ட பலத்த கூச்சல். தாறுமாறாக கும்பல் சிதறிச் சிந்தும் காட்சி சிறியதாகத்தெரிந்தது. வெடியதிர்வைத் தொடர்ந்து படபடத்த துப்பாக்கி வேட்டுக்கள் அடங்கச்சிறிது நேரம் பிடித்தது.

என்னவென்று யாரைக் கேட்பது.

கணணுக்கெட்டியவரை விரிந்திருக்கும் கடல் நீரையா?

எங்களுடைய மனிதர்கள் யாராவது மோதலுக்கிடையில் அகப்பட்டிருப்பார்களோ....?

சந்தேகம் தந்த பயத்தில் நிறம் மாறி வெளுத்துப்போன முகங்கள்...தமக்குள்ளேயே அடங்கிப்போய் அமைதி காத்தனர். கப்பல் அசைந்து, மிதந்துகொண்டிருந்தது.

ஓர் இறுக்கமான, அழுத்தம் நிறைந்த பாழ்வெளிக்குள்ளிருந்து சுகமான பகுதிக்குள் விட்டமாதிரி, கரை தட்டி சுங்கப் பரிசோதனை முடிச்சு, களைப்போடும், தவிப்போடும் வந்து சேர்ந்ததே பெரிதென வந்தால்... இங்கே....?

இன்னும் சுரேஷ் அழுதுகொண்டிருந்தான்.

"மாமா நானும் தம்பியும் எப்பிடி இருப்போம்? நெருங்கிய நண்பர்கள்போல உங்களுக்கே தெரியும். அண்ணனுக்கு மட்டும் ரிக்கட் குடுத்தாங்க எனக்குக் கிடைக்கல்லை. நிச்சயமாக அவன் எனக்குத்தனியாக லெட்டர் தந்திருப்பான். தரலியா மாமா?"

ஏக்கமாக கேட்பவனிடம் எப்படித் தருவது?

அவருக்குத் தெரியாததல்ல, அவர்களது நெருக்கம். நிச்சயமாகத் தன் நினைவுகளை, பிரிவை வந்து சேர்ந்து பேச இருக்கும் கனவுகளை வரி வரியாக ஆசையாக எழுதியிருப்பான். அதைப் பார்த்து இவன் இன்னும் துயரத்தில் வெடிக்கப்போகிறான்.

என்ன செய்வது? கொடுக்கவா? இல்லை கொஞ்சம் ஆறவிட்டுக் கொடுக்கவா? புரியாத குழப்பத்தில் தவித்துக்கொண்டிருக்கிறார் கதிர் மாமா.

சொல்லுங்கள் என்ன செய்ய?

**அண்ணியை முதன்முதலில் பார்த்த அகல்யாவுக்கு ஏமாற்றம் நெஞ்சை அடைத்தது.**

# அண்ணி

ரூபராணி

அகல்யா கட்டிலில் கண் விழித்தபடி கிடந்தாள். எழும்புவதற்கு மனமில்லாத உடம்பு கனதியான கம்பளிக்குள் புதைந்து கிடந்தது. அவள் அடிவயிற்றில் அடிக்கடி ஒரு அசாதாரணவலி, அதன் வேதனை அவள் முகத்தில் இடையிடையே தலைகாட்டி மறைக்கிறது. பள்ளிக்கூடம், பிள்ளைகள் என்று ஏழு ஆண்டுகளை எப்படியோ கழித்து விட்டாள் அகல்யா. சனி, ஞாயிறு என்றால் ஒரு ஆறுதல் அவளுக்கு.

சுவர்க்கடிகாரம் ஒன்பதுமுறை ஒலித்தது. அகல்யா ஒருக்களித்துப் படுத்தபோது பார்வை அவள் அண்ணியின் படத்தில் பதிந்தது.

கட்டையாய்ச் சடைத்துச் சுருண்ட கேசம், ஒடிந்து விழும் மெலிவு, கறுப்பு நெற்றியில் சின்னதாய் ஒரு ஸ்ரிக்கர் பொட்டு. ஸ்கேட் பிளவுசில் நின்று சிரித்தது.

அண்ணியை அடையாளங்காட்ட இவை போதும் "இவளா என் அண்ணி?" அகல்யா விட்ட பெருமூச்சு அவள் ஏக்கத்தை வெளியே தள்ளியது.

'ச்சே இப்படியொரு அண்ணியையா நான் எதிர் பார்த்தேன்?' அப்சரசாய் ஒரு அழகிய பெண் அவள் கண்முன் தோன்றி மறைந்தாள்.

'அண்ணாவுக்கு மட்டும்.. எப்படிப் பிடிச்சது? நகை நட்டு என்று ஒரு பொட்டுத் தங்கம்கூட அவள் உடம்பில் இல்லையே. ஆனா ஒண்ணே ஒண்ணுதான் உண்டு அந்த உதடுகளில் எப்போதும் மாறாத புன்னகை.'

நினைவுகளில் நீந்திய அகல்யாவுக்கு அவள் அண்ணனிடம் டாக்டர் சொன்னது முள்ளாக உறுத்தியது.

"உங்கள் தங்கைக்கு கருப்பை வாயிலில் ஒரு கட்டி வளர்ந்திருக்கு. இதைவிட்டு வைத்தால் ஆபத்து. கூடியசீக்கிரம் ஆப்பரேஷன் செய்ய வேணும். டாக்டர் சித்திரவேல் சிறந்த நிபுணர். அவருடைய தனியார் மருத்துவமனையில் செய்வதாயின் பத்தாயிரம் ரூபாய் செலவாகும்!"

பாவம் அண்ணா, பத்தாயிரத்துக்கு எங்கேபோவார்? உழைத்த பணமெல்லாம் சேலை, சட்டை, பிறெண்ட்ஸ் களியாட்டு என்று வீணாக்கியதை எண்ணி வருந்தினாள்.

நடுத்தர குடும்பத்தில் பிறந்த அகல்யாவுக்கு ஒரே ஒரு அண்ணன். ஒருவர் பின் ஒருவராய் பெற்றவர்களை இழந்து இருவராய் வாழ்ந்தார்கள். அகல்யாவுக்கு தந்தை தாய் எல்லாமே அண்ணன் ஆதவன்தான்.

அவன் தங்கைக்காக வாழ்ந்தான். வயசு முப்பத்தைந்தைத் தாண்டியும் கலியாணத்தைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. தங்கைக்காக மாப்பிளை வேட்டையில் இறங்கினான். சாதி சமயம் சீதனம், சாதகம் என்றிப்படி எல்லாமே தட்டிப்போயிற்று. அகல்யா ஆசிரியத் தொழிலில் தன்னை மறந்தாள்.

"எனக்குக் கலியாணமே வேண்டாம் இன்னொருவனுக்கு மனைவியாய் இருப்பதைவிட காலம் பூராவும் உனக்குத் தங்கையாக இருக்கிறேன். நீ மட்டும் எனக்கொரு அண்ணியைத் தந்துவிடு!" என்று அடிக்கடி சொல்லுவாள் அகல்யா.

ஒரு நாள்... ஆபீஸ்விட்டு வந்ததும் "அகல்யா, உனக்கொரு அண்ணி கெடச்சாச்சு" ஆதவன் குழந்தையைப் போல் கை



தட்டிச் சொன்னான்.

"ஹாய், உனக்குக் கூடக் காதலிக்கத் தெரியுமா?"

"சும்மா போம்மா.... உன்னத்தவிர நான் வேறொரு ஜீவன மனசிலே போட்டதில்லை. ஆபீஸ்ல மானேஜர் நடராஜ்தான் இந்த அண்ணியப்பத்தி நெறயச் சொன்னார். வங்கியில் குமாஸ்தா. பெயர் மஞ்சுளா. ஆனா ஒண்ணு உனக்குப் புடிக்காத எதையும் நான் செய்யமாட்டன்." ஆதவன் உணர்ச்சி வசப்பட்டான்.

"பர்மிஷன் கிறான்ரட்" நறுக்கென்று சொன்னாள் அகல்யா. அவளுடைய குழந்தைத்தனத்தை எண்ணியதும் வாய் விட்டுச் சிரித்தேவிட்டான் ஆதவன்.

அண்ணியை முதன் முதலில் பார்த்த அகல்யாவுக்கு ஏமாற்றம் நெஞ்சை அடைத்தது. கலியாணம் ஆடம்பரமின்றி நடந்து முடிந்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன.

அண்ணியின் அன்பையும் பரிவையும் புரிந்து கொள்ளமுடியாமல் அகல்யாவின் இதயக் கதவு பூட்டியே கிடந்தது. இதற்குக் காரணம் அண்ணியின் தோற்றமா? இது அவளுக்கே கேள்விக்குறி. சிந்தனையிலிருந்து மெதுவாகத் தன்னை விடுவித்துக் கொண்ட அகல்யா எழுந்து சோம்பல் முறித்தாள். யன்னலைத் திறந்து தூரத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றாள். ஆப்பரேஷன்- பணம் இந்த இரண்டும் அவள் நிம்மதியைத் துரத்தியடித்துக் கொண்டிருந்தன.

அகல்யாவின் தோளை ஆதரவோடு தொட்டகரம் பட்டு அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அண்ணி புன்னகைத்து நின்றாள்.

"இந்தா பாரும்மா.. நீ எதுக்காகவும் கவலைப்படக்கூடாது. எல்லாம் நல்லபடியாய் முடியும். ஆப்பரேஷனுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய உன் அண்ணா போயிருக்கிறார்."

அகல்யா சிலையாகிப் போனாள்

அண்ணி தொடர்ந்தாள்.

"'பணம்' எப்படி என்று தானே யோசிக்கிறாய்? கேள்... உன் கலியாணத்துக்கென்று என் சம்பளத்தில் நான் சேமித்த பணம் உன் ஆப்பரேஷனுக்கு உதவப் போகிறதை எண்ண எவ்வளவு ஆறுதலாயிருக்குத் தெரியுமா? தைரியமாயிரு!" சொல்லிவிட்டு ஓசைப்படாமல் வெளியேறினாள் அண்ணி.

அகல்யாவின் ஆன்மா அண்ணி, அண்ணி என்று ஓலமிட்டது. அவள் கண்களில் இருந்து வழிந்த நீரில்.. அண்ணி.. பேரழகியாகத்தெரிகிறாள்.

# இந்த மானுடக் காதலெல்லாம்...

மாலை ஐந்து மணிக்கு வருவதாய்ச் சொன்ன டொக்டர் ஐந்தரை மணியாகியும் வரவில்லை. தனியார் மருத்துவமனைக்கே உரிய நேர்த்தியும் சுத்தமும் சுகந்தமான சூழ்நிலை அது.

போகும் வரும் வெள்ளையுடை தேவதைகளான நேர்ஸ்மாரை பார்த்துக்கொண்டிருந்தாள் நிரோஷா. ஜனவரி முதலாம் திகதி என்பதனாலோ என்னவோ நிறைய நோயாளிகளைக் காணோம். ஏதோ ஒன்றிரண்டு பேர் வருத்தம் தாங்காதவர்களே வந்திருந்தார்கள். முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல முதலாம் திகதியன்று மருந்தெடுப்பது நல்லதல்ல என்பது பலரின் அபிப்பிராயம் போலும்.

**"நீ... நீங்க நிரோஷாதானே? என்னை அடையாளம் தெரியேல்லையா?"**

"முக்கிய வேலை காரணமாக டொக்டர் இன்னும் அரை மணி தாமதமாகவே வருவார். மன்னித்துக்கொள்ளுங்கள்!" அவசர அவசரமாக வந்து ஒரு வெள்ளையுடை தேவதை மெதுவாகக் கூறியபடி சிரித்துச் சென்றாள். நிரோஷா காத்திருந்தாள். எப்படியும் இந்த பாடாய்ப் படுத்தும் பல்லை பிடுங்கி விடுவதென தீர்மானித்தே வந்திருந்தாள். விட்டுவிட்டு வலித்து உயிரை வாங்கிக் கொண்டிருந்தது கடைவாய்ப் பல்லொன்று.

"எக்ஸ்கியூஸ் மீ, இன்னும் டொக்டர் வரலியா?" கேட்ட குரலை எதிர்பாராது நிமிர்ந்தாள். "இ...இல்லை. அரைமணி லேட்டாகுமாம்..." கேட்டவன் சாவதானமாக பக்கத்து இருக்கையில் அமர்ந்து கொண்டான். 'இவனை எங்கேயோ பார்த்திருக்கிறோமே' சிறிதான சந்தேகத்தோடு நிரோஷா புன்னகைத்தாள். 'எங்கே?'-

"நீ...நீங்க நிரோஷா தானே? என்னை அடையாளம் தெரியலியா? நான் ரகு. 1993 ஏ.லெவல் ஃபிஸிக்ஸ் கிளாஸ். ஞாபகம் இருக்கா? சவிதா, ஸபானா, நீங்க, சுகன்யா, நளினா எல்லாரும் ஒண்ணாருப்பீங்க. நம்மளோட எல்லாம் கதைக்கவே மாட்டீங்க. ரொம்ப கர்வம்னு சொல்லி நான், ஆனந்து, ஜெஸ்மின், ருஷ்தி எல்லாம் அடிக்கடி வம்பிழுப்போமே! ஞாபகம் இருக்கா?" நீளமாகச் சொல்லி சிநேகமாய்ச் சிரித்தான்.

"அட.....ஆமா...ரகு....உங்கள சந்திச்சது ரொம்ப சந்தோசம். ஆமா, இப்போ என்ன செய்றீங்க? ஆனந்து, ருஷ்தி மற்றவங்க எல்லாம் எங்க? என்ன பண்றாங்க? நீங்க, அவங்க எல்லோரும் போட்ட கூத்துக்களை மறக்கத்தான் முடியுமா?"

நிரோஷாவுக்கு கடந்த காலம் ஞாபகத்



ஷர்மிளா இஸ்மாயில்

துக்கு வந்து போனது. எத்தகைய இனிமையான வசந்தகாலம் அது! கவலைகளின்றி கடமைகளின்றி களித்து மகிழ்ந்த கனவுலகக் காலம். மீண்டும் வருமா?

"நான் டீச்சிங் செய்றேன். ருஷ்தி வெளிநாடு போய்ட்டான். ஜெஸ்மின் கல்யாணம் பண்ணிக்கிட்டான். ஆனந்து என்ஜினியரிங் பெகல்டி..... ஆமா நீங்க என்ன செய்றீங்க? ஹஸ்பன்ட் என்ன செய்றார்? எத்தன பிள்ளைங்க? சவிதா, சபானா, சுகன்யா, நளினா எல்லாம் என்ன பண்றாங்க?" நிரோஷா பதில் பேசவில்லை.

"ஜெஸ்மின் கல்யாணம் பண்ணிட்டாரா?" மெதுவாகக் கேட்டாள். ரகு அழுத்தமாய்ப் பார்த்தான்.

"ம்.... உங்கள விரும்பினான். முடியாதுன்னு சொல்லிட்டீங்க. எத்தன காலம்தான் காத்திருக்கிறது? ஏன், இப்போ வருத்தமா இருக்கா?" நிரோஷா புன்னகைத்தாள்.

"வருத்தமா? அதெல்லாம் இல்லை. என்னவோ தெய்வீகக் காதல். மணந்தால் மகாதேவி. இல்லை மரணதேவி என்றெல்லாம் சொன்னாரே? ஒருநாளும் இந்த இதயத்துல வேறொரு பெண்ணுக்கு இடமில்ல. நீயில்லாம வேறொரு வாழ்க்கையில்ல; கனவிலும் நீ. நனவிலும் என் மூச்சிலும் நீ, பேச்சிலும் நீ என்றெல்லாம் எழுதினாரே! அவரு....இப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டதை நெனைக்க சிரிப்பு சிரிப்பா வருது. அவ்வளவுதான்."

"அதுவும்...சரிதான். இந்தக் காலத்துல காதல்- பணம், அழகு, தகுதி, தராதரம், தொழில் அது இதுன்னு புற இயல்புகளை வெச்சுதான் வருது இல்லையா? மனசையும் குணத்தையும் யார் பார்க்கிறாங்க? எல்லாம் அவங்கவங்களோட சுயநலத்தத் தான் நிறைவேத்திக்கிறாங்க. ஜெஸ்மினும் அப்படித்தான். இலட்சக் கணக்குல சீதனம், வீடு, வாகனம். உடனே 'ஆமா' சொல்லிட்டான். அதுவுமில்லாம நீங்கதான் 'மாட்டேன்னு' சொல்லிட்டீங்களே! திரும்பவும் உங்களை நினைச்சு, காத்திருக்க அவன் என்ன அந்தக் காலத்து தேவதாஸ் ஜாதின்னு நெனச்சீங்களா? இந்தக்காலத்து சராசரி இளைஞன். அவன் செய்தது சரிதானே?"

நிரோஷாவால் பதில் சொல்லமுடியவில்லை. சிரித்தாள். அவளின் சிரிப்புக்கு கீழே எங்கேயோ ஒரு மூலையில் ஏதோ சோகம், மெல்லியதாய்! உட்கார்ந்து கொண்டு இருப்பதாய் ரகுவுக்குப் பட்டது. ஆனால் அதைச் சொல்லவும் வழியின்றி மௌனித்தான்.

# பிரமைகள்

கனகசபை தேவகடாட்சம்

திருக்கோணமலை துறைமுக இறங்கு துறையில் கால்கள் பதித்துவிட்டு தன் மனைவி பரிமளத்தையும் மகள் வினோதினியையும் கைலாகு கொடுத்து கப்பலில் இருந்து மெதுவாக இறக்கிவிட்டார் பாலேந்திரன்.

திருக்கோணமலையை பல வருடங்களுக்கு முன்னர் பார்த்திருந்தாலும் வியக்கத்தக்க மாற்றங்கள் அடைந்திருப்பதை உணராமலில்லை. குறிப்பாக நுழைவாயிலில் வரவேற்கும் 'குளக்கோட்டம்' கட்டிடம் புராதனத்தை பாலேந்திரனுக்கு மீட்டியது. அது எம்மவர் சின்னம். அப்போதெல்லாம் யாழ்ப்பாணம்- திருக்கோணமலை எப்படியெல்லாம் இணைந்தும் பிணைந்தும் இருந்தது.


இந்த சமுத்திரப்பயணம் தற்காலிகமாக நில இணைப்பை துண்டித்திருந்தாலும், என்றோ ஒருநாள் 'இணையப்போகின்றது' என்ற உறுதியோடு உண்டான ஆதங்கம், பாலேந்திரனின் உள்ளத்தின் ஊற்றாக ஓடியது! ஒரு சராசரி மனித உணர்வோடு, தன் யௌவன புதல்வியை கையில் கோர்த்த வண்ணம் மனைவியோடு வெளியேறிக் கொண்டிருந்தார்.

'எப்படியாவது இன்று கொழும்பு பஸ்ஸை பிடித்திடவேண்டும்.' என்ற எண்ணம் மிகையாக மேலோங்கி இருந்தது அவர்களுக்கு.

எந்த அனர்த்தங்களும் பாலேந்திரன் குடும்பத்தை அவர்கள்தம் சொந்த இடமாகிய அரியாலையில் இருந்து இடம்பெயர்க்க முடியவில்லை. நசிவுகளுக்கும் பிசைவுகளுக்கும் முகம் கொடுத்து அங்கே வாழ்ந்தார்கள். சிற்சில இடையூறுகள் ஏற்படினும், மகள் வினோதினி சுண்டிக்குழி மகளிர் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டுதான் வந்தாள்.

சூழல்களின் தாக்கங்களினால்தான் ஆற்றல்கள் முழுமையை வெளிப்படுத்துகின்றது. அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, கல்வியில் விவேகமாக ஒளிர்ந்தவள்- வினோதினி.

'இம்முறை ஏ.எல்லில் ஒரு கலக்குக் கலக்குவாள்!' இது பலரின் எதிர்பார்ப்பு.



அதற்குள் கலங்கிவிட்டது.- அக் கல்லூரி மாணவிக்கு- அதாவது அவளின் தோழி ஸ்ரீ சாந்திக்கு ஏற்பட்ட பாலியல் வல்லுறவு மரணம்.

"தொடர்ந்து கற்க அக் கல்லூரிக்குச் செல்ல மாட்டேன்" என்ற வினோதினியின் அடம்பிடிப்பு- இடம்பெயர்ந்து வேறு பாடசாலையில் சேர்க்க முடியாதவாறு நிதி நெருக்கம்!

மகளுக்கு பலவழிகளில் ஆறுதல் கூறி மீண்டும் கல்லூரிக்கு அனுப்ப எடுத்த முயற்சிதோல்வி காண்பதைக் கண்டுகொண்ட பாலேந்திரன், பலவந்தமாக அனுப்பும் முயற்சியை பிரயோகித்தார்.

உறங்கியிருந்த உண்மை உணர்வுகள் விஸ்வரூபமெடுத்தன வினோதினிக்கு.

'கல்வியை விட மானம் பெரிது! அது பாதிக்கப்படும்போது உயிரும் போய்விடும்!' இந்த உணர்வு உச்சமானபோது- அவளின் உச்சியிலே தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

இப்பொழுது பொருத்தமில்லாத ஏதோ கதைகளையெல்லாம் அதிகமாகக் கதைக்கின்றாள் வினோதினி.

இப்போது இவள் ஒரு மன நோயாளி!

விழிகளில் வழிந்த நீரை தன் ஆட்காட்டி விரல்களால் சுண்டிவிட்ட பாலேந்திரன், பஸ்சின் யன்னல் வழியாக எட்டிப்பார்த்தார். வண்டி கொழும்பிற்குள் நுழைந்து கொண்டிருந்தது-

வினோதினி, தாயின்தோளில் லாவகமாக சாய்ந்து உறங்கிக்கொண்டிருந்தாள்.

தன் சேட் பையினுள் இருந்து எடுத்த துண்டை ஒருதரம் பார்த்துக்கொண்டார் பாலேந்திரன். காணப்போகும் வைத்தியர் விலாசம் அது!

மனோதத்துவ வைத்தியர்- அவர் எம்மவராய் இருப்பதால் மொழிப்பிரச்சனையும் இராது!- திருப்திப் பெருமூச்சொன்று வெளிவந்தது.

அந்தத் தனியார் வைத்தியசாலையில் வினோதினியோடு அமர்ந்தனர்.

சுற்றுச் சூழ இருந்தவர்களை நோட்டம் விட்ட பாலேந்திரனுக்கு உள்ளூர ஒரு தெளிவும் திருப்தியும்! 'மற்றைய நோயாளிகளுடன் ஒப்பிடுகையில் தன் மகள் எவ்வளவோ மேல்.' இது இந்நாட்டின் பல பாகங்களிலும் இனபேதமின்றி ஏற்பட்டிருக்கும் வியாதி. இதன் அடிப்படைக் காரணிகள் யாது? இந்நாட்டின் அகோர நிலைதான்!- மனதுக்குள் வெந்து கொண்டார் பாலேந்திரன்.

வைத்தியரால் வினோதினியின் பெயர் அழைக்கப்பட்டது. சிகிச்சையைவிட பணத்திலே கண்ணாக இருந்தார் அவர். எம்மவர் என எண்ணியது எத்தினை தவறாயிற்று! எம் நிலையை வைத்தியர் சிறிதளவேனும் உணர்ந்ததாய் இல்லை- இது தனக்கு அவசியமற்றது என்பதை வெகு அலட்சியமாய் உணர்த்திக்கொண்டிருந்தார்.

ஐந்து நாட்கள் சிகிச்சை வினோதினிக்கு!

கொண்டு வந்த பணத்தோடு, பாலேந்திரன் மனைவி பரிமளத்தின் பரம்பரை நகைகளும் கழன்று கொண்டிருந்தன.

'மரத்தால் வீழ்ந்தவனை மாடு மிதித்தல் போல்'-அவர்கள் நிலை.

பாலேந்திரன் பஸ்சின் சாளரத்தினூடாகப் பார்த்தார். கொழும்பைவிட்டு அகன்று கொண்டிருந்தது அந்த பஸ்- அவரின் குடும்பத்தோடு! 'இலைகளைந்த வாழை' போன்று அவர் மனைவி ஆபரணங்கள் அற்ற அங்கங்கள்.

இப்போது அவர் மனைவி பரிமளம்.- பொருத்தமில்லாத பேச்சுக்கள்- அதிகமாய் இருந்தது- மகள் வினோதினியின் நிலைதாய் பரிமளத்திற்கும்! பாலேந்திரனுக்குப் புரிந்துவிட்டது-அந்த மனநோயாளிகளின் பட்டியலில் அவர் மட்டும் தற்காலிகமாக தப்பியிருந்தார். 'முருகா! சொந்த ஊர் சேரும் வரை என்னைக் காப்பாற்று!' இதயக் குமுறல்கள் பிரார்த்தனையானது!

# என்றும் நிரந்தரம்

தருவது ரசிகன்



எல்லாமே மாறுகிறது
நிலவு தேய்கிறது
தீ தணிகிறது
தோள் மெலிகிறது
தேகம் தேய்கிறது

பூ காயாகிறது
காய் கனியாகிறது
விதை மரமாகிறது
மரம் விறகாகிறது
எல்லாமே மாற்றமடைகின்றன!

மாறாதது எது?
தேயாமல் தினம் வளர்வது எது?
உயிர் போனபின்னரும்
உடல் ஒழிந்துவிட்டாலும்
மீதமிருப்பது எது?
இங்கே விட்டுச் செல்வது எது?

நினைவுகள்-இனிய நினைவுகள்
நினைவுகள்- நிறம் மாறாத நினைவுகள்!

நினைவுகளில் இனியது காதல்
கனவுகளில் இனியதும் அதுதான்!

சுகமோ-சோகமோ
காதல் நினைவுகள் இனியவைதான்.

உடல்
உயிரை நிரப்பிக்கொண்டு வாழ்கிறது.
உயிர்
நினைவுகளை நிரப்பிக்கொண்டு வாழ்கிறது!

தீயைவிட்டு
வெப்பத்தை பிரிக்க முடியுமா?
உயிரைவிட்டு
நினைவுகளைப் பிரிக்க முடியுமா?
முடியாது, முடியாது! முடியாது!

நீள்விழியும்
நீங்காத நினைவுகளுடன் இருந்தாள்.
தூங்காத விழிகளுடன்
நினைவுகளால்தான் உயிர்வாழ்ந்து கொண்டிருந்தாள்!

அவளது காதல்
அவனது இதயத்தால் அங்கீகரிக்கப்படாதது!
அவளது விண்ணப்பம்
இன்னொரு இதயத்தால் ஏற்கப்படாதது!
செல்லும்போது
சொல்லாமலேயே சென்றுவிட்டான்.
போகும் போது
புன்னகைக்காமலேயே போய்விட்டான்!
"என்னைப் பிடிக்கவில்லையா?
விழிகள் வழியே
உள்ளே நுழைந்து
உயிரைக் குடித்தவரே
உண்மையைச் சொல்லிவிடும்
என்னைப் பிடிக்கவில்லையா?"
வெட்கத்தைவிட்டு வினா தொடுத்தாள்.
"பிடித்திருக்கிறது பெண்ணே!
ஆனால்-உன் மனதில்
என்ன இருக்கிறது என்றுதான்
படித்தறிய முடியாமல் இருக்கிறது!"
விழிகளை தாழ்த்திக் கொண்டு
இதழ்களால் விடை மீட்டினாள்

"மனம் என்னும் கோப்பை
காலியாகத்தான் இருந்தது ஒருகாலத்தில்!
இப்போது நிரம்பியிருக்கிறது!"

"புரியவில்லைப் பெண்ணே
நீ பேசும் வார்த்தைகள்?"

"மனம் என்னும் கோப்பையில்
காதல் என்னும் மது
நிரம்பித் தளும்பி நுரை தள்ளுகிறது!"

"அருந்தப்போவது யார் பெண்ணே?
அழைத்துக் கொடுத்துவிடு
மது விரயமாகக் கூடாதல்லவா!"

"அழைக்கத்தானே கேட்கிறேன்
என்னைப் பிடித்திருக்கிறதா?
'ஆம்' என்று மட்டும் சொன்னால்
அந்த ஒரு சொல் அமிர்தமாகும்.
'இல்லை' என்று உரைத்துவிட்டால்
அந்த வார்த்தைகள் ஊசியாய்பாய்ந்து
என் இதயத்தை தைத்துவிடும்!"

அவள் ஈரமாய் பேசினாள்
அவன் அதிர்ந்து போனான்

"நிறுத்து! நீள்விழி!
வெறுத்ததில்லை நான் உன்னை
இதுபோல் நினைத்ததுமில்லை
காதலியாக உன்னை!"

நெஞ்சுக்குள் புயலடித்தது
நினைவுக்குள் தீயெரிந்தது
கண்ணுக்குள் அருவி திறந்தது
காதுக்குள் பூமி பிளந்தது.

காலங்கள்
பூப் பூவாய் உதிர்ந்து போயின.
நினைவுகள் மட்டும்
நெஞ்சில் நிரந்தர வாசமடித்தன.

"வருவாய் வருவாய்
ஒருநாள் வருவாய் எனைத்தேடி
உருகும் மெழுகாய் நானிருப்பேன்
உயிரே ஒளியே ஒருநாள் வா!

விரிந்த மார்பில் நான் சாய
சரிந்த தோளில் நீ சாய
கள்ளோ இதுவோ எனவியந்து
கள்வா உந்தன் மார்மீதில்
கண்கள் மூடி நான் மயங்க
கள்ளுண்ட குரங்காய் மனம் ஆட
உயிரும் உடலும் ஒன்றாகும்!"

நினைவுகளுடன்
கற்பனையும் சங்கமித்தால் கோடி சுகம்!

அவன் மட்டும் வரவேயில்லை-ஆனால்
அவள் நெஞ்சில்
அவன் வராத நாளே இல்லை!

"மறந்துவிடு நீள்விழி
கல்வெட்டல்ல உன் காதல்
நிரந்தரமில்லாத நீர்க் குழியடி!"
என்றாள் தோழி உபதேசமாய்!

நீள்விழி மாறவில்லை-அவள்
நினைவுகள் சாகவில்லை.

"காத்திருந்தாயா கண்ணே!
எண்ணி ஏங்கியிருந்தாயா பெண்ணே?"
காதுக்குள் கேட்டவன்
கைகளை வீசி கட்டி இறுக்கிக் கொண்டான்.
மூச்சு முட்டியது நீள்விழிக்கு.

"மூச்சு நின்றுவிடும்- உங்கள்
முரட்டுத்தனம் உயிரைத் தின்றுவிடும்!"
இறுக்கப்பட்டுக்கொண்டே சிணுங்கினாள்.

"நீ ஏன் சுவாசிக்கிறாய்
உனக்காக சுவாசிக்கத்தான்
உன்னவன் நான் வந்துவிட்டேனே!"
உதடுகளால் உச்சியில் இருந்து ஆரம்பித்தான்!
உடலெங்கும் பூச்சிகள் ஊர்ந்தன!

'தேகமே தேகமே
இதுதான் யாகமா? இதுதான் மாயமா?
மன்னவா மன்னவா
உன் மார்புதான் மஞ்சமா?

கண்களை கண்களை
வெட்கம் மூடுதே!
இமைகளில் வெட்கம் பாரமா?
இதழ்களில் யாரது பாரமாய்?!'
நீள்விழி தன் விழி மூடினாள்.

"உயிரே! உயிரே
தாகமா? ஒருநாளில் இது தீருமா?
உறவே! உறவே!
தணியுமா? தீரா மையல் தணியுமா?"

"போதும் போதும் போதுமே
கிணற்று நீரை
வெள்ளம் அள்ளிப் போகுமா?
மீதம் வைத்துப் போய்விடும்
தினமும் நானே உம்மவள்!"

"அடடா.. அடடா
தேன் பலா-மீதம்வைத்தால்
தாங்குமோ?
பசிதான் தீரா உடல் தாங்குமோ?"
கேட்டான்-இழுத்தான்-இறுக்கினான்.
'யம்மா' என்றவள் திணறினாள்
எல்லாம் கனவு கனவுதான்
விழிகள் திறந்தவள் கலங்கினாள்.

"காதலா! காதலா!
நனவில் வராத கொடியவா!
கனவில் வந்தென்னை
துவைத்த துணியாய் பிழிந்துருட்டி
துன்பக் கயிற்றினில்
தொங்கிக் காயவிடுவது ஏனடா?!"

## இலக்கிய நயம்

நீள்விழி மட்டுமா கனவில் வந்த
காதலனை நொந்தாள்? திருவள்ளுவரும்
கனவில் வந்தவனை நோகும் காதலியை
காட்டுகிறார்.
**"நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என் எம்மை பீழிப் பது"**

அதிகாரம்-122 குறள்-1217

## சிந்தியா பதில்கள்

**★ காதலுக்கு வயது முக்கியமா?**

எம். சுபைதீன், கல்முனை.

இல்லையென்பது அமெரிக்க அதிபர் கிளிண்டனின் மகள் செல்சியாவின் அபிப்பிராயம். செல்சியாவுக்கு வயது இனிய பதினாறு. ஹொலிவுட் நடிகர் கேவின் கோஸ்ட்னர் மீது லவ்வுன்னா லவ்வு- அப்படியொரு லவ்வு. நடிகரின் வயது நாற்பத்திரெண்டு. செல்சியாவின் பிதற்றல் இது: "அவரது கண்களைப் பார்த்தால் இதயம் காணாமல் போய்விடுகிறது." ஹௌ இஸ் இட்?!

**★ அரசியலில் ஆணிவேர் யார்?**

ந. ஜெயசுப்பிரமணியம், தலவாக்கலையூர்.

ஏமாந்து கொண்டிருக்கும் மக்கள்.

**★ என்ன சிந்தியா! சென்றவார முரசின் முன்பக்கத்தில் நெப்போலியன்- ஊர்வசி என்பதை குஷ்பு என்று மாறிப்போட்டு விட்டதே சினி விசிட்?**

எஸ். பாயிஸ், திருமலை.

தர்ம அடிக்குப் பயந்து சினிவிசிட் தயாரிப்பாளர் தலைமறைவாக இருக்கிறார். 'எட்டுப்பட்டி ராசா' படத்தில் இன்னொரு கதாநாயகி குஷ்பு. குஷ்பு நினைப்பில் கோல்மால் செய்துவிட்டார் நம்மாள்.... ஹி... ஹி....ஹி.

**★ பட்டிமன்றங்களும் நம் அயல் நாடான தமிழ்நாட்டில் பிரபலமாகி வருகிறதே? எப்படி?**

பொ. சிவபாலன், கண்டி.

உண்மைதான்! திண்டுக்கல் லியோனி என்னும் பட்டிமன்ற நடுவருக்கு நட்சத்திர மரியாதை கிடைக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். எதையும் சுவாரசியமாக விவாதித்தால் பட்டிமன்றம் களைகட்டும். எங்கேயோ படித்த பட்டிமன்ற சுவாரசியம் ஒன்றைச் சொல்கிறேன்:

இராமாயணத்திலே பொய் மானைப் பிடித்துத் தரவேண்டும் என்று சீதை கேட்டதால் ராமர் வெளியே செல்ல வேண்டி ஏற்பட்டது. அதனால்தான் இராவணன் சீதையை சுலபமாகத் தூக்கிச் செல்ல முடிந்தது. அதனைச் சுட்டிக்காட்டிய பட்டிமன்ற பேச்சாளர், "சீதை மான் கேட்டிருக்காவிட்டால் இராமனுக்கு இத்தனை தொல்லைகள் வந்திருக்குமா? போரே வந்திருக்காதே?" என்று பேசினார்.

அதனை மறுத்துப் பேசினார் மற்றொரு பெண் பேச்சாளர்.

"சீதை மான் கேட்காமல் மசால் தோசையா கேட்பாள்? காட்டில் கேட்க வேண்டிய பொருளைத்தானே கேட்டாள்?" என்றார் பெண் பேச்சாளர். கரகோசம் எழுந்தது.

உடனே ஆண் பேச்சாளர் எழுந்தார்.

"ராமர் சீதையிடம் 'நீயோ பெண் மான். நானோ உனக்கேற்ற கோமான், சீமான், உனக்கு எதற்கு பொன்மான்? கண்ணே சீதா கமான்' என்று சொல்லியிருந்தால் பிரச்சனை ஏற்பட்டிருக்காது!" என்றார். கரகோசம் வானைப் பிளந்தது.

**★ அடக்கக்கூடிய ஆசை எது?**

சொ. தர்மரட்ணம், வவுனியா.

எந்த ஆசையையும் ஒரு அளவுக்குமேல் அடக்கக்கூடாதுங்க. அடக்கினால்...? ரஜினீஸ் சாமியார் சொன்ன குட்டிக்கதை இது:

ஆண்கள் சகவாசமே கூடாது என்று தனியாக வாழ்ந்தார் ஒரு பெண்மணி. ஆனால் பணக்காரி.

ஒருநாள் திருடன் புகுந்துவிட்டான். கத்தியைக் காட்டி மிரட்டினான்.

"பெண்ணே உன் நகைகள் எங்கே?"

"வங்கியில் உள்ள லொக்கரில் வைத்திருக்கிறேன்!"

"சரி போகட்டும்.... ரொக்கமாகப் பணம் இருக்குமே எடு!"

"பணமும் வங்கியில்தான் இருக்கிறது!" என்றார் பெண்மணி.

திருடனுக்கு கோபம் ஒரு பக்கம், சந்தேகம் மறுபக்கம்.

"உன்னை நம்பமுடியாது பெண்ணே. உன் உடைகளுக்குள் மறைத்துவைத்துக் கொண்டு நாடகமாடுகிறாய் என்று சந்தேகிக்கிறேன்," என்று சொல்லியபடியே உடம்பை மேலும் கீழும் சோதித்தான்.

"எனக்குத் தேவையானது ஏதுவுமே தட்டுப்படவில்லையே!" என்றான் திருடன்.

அந்தப் பெண்மணி திருடனிடம் சொன்னாள்:

"என்னிடம் இப்போது பணம் இல்லை. ஆனால் நீ இப்போது செய்ததுபோல இன்னும் சிலமுறை செய்தால் நான் 'செக்' (காசோலை) எழுதிக் கொடுக்கிறேன்!"



**★ தமிழ்க் கட்சிகளின் தற்போதைய நம்பிக்கைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பா. சசிகுமார், அப்புத்தளை.

வேறுவழியில்லை.

**★ டியர் சிந்தியா! வெற்றிக்குக் காரணம் திறமையா? சந்தர்ப்பமா?**

ஷகிலா வேலுப்பிள்ளை, நானுஓயா.

இரண்டும் சேர்ந்தால் அபாரம். எனினும் திறமைதான் முக்கியம். திறமை இல்லாத வெற்றி அத்திவாரம் இல்லாத கட்டிடம் மாதிரித்தான்!

**★ தென்னிலங்கையில் அரசியல் வன்முறைகள் அதிகமாகி வருகிறதே?**

ஜெ. விஷ்ணுராஜ், ஹட்டன்.

கருத்துக்களால் மோதுவதற்கு கருத்துக்கள் இல்லை; ஏதோ கைவசம் இருக்கக்கூடிய கொஞ்ச நஞ்ச கருத்துக்களிலும் சம்பந்தப்பட்டவர்களுக்கே நம்பிக்கையில்லை. அதுதான் கருவிகளால் மோதிக்கொள்கிறார்கள்.

**★ சிவாஜி கணேசன் மறுபடியும் நடிக்க வந்துள்ளது மகிழ்ச்சியான செய்திதானே சிந்தியா?**

கே. வாமதேவன், புத்தளம்.

சிங்கத்துக்கு வயதானாலும் சீற்றம் குறையாது. கம்பியூட்டர் சாகசம் மூலம் சிங்கத்தை இளம் சிங்கமாக்கிக் காட்டப் போகிறார்களாம். கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவியுடன் நடிப்புலக இமயம் ஜோடி சேரும் காட்சியும் காணப்போகிறோம். ஆக மகிழ்ச்சி இரண்டு மடங்கு. வீட்டில் உள்ள பெரிசுகளுக்கும் மறக்காமல் சொல்லுங்கள்! உங்கள் தாத்தா சரோஜாதேவியின் ஃபானாக இருக்கலாமில்லியோ?

**★ அரசியல் தீர்வுத் திட்டம் இன்னமும் இறுதிவடிவம் பெறவில்லை. பின்னர் எதனைப் பற்றி விளக்குவதற்காகக் கூட்டம், கருத்தரங்கு நடத்துகிறார்கள்?**

எம். பெஞ்சமின், நீர்கொழும்பு.

நல்ல கேள்வி, 'மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்ட சமாச்சாரத்தை யாராவது அவர்கள் காதில் போட்டால்தானே!

## சிந்தியா பதில்கள்

**★ கவிதை எழுத எழுத்தாற்றல் அவசியமா?**

ஜெ. யூட் கிலேரியன், மட்/ தாண்டவன்வெளி.

அவசியமில்லையோ....? என்று சிலரது கவிதைகளைப் பார்க்கும்போது எனக்கும் சந்தேகம் வருவது உண்மையிலும் உண்மை.

**★ 'பாரதி கண்ணம்மா' படத்தின் முடிவு எப்படி சிந்தியா?**

செல்வி எஸ். வைதேகி, கொழும்பு-05.

'திடுக்' திருப்பம் கொடுக்கவேண்டும் என்பதற்காக மீனாவுடன் பார்த்திபனையும் 'உடன் கட்டை' ஏறவைத்துவிட்டார் இயக்குநர். நம்மால் முடியாத சில காரியங்களை புல்லரித்துப் பார்ப்பது நம் வழக்கம். 'பாரதி கண்ணம்மா' கிளைமாக்ஸ் இரசிக மகாஜனங்களிடம் எடுபட்டதும் அப்படித்தான். மற்றப்படி படம் 'சின்னத்தம்பி' யின் மறுபதிப்புத்தான். புதுமை எதுவுமில்லை.

**★ 'இருவர்' படத் தோல்விக்கு யார் காரணம்?**

க. கேசவன், மட்டக்களப்பு.

மணிரத்னம்.

## ஸ்போர்ட்ஸ்

# பாகிஸ்தானுக்குக் கிண்ணம்

பங்களாதேஷில் நடைபெற்ற இலங்கை-ஏ, இந்தியா-ஏ, பாகிஸ்தான்-ஏ, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கிடையிலான 3வது சார்க் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான்-ஏ அணி கிண்ணத்தை வென்றுள்ளது.

நான்கு அணிகளுக்குமிடையில் நடந்த லீக் போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற இந்தியா-ஏ அணியும், பாகிஸ்தான்-ஏ அணியும் இறுதிப் போட்டியில் விளையாடின.

கடந்த பெப்ரவரி 28ம் திகதி நடந்த இறுதிப் போட்டியில் விளையாடிய பாகிஸ்தான்-ஏ அணி 43.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 199 ஓட்டங்களை எடுத்தது. கப்டன் அஸிப் முஸ்தபா சிறப்பாக விளையாடி 91 ஓட்டங்களை எடுத்தார். இந்திய அணித் தரப்பில் நோயல் டேவிட் 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

வெற்றி பெற 200 ஓட்டங்கள் எடுத்தால் போதும் என்ற இலகுவான இலக்கை நோக்கி ஆடத் தொடங்கியது இந்தியா-ஏ அணி. 31 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 124 எடுத்தது.

அப்போது மழை வந்து குறுக்கிட்டது. மழையாலும், மூடுபனியாலும் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

31 ஓவர்களில் பாகிஸ்தான்-ஏ அணி அதிக ஓட்டங்களைப் பெற்றதால் ஓட்ட விகிதத்தின் அடிப்படையில் பாகிஸ்தான்-ஏ அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆட்ட நாயகனாக பாகிஸ்தான்-ஏ அணி கப்டன் அஸிப் முஸ்தபா தெரிவு செய்யப்பட்டார்.

# மூன்று நாடுகள் கிரிக்கெட்

மூன்று நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஷார்ஜாவில் வரும் ஏப்ரல் மாதம் துவங்கவுள்ளது. இலங்கை, பாகிஸ்தான், ஸிம்பாப்வே ஆகிய அணிகள இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன.



இப்போட்டிகள் ஏப்ரல் மாதம் 3ம் திகதி முதல் 11ம் திகதிவரை நடைபெறுகின்றன.

**போட்டி விபரங்கள் வருமாறு:**

ஏப்ரல் 03- இலங்கை எதிர் ஸிம்பாப்வே
ஏப்ரல் 04- பாகிஸ்தான் எதிர் இலங்கை
ஏப்ரல் 05- ஓய்வு நாள்
ஏப்ரல் 06- ஸிம்பாப்வே எதிர் பாகிஸ்தான்
ஏப்ரல் 07- ஸிம்பாப்வே எதிர் இலங்கை
ஏப்ரல் 08- ஸிம்பாப்வே எதிர் பாகிஸ்தான்
ஏப்ரல் 09- பாகிஸ்தான் எதிர் இலங்கை
ஏப்ரல் 10- ஓய்வு நாள்
ஏப்ரல் 11- இறுதிப் போட்டி.

# இவர்கள்தான் அவர்கள்



பிரியங்கா



கஜோல்



ஹிட்லர்

# இராமாயணம் அங்கம் 73

இராமபிரானுடைய வேண்டுகோளை தனது மாபெரும் கடமையாக ஏற்று இலங்கை மாநகர் புகுந்த ஆஞ்சநேயர் பல கைங்கரியங்களில் ஈடுபட்டார். சீதாப்பிராட்டியார் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்துவிட்டார். பிராட்டியாருக்கு ஆறுதல் கூறினார். இராமபிரான் அடையாளமாகக் கொடுத்தனுப்பிய மோதிரத்தைப் பிராட்டியாரிடம் கொடுத்தார். பிராட்டியாரின் மனத்தை அழுத்திய துயரத்தைப் போக்கியமையினால் அவரிடம் சிரஞ்சீவிப் பட்டம் பெற்றார். இராமபிரானது தூதனாக அந்நாட்டுக்கு வந்தமையினால் தன்னுடைய அடையாளத்தைப் பதித்துவிட்டுத் திரும்ப நினைத்த அனுமன் இலங்காபுரி

## எரியுண்ட எழிலிலங்கை

யின் வனப்புமிக்க அசோகவனத்தின் பெரும் பகுதியை அழித்தார். பல மாளிகைகளை உடைத்து நொறுக்கினார். அரக்க சைனியத்தில் பெரும் பகுதியை அழித்தொழித்தார். இராவணனின் இளைய மகனான அட்சகுமாரனையும் கொன்றார். மற்றொரு மகனான இந்திரசித்து ஏவிய பிரம்மாஸ்திரத்தினால் கட்டுண்டு இராவணன் முன் சென்றார். "இராமதூதன் நானே!" என்று அறிமுகப்படுத்தியதுடன் அறிவுரைகளும் கூறுகிறார்.



கோபமடைந்த இராவணன் ஆஞ்சநேயரைக் கொன்று விடுமாறு கூற, அவன் தம்பி விபீடணரின் தலையீட்டால் விடுவிக்கப் படுகிறார். இருப்பினும் அவருடைய வாலில் தீ மூட்டப்படுகிறது. இதனை ஒரு நல்ல வாய்ப்பாகக் கொண்டு இலங்காபுரியை ஆஞ்சநேயர் தீக்கிரையாக்குகிறார்.

அனுமனின் வாலில் தீயினை மூட்டித் தெருத் தெருவாக அரக்கவீரர்கள் இழுத்துச் சென்றனர். இந்தக் காட்சியைக் காண பல்லாயிரக் கணக்கில் அரக்கமக்கள் திரள் திரளாகக் கூடினர். இக்காட்சியைக் காணவருமாறு நகரெங்கும் தண்டோராப் போட்டு, அறிவித்தனர். அசோகவனத்தை அழித்து, அரக்கர் படையை வதம் செய்து, இளவரசர் அட்சகுமாரனையும் கொன்ற வானரத்தின் செயல்களால் பயந்து நடுங்கிக்கொண்டிருந்தவர்கள், அவ்வானரத்தினால் தமக்கு நேரவிருந்த அபாயம் நீங்கிவிட்டது என்பதனை அறிந்து பயம் நீங்கி வெளிவந்தனர். பிடிபட்ட வானரத்துக்குத் தண்டனையும் வழங்கப்பட்டுவிட்டது என்பதனை அறிந்தவர்கள், வாலில் தீயுடன் வீதிவலம் வரும் அந்த வானரத்தைக் காணத் திரண்டனர்.

### சீதையின் தவிப்பு

அனுமன் வாலில் தீ மூட்டப்பட்ட தகவல் காட்டுத்தீ போல் எங்கும் பரவியது. அசோகவனத்திலிருந்த சீதாப்பிராட்டியாரின் காதுகளுக்கும் அச் செய்தி எட்டியது. பிராட்டியார் துடிதுடித்துப்போனார். துயரம் மேலிடக் கண்ணீர் சொரிந்தார். கெட்டகுணங்களுக்கு உறைவிடமான அரக்கர், தூய குணவானான ஆஞ்சநேயனுக்கு அளித்த தண்டனையிலிருந்து அவனை மீட்டு விடமாட்டாயோ, என்று பிராட்டியார் அக்கினி தேவனை வேண்டுகிறார்.

**"தாயே அனைய கருணையான்**
**துணையை ஏதும் தகைவு இல்லா**
**நாயே அனையவல் அரக்கர்**
**நலியக் கண்டால் நல்காயோ?**
**நீயே உலகுக்கு ஒரு சான்று**
**நிற்கே தெரியும் கற்பு அதனில்**
**தூயேன் என்னின் தொழுகின்றேன்**
**எரியே அவனைச் சுடல்!" என்றாள்.**
(சுந்தர காண்டம்-1171)

பொருள்:

***"தாயைப் போன்ற கருணையுள்ள வாயுதேவனின் துணைவனான அக்கினி பகவானே! நாயைப்போன்ற குணம்படைத்த அரக்கர்கள் (உன் நண்பனான வாயுதேவனின் மகனான) அனுமனுக்குப் புரியும் தீமைகளைக் காண்பாயானால் அவனுக்கு உதவ முன்வரமாட்டாயா? உலகனைத்தையும் உணர்ந்தவன் நீயல்லவா? நான் கற்புடைய தூயவளானால் அனுமனைச் சுடாதே! உனைப் பணிந்து வேண்டுகிறேன்!"*** என்றவாறு சீதாப்பிராட்டியார் வேண்டுகிறார்.

இவ்வாறு பிராட்டியார் அக்கினி தேவனை வேண்டியதும் அனுமனின் வாலில் மூட்டப்பட்ட தீ அவரைச் சுடவில்லை. தீப்பற்றி எரிந்து கொண்டுதான் இருந்தது. எனினும் அவருக்கு அத்தீயினால் தீங்கேதும் ஏற்படவில்லை. மாறாகக் குளிர்ச்சியைக் கொடுத்தது. வாலில் தீ மூட்டியபோது அவருக்கு ஓரளவு வேதனை தெரிந்தாலும் இராமமந்திரத்தை உச்சரித்தமையினால் வேதனை தெரியாமலே இருந்தது. ஆனால் சீதாப்பிராட்டியாரின் வேண்டுதலையடுத்து தீபிடித்த வால் பனிக்கட்டிபோல் குளிர்ந்தது. இதனை உணர்ந்த ஆஞ்சநேயருக்கு, சீதாப்பிராட்டியாரின் அநுக்கிரகத்தினாலேதான் இந்த அதிசயம் நேர்ந்திருக்கிறது என்று தெரிந்துவிட்டது.

* * *

### அரக்கர்பட்ட பெருந்துன்பம்

ஆஞ்சநேயரின் வாலில் மூட்டப்பட்ட தீயினால் அரக்க மக்களுக்கு அளப்பரிய துன்பமே ஏற்பட்டது. பெரும்பாலான கட்டடங்கள் தீயினால் எரிந்தன. திக்கெட்டும் தீ பரவியது. பலர் தீயினால் எரியுண்டு இறந்தனர். தீயின் வேகம் தாளாமல் கடலிலும் சென்று பலர் குதித்தனர். அனுமனுடன் சென்ற காவலர்களும் பலர் மடிந்தனர். வேடிக்கை பார்க்க வந்தோரும் தாக்கப்பட்டனர். வேடிக்கை வினையாகியமையினால் இலங்காபுரியே திகைத்துத் திணறியது. திரும்பிய பக்கமெல்லாம் தீச்சுவாலைகள் பரந்து பிடித்தன.

இறுதியாக இராவணனின் அரண்மனையிலும் தீ தாவியது. இராவணனிடும் கட்டளைக்கு அடிபணிந்து ஏவல் புரியும் தேவர்களும் கந்தர்வர்களும் செய்வதறியாது தவித்தனர். இராவணனுக்கும் தீ பரவும் செய்தி கூறப்பட்டது. இலங்கையை ஊழிக் காலத் தீ சூழ்ந்துவிட்டதோ என்று எண்ணியவாறு இராவணன் ஏவலாளர்களை அழைத்து, தீ பரவுவதற்கான காரணம் என்ன என்று வினவினான்.

அனுமன் இட்ட தீயினால் பாதிப்புக்குள்ளான அரக்க ஏவலாளர்கள், இராவணனை இருகைகூப்பி வணங்கி, "ஐயனே! தங்கள் உத்தரவுப்படி அனுமன் என்ற பெயரையுடைய அந்த வானரத்தின் வாலில் தீயை மூட்டி விட்டோம்; அதனுடைய வால் எரிந்து சாம்பலாகிவிடும்; வாலில்லாத வானரம் ஆகிவிடும் என்றுதான் கருதினோம். ஆனால் அதனுடைய வால் கடலின் எல்லையை விட மிகவும் நீண்டு வளர்ந்து கொண்டிருக்கிறது. ஓரிடத்திலிருந்த வண்ணம் வெகுதூரத்துக்கப்பாலுள்ள மாளிகைகளையும் தீக்கிரையாக்கிக் கொண்டிருக்கிறது. திடீரென வான் வெளியில் தாவிப்பறந்த வண்ணம் வேறு பல கட்டடங்களையும் தோப்புக்களையும் பூங்காக்களையும் தீக்கிரையாக்கி வருகிறது," என்று கூறினார்கள். இதனால் இராவணனின் உடலெல்லாம் பற்றி எரிவது போன்ற கோபம் உண்டாயிற்று. "ஒரு அற்ப குரங்கை அடக்க முடியாத நீங்களெல்லாம் வீரர்களா? போங்கள்! ஓடிப்போய் அந்தக் குரங்கை உயிருடனோ உயிரற்ற சடலமாகவோ கொண்டு வாருங்கள். ஓடுங்கள்!" என்று இராவணன் கட்டளையிட்டான். அவர்களும் ஓடிச் சென்று படைத் தளபதிகளைக் கண்டு இராவணனின் கட்டளையைக் கூறி படை அணிகள் பலவற்றை மேலும் அதிகமாகக் கூட்டிக்கொண்டு அனுமனைப் பிடிக்கச் சென்றனர்.

அனுமனோ ஆகாயத்தில் பறந்த வண்ணம் மேலும் தீயினைப் பரப்பிக் கொண்டிருந்தார். வந்த வீரர்கள் எல்லோரும் தீயைக் கண்டு மிரண்டு திக்குத்திசை தெரியாமல் பறந்தனர். பெரும்பாலானோர் தீயின் அகோரத்தால் வெந்து சாம்பலானார்கள்.

ஆஞ்சநேயரின் ஆத்திரம் ஓரளவு தணிந்ததும் வானில் பறந்த வண்ணம் சென்று கடலில் மூழ்கி தனது வாலில் இருந்த தீயினை அணைத்துக் கொண்டார். அவருடைய வாலில் இருந்த தீயின் வெப்பத்தால் கடல் நீரும் கடும் வெப்பமடைந்ததாக கம்பர் பெருமான் தன் காவியத்தில் கூறுகிறார். ஏற்கனவே நெருப்புக்குப் பயந்து கடலுக்குள் ஓடியவர்கள், கடல் நீரே வெப்பமடைந்தமையினால் மேலும் பெரும்தொகையாக மாண்டனர் வேறுசிலர், பயந்து ஓடுவது ஈனமான செயல் என்று கருதி அனுமனுடன் போரிட முன்னேறினர். அவர்களும் மாண்டொழிந்தனர்.

**தோய்த்தனன் வால் அது தோயக்**
**காய்ச்சின வேலைக் கலந்தார்**
**போய்ச் சிலர் பொன்றினர் போனார்**
**ஏச்சு என மைந்தர் எதிர்த்தார்.**
(சுந்தர காண்டம்-1241)

பொருள்:

***தீ மூட்டப்பட்ட தனது வாலை ஆஞ்சநேயர் கடலிலே கொண்டு போய்த்***

**இராஜகுமாரன்**

***தோய்த்தார். அதனால் கடல் நீரானது காய்ச்சிக் கொதிக்க வைக்கப்பட்ட நிலையினை அடைந்தது. தங்கள் உடம்பில் ஏறிய வெப்பத்தைத் தாங்க முடியாமல் அக்கடலுள் குதித்த அரக்கர்கள் பலர் மாண்டனர். வேறு பலர் தம் உயிரைக் காக்க நினைப்பது இழுக்காகும் என்று கருதி ஆஞ்சநேயருடன் போராடத் துணிந்தனர்.***

### அமிர்தகழி

*ஆஞ்சநேயர் தமது வாலில் மூட்டப்பட்ட தீயை அணைப்பதற்காக கடலில் மூழ்கி எழுந்தார் என்று இராமகாதையில் சொல்லப் படுகிறது. மட்டக்களப்பு வாழ் மக்கள் மத்தியில் கர்ண பரம்பரைக் கதை ஒன்று கூறப்படுகிறது. மட்டக்களப்பு மாநகரின் கிழக்குக் கடலோடு மட்டக்களப்பு வாவி கலக்குமிடத்துக்கு அணித்தாக அமிர்தகழி என்ற இடம் இருக்கிறது. இங்கு மாமாங்கேஸ்வர் திருக்கோவில் உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புக்களும் பொருந்திய இத்தலத்திலுள்ள குளம் 'அனுமார் தீர்த்தம்' என்றழைக்கப்படுகிறது. இலங்கை மாநகரைச் சுட்டெரித்த பின்னர் தனது வாலில் இருந்த தீயினை இத்தீர்த்தக்குளத்தில் தான் அமிழ்த்தி அணைத்துக் கொண்டாராம். பிரதி வருடமும் ஆடி அமாவாசை தினத்தன்று இங்கு நடைபெறும் தீர்த்தோற்சவம், அனுமனின்வால் தீ அணைக்கப்பட்ட திதியை அனுசரித்தே நடைபெறுவதாக அக்கதை கூறுகிறது. ஆடி அமாவாசையையொட்டி இங்கு பல்லாயிரம் மக்கள் கூடுவதால் இதனை 'மாமாங்கம்' என்றும் கூறுகின்றனர். 12 வருடங்களுக்கொரு முறை இடம்பெறும் மகாமகத் தீர்த்தத்தின்போது (தமிழ்நாடு-கும்பகோணத்தில் நடைபெறுவது) பெரும்பாலான இந்துக்கள் கூடுவதுபோல் வருடா வருடம் அமிர்தகழி மாமாங்கேஸ்வரத்தில் மக்கள் கூடுவதால் இப்பெயர் பெற்றதாகவும் ஒரு கதை உண்டு. (வேறு பல கதைகளும் கூறப்படுகின்றன)*

* * *

'அரக்கர்கோனுக்கு அறிவுரை கூறியும் அவன் திருந்துவதற்கு வழியே இல்லை. இராமபிரானின் கணைகளால் அவன் அழிவது உறுதி. அதேபோல் அவனுடைய குலமும் அடியோடு அழிந்தொழிந்துபோக வேண்டியதுதான்', என்ற தீர்மானத்துக்கு வந்த அனுமன் மேலும் தாமதியாமல் இராமபிரானிடம் செல்வது என்ற முடிவுக்கு வந்தார். அவ்வாறு திரும்புவதற்கு முன்னர் மற்றுமொரு கடமை உண்டென நினைத்து கடற்கரையைவிட்டு நீங்கி மறுபடியும் இலங்கை நகருக்குள் புகுந்தார்.

**(தொடர்ந்து வரும்)**

### இராமாயணப் போட்டி: 71

**சரியானவிடை:- யாழ்**

1. **ரி. தவலோஜினி,** 18/2, பாரதி ஒழுங்கை, மட்டக்களப்பு.
2. **ஆர். உஷாந்தி,** 69/ஏ, பெரேரா பிளேஸ், கவ்டான, தெஹிவளை
3. **ஜி. வசந்தசீலன்,** பல்கலைக்கழக கல்லூரி, குருமன்காடு, வவுனியா.
4. **ஏ. வேல்முத்து,** 6-ம் வட்டாரம், உடப்பு.
5. **எஸ். அரவிந்தன்,** மே/பா யு. யசோதா, 94, பாங்ஷால் வீதி, கொழும்பு-11.

**போட்டி இல. 73** கேள்வி:- **அனுமன், தீயினால் சுடப்படாமலிருக்க சீதை யாரை வேண்டினார்?**

மார்ச் 15 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.73, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# காதிலை பூ கந்தசாமி

செ: அண்ணே வணக்கமண்ணே! நீங்க இங்கே நலமண்ணே. நான் அங்கே நலமாண்ணே?

கவு: அடே.. கரிவாயா, கொளுக்கட்டைத் தலையா, அது லவ் சீன்ல வரவேண்டிய டயலாக்குடா!

செ: *(செல்லுலார் போன் ஒலிக்கிறது. எடுத்துப் பேசுகிறார்)* ஹலோ யாரு? ஆமா நான் தான் கவிசிரசு பேசறேன். அப்படியா நோ நோ.. ஐம் வெரி வெரி பிஸி. நீங்க என்ன பண்ணுறீங்க மெட்டை ஒரு கசட்டில ஃபில் பண்ணி அனுப்பி வையுங்க. நான் பாட்டை எழுதி நம்ம பி.ஏ கிட்டே கொடுத்தனுப்புறேன்.... நோ..நோ.. ரேட் விஷயமெல்லாம் பி.ஏ கிட்டே பேசிடுங்க. செக் வேண்டாங்க, ஐ கான்ட் அக்செப்ட்.. காசாவே செட்டில் பண்ணிடுங்க. ஓ.கே.

கவு: யாருங்க போனிலே?

செ: மியூசிக் டிரக்டர் ஐ.மீன்.. இசையமைப்பாளர்.

கவு: ஏன்டா மியூசியத்திலே இருக்க வேண்டிய பன்றித் தலையன் நீ? உனக்கும் மியூசிக் டிரக்டருக்கும் என்னடா சம்பந்தம்?

செ: அண்ணே, நீங்க என்னை இன்சைட் பண்ணுறீங்க?

கவு: மவனே! அது இன்சைட்டில்லடா இன்சல்ட்டுடா. கையிலே செல்லுலார் இருந்தா கண்ட கண்ட வார்த்தையெல்லாம் வாயிலே வருது பாரு.

செ: அண்ணே! எனக்கு தெரியுமண்ணே. உங்களுக்கு தெரியுதா எண்ணு பார்க்கத்தான் ஸ்பெல்லிங் மிஸ்டேக்கு விட்டுப் பார்த்தேன். இப்ப புரிஞ்சுபோச்சுண்ணே!

கவு: என்னடா புரிஞ்சுபோச்சு?

செ: நீங்க ஒரு மேதையண்ணே. மேதை. சுருக்கமாச் சொன்னா நீங்க ஒரு சீசஸ்

கவு: மம்பட்டி வாயா? அது சீசஸ் இல்லேடா ஜீசஸ்.

செ: ஒவ்வொரு ஊரிலே ஒருமாதிரிச் சொல்லுறாங்க, கண்டுக்காதீங்க! *(மீண்டும் போன் ஒலிக்கிறது)* யாருங்க? ஆ.. வணக்கமுங்கோ. என்னது உடனே பாட்டு வேணுமா? ஓ.கே.. சிற்றுவேசனை சொல்லுங்க.

*(செந்தில் போனில் பேசிக்கொண்டிருக்க கவுண்டமணி வெறுத்துப் போய், அருகிலிருந்த தகர டப்பாவால் செந்திலை நோக்கி எறிகிறார். செந்தில்மீது படாமல் தரையில் விழுந்து தகர டப்பா உருருளுகிறது. அது உருளும் சத்தத்தை ரசிக்கிறார் செந்தில்)*

செ: அண்ணே! நீங்க ஒரு அறிவுக் கொளுந்தண்ணே. மெட்டு இல்லாமல் எப்படி பாட்

## இசை புதிது பாட்டில் புதிது



டெழுதுறது எண்ணு பீல் பண்ணிக்கிட்டிருந்தேன். இப்ப ஓ.கே. *(போனில் பாடுகிறார்)*

டிங்கு டாங்கு ரப்பப்போ
சிங்சாங்கு ரப்பப்போ
டட்ட டாங்கு டப்பப்போ
கட கட கடாங்கு கடாங்கப்போ
படத்துக்கேற்ற பாட்டிப்போ
பாடப்போறன் கேட்டுக் கோ
செந்திலின் பாட்டு
செத்தல் மிளகாய் டேஸ்ட்டு
நெத்தலி கருவாட்டு கூட்டு
கொத்துக் கறியோடு வெட்டு
ஜிலுங்கு சலுங்கு டப்பப்போ
குலுங்கு சிலுக்கு செத்துப்போ

கவு: நிறுத்துடா! நிறுத்து! கண்ட கண்ட ஜீவராசிகளெல்லாம் உள்ளே வந்துடப்போகுது!

செ: அண்ணே! உங்களுக்கு மக்களின் ரசனை புரியல்லையண்ணே. கதாசிரியரே நம்ம பாட்டக் கேட்டு பேச்சு மூச்சில்லாமல் ஓகே பண்ணிட்டாரு. நீங்க ஏனண்ணே கவலைப் படுறீங்க?

கவு: ஜனங்களும் பேச்சு மூச்சில்லாமல் போயிடக் கூடாது பாரு; அதுதான்டா மவனே கவலைப் படுறேன்.

செ: அண்ணே! என் கரெக்டரையே நீங்க புரிஞ்சுக்கல்ல. என் திறமை என்ன, என் புலமை என்ன? உங்களுக்கு டவுட் இருந்தா என்னை பரிசீலித்துப் பாருங்கண்ணே!

கவு: நீ என்ன பொருளாடா பரிசீலித்துப் பார்க்கிறதுக்கு? மவனே! நான் கேட்கப் போற கேள்விகளுக்கு நீ டாண் டாண் எண்ணு பதில் சொல்லணும்.

செ: ஐ.ஸீ! ஓ.கே.புரசீட். *(செல்லுலார் போன் ஒலிக்கிறது)* வன் மினிட் பிளீஸ்! ஹலோ யாரு? என்னங்க உங்க தொல்லை தாங்க முடியேல்லை. ஓ.கே. என்ன சிற்றுவேசன்?... ஓ.கே.. ஹீரோயின் வெத்தலை போடுவாங்களா?.. ஹி.ஹி.ஹி.. அவங்க எதையெதை எப்பெப்ப போடுவாங்க எண்ணு எனக்கு தெரியுமண்ணே. கதைப்படி போடுவாங்களா? அதைச் சொல்லுங்க? என்ன, போடுவாங்களா? அப்படியெண்ணா ஓ.கே. *(பாடலைச் சொல்கிறார்)*

வாடி வெத்தலை பாக்கு
வாங்கித் தாரேன் நீயும் போட்டுக்கோ
உதட்டில் சிகப்பு பத்தலையின்னா
சுண்ணாம்ப சரியா சேத்துக்கோ

கவு: *(தன்னைக் கிள்ளிப் பார்க்கிறார்)* கம்பன் வந்து கேட்டிருந்தாக்கூட புல்லரிச்சுப்போயிருப்பாருங்க. என்ன ஒரு கற்பனை. என்ன ஒரு இலக்கிய வாசனை. உதட்டில் சிகப்பு பத்தலையின்னா சுண்ணாம்ப சேர்த்துக்கிற டெக்னிக்கை சர்வதேச லெவலில சொன்ன முதல் ஆள் நீங்கதாங்க.

செ: அண்ணே! என்னை ரொம்பப் புகழாதீங்க. ஏதோ என்னால முடிஞ்ச இலக்கியப் பணி. கலைச் சேவை செய்துகிட்டு வர்றேன்.

கவு: என்னங்க? கலைச்சேவையா? இப்பல்லாம் அதுக்கு என்னா அர்த்தம் எண்ணு தெரியுமா நைனா? ஏன்டா சும்மா கலைச்சேவை கொலைச்சேவை எண்ணு உயிரை வாங்குறீங்க?

செ: நீங்க என்ன சொல்ல வர்றீங்க எண்ணு எனக்குத் தெரியுமண்ணே. நடிகைகள் வெளிநாடுகளுக்கு போய் சம்பாதிக்கிறாங்க எண்ணு உங்களை மாதிரி ஆளுங்க பொறாமைப் படலாமா அண்ணே. ஓடி ஓடி உழைக்கணும், ஊருக்கெல்லாம் கொடுக்கணும் எண்ணு வாத்தியாரே பாடியிருக்காரு!

கவு: ஆடி ஆடி உழைக்கணும் எண்ணு சொல்லியிருக்காராடா? இவங்க ஊருக்கு கொடுங்கிறாங்களோ இல்லையோ; சிலபேருக்கு எதை எதையோ எல்லாம் கொடுக்கிறாங்க.

செ: அதுவும் ஒரு சேவைதானேயண்ணே. உலகத்திலேயே பெரிய சந்தோசம் மற்றவங்களை மகிழ்சிப்படுத்துறதிலை இருக்கிற சந்தோசம்தான் எண்ணு சொல்லுவாங்க.

கவு: ஆட்டுக்கிடாய் வாயா! தத்துவமாடா பேசறே?

செ: அண்ணே! மீன் குஞ்சுக்கு நீந்தச் சொல்லிக் கொடுக்கணுமாண்ணே? பாம்புக் குட்டிக்கு கொத்தச் சொல்லிக் கொடுக்கணுமாண்ணே? மான்குட்டிக்கு ஓடக் கற்றுக்கொடுக்கணுமாண்ணே. தவளைக் குஞ்சுக்கு கத்தச் சொல்லிக் கொடுக்கணுமாண்ணே?

கவு: மவனே! நீ என்ன சொல்ல வர்றே?

செ: அதைத்தாணண்ணே நானும் மறந்துட்டேன்.

கவு: ரொம்ப நல்லதாப் போச்சுடா! இப்போ நான் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்லுடா பன்னாடைத் தலையா!

செ: ரொம்ம லேட்டா கேட்குறீங்க?

கவு: நான் மட்டுமா? ஜனங்களே கேள்வி கேட்க வேண்டியவங்ககிட்டே ரொம்ப லேட்டாத் தானேடா கேள்வி கேட்கிறாங்க. எல்லாம் பழக்க தோஷம்தான்!

செ: கேட்க வேண்டிய நேரத்தில கேட்க வேண்டியதை கேட்காமல் போனா, கேட்க வேண்டியதை கேட்க வேண்டியவங்க கேட்க முடியாமலேயே போகலாமண்ணே.

கவு: ஐயோ.. ஜனங்களை குழப்பாதேயடா. ஏற்கனவே ரொம்ப குழம்பிப்போய்த்தானே இருக்காங்க. நீ வேற குழப்பணுமாடா பரதேசிநாயே!

செ: அண்ணே! உணர்ச்சிவசப்படாதீங்கண்ணே. கேள்விகளை கேட்டீங்கென்னா நான் பதில் சொல்லிப்புட்டு பாட்டெழுத போய்க்கிட்டேயிருப்பேன்.

கவு: பிரிக்க முடியாதது?

செ: புதிய படங்களில் கலந்திருக்கும் பழைய படக் கதைகள்.

கவு: பிரிந்தே இருப்பது?

செ: தமிழ்ப்படக்கதைகளும்-தரமும்!

கவு: உயர்ந்து கொண்டிருப்பது?

செ: ஒய்யார நடிகைகளின் ஆடைகள்

கவு: இரைந்தே கொண்டிருப்பது?

செ: தற்கால இசையும்-பாடல்களும்.

கவு: இழந்து கொண்டிருப்பது?

செ: நல்ல தமிழ் சொற்களை

கவு: கேட்டுக் கொண்டிருப்பது?

செ: புரியாத வார்த்தைகளை

கவு: அரும் பாட்டுக்கு?

செ: கண்ணதாசன்

கவு: அறும் பாட்டுக்கு?

செ: கண்ட கண்ட தாசர்கள்.

கவு: மவனே! நீ எங்கேயோ போகப் போறேயடா?

செ: தாங்யூ வெரி மச். எங்கே போனாலும் உங்களை மறக்கமாட்டேன் அண்ணே. அட்லீஸ் ஒரு கைத்தடியா எண்டாலும் நினைவில் வைச்சிருப்பேன் அண்ணே.

கவு: என்னது கைத்தடியாவா.. டேய்.. பரதேசி நாயே..

*(கவுண்டர் துரத்தச் செந்தில் தலைதெறிக்க ஓடுகிறார்)*

**யாவும் கற்பனை**



580230
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# தினமும் கவனி



'நாய்' என்று வாராயது திட்டுவாய். நமக்கு ஏன் கோபம் வருகிறது? நாய் என்றால் இளக்காரமா? மனிதர்களைவிட நாய்கள்தான் இப்போது மவுசு பெற்று வருகின்றன என்பதை மறக்காதீர்கள்.

நீங்கள் நாய்ப் பிரியராக இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன, இந்த தகவல்களை படியுங்கள். நமக்கும் நாய்க்கும் உள்ள பொதுவான அம்சங்கள் புரியவேண்டாமா?

நாய்களின் ஆயுட்காலம் கிட்டத்தட்ட 18 வருடங்கள். 2 வயது வரை மிக வேகமாக வளருகின்றன. ஆறு வயதிலேயே முடி உதிர்வது, முடி நரைப்பது, உடல் மெலிவது, பல் [illegible] போன்ற அறிகுறிகள் தென்படும். அது வயதாகிக் கொண்டிருப்பதன் அடையாளம்.

பெரிய ரக நாய்களான அல்சேசியன, 'கிரேட் டேன்ஸ்' போன்றவற்றிற்கு விரைவாக முதுமைத்தன்மை வந்துவிடும். இந்த விஷயத்தில் சிறிய ரக நாய்கள் கொடுத்து வைத்தவை. 10 வயதானாலும் வயதான அறிகுறியே தெரியாது. என்றும் இளமையான நாய்களைப்போல படு ஜோராக காட்சியளிக்கலாம்.

நாய்களுக்கு வயதாகிவிட்டால் சிரமம் பாராமல் வெந்நீரில் குளிக்கவைக்க வேண்டும். நீர் கோர்க்காமல் துவாலையால் ஈரம் உலரத் துடைப்பட வேண்டும். இல்லாவிட்டால் தடிமன் பிடித்துக் கொள்ளும்.

வயதான பின்னர் நாயை கட்டிப்போட பழக்க வேண்டும். புரத உணவான இறைச்சி, முட்டை, பால் போன்றவற்றை கொஞ்சுண்டு கொடுத்தால் போதும். எதற்கும் வைத்தியர் ஆலோசனை பெறுவது மிக்க நன்று. சுத்தமான கொதிக்க வைத்த நீரை குடிக்கக் கொடுக்கவேண்டும்.

நாய்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டால் பின்னர் உணவில் உப்புச் சேர்க்கக்கூடாது.

நாய்களின்மீது நீங்கள் மட்டும் பாசம் காட்டினால் போதுமா? அவை உங்கள்மீது பாசம் காட்டச் செய்ய சில யோசனைகள். பண்டிகைக்கால உணவுவகைகளை நாய்கள் பார்க்க நீங்கள் மட்டும் லபக்கு லபக்கு என்று தின்னக்கூடாது. அவற்றுக்கும் கொடுக்கவேண்டும். நல்ல இதமான படுக்கையில் நீங்கள் மட்டும் படுத்திருந்தால் போதுமா? அவற்றுக்கும் கட்டில் மெத்தை வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் உங்கள்மீது பொறாமை வராது. பிரியம் வரும். என்ன தகவல் போதுமா?!




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# மங்காத பிரமிப்பு

உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான பிரமிட் [illegible] இருக்கிறது.

கி.மு. 2580ல் ஆண்டு இது கட்டிமுடிக்கப்பட்டது. [illegible]

இதன் உயரம் 481 அடி. [illegible] இதன் நீளம் 173.5 அடி. உயரம் 66 அடி. இது கி.மு. 2750ல் உருவாக்கப்பட்டது. [illegible]





# சுழல் படிகள்

மரத்தை சுற்றிய பாம்பு போலக் காட்சியளிப்பது படிக்கட்டுக்கள். உலகிலேயே மிக உயரம் செல்லும் சுருள் படிக்கட்டுக்கள் இவைதான். கோபுரத்தின் உயரம் 207.34 அடி. சுழன்று, சுழன்றுதான் உச்சிக்குப் போய்ச் சேரலாம். ஸ்பெயின் நாட்டில் பாசிலோன நகரில் ரெறாசா என்னுமிடத்தில் இது அமைந்துள்ளது. கோபுரத்தின் உச்சியில் ஒரு அரங்கும், வெளிச்ச வீடும் இருக்கிறது. இவை கின்னஸ் சாதனை படிக்கட்டுக்கள்.



# அழகான துணிச்சல்

எழிலாகத் தோன்றும் இந்த அழகியை தொலைக்காட்சி விளம்பரங்களில் நீங்கள் கண்டிருக்கலாம். இப்போதுதான் இந்திய தொலைக்காட்சி அலைவரிசைகள் வானலை வழியாக நம் வீடுகளில் விசிட் அடிக்கின்றனவே.

விளம்பரப் படங்களில் மட்டுமல்லாமல் பாப் பாடல்களுக்கும் [illegible] ரசிகர்களின் மனதில் இடம்பிடித்துள்ளார். பெயர் மது சாப்ரே. [illegible] விளம்பரப் பட உலகில் இவருக்குத்தான் மவுசு.

1994ல் மிஸ் இந்தியாவாக தெரிவான மது சாப்ரே உலக அழகிப் போட்டியில் சில புள்ளிகளை மட்டுமே இழந்து முடிசூடும் வாய்ப்பை தவறவிட்டவர்.

உலக அழகியாக பிரபலம் பெறாவிட்டாலும் உலக அளவில் இவர் பேசப்பட்டார். சப்பாத்து விளம்பரம் ஒன்றுக்காக மிலிந்த் சோமனுடன் இவர் கொடுத்த கிட்டத்தட்ட நிர்வாண போஸ்தான் சர்ச்சைகளை கிளப்பி உலக அளவில் இவரை பிரபலமாக்கியது.

யாரை அணைத்தபடி போஸ் கொடுத்தாரோ அதே மிலிந்த் சோமனை சமீபத்தில் மணந்துகொண்டார் மது சாப்ரே. அதன் மூலம் சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் இந்த மும்பாய் அழகி.





# வால் – இலை

வாழையிலை போட்டு விருந்து படைப்பது நம் பழக்கம். ஒரு வாழை இலை முன்பாக ஒருவர்தான் அமர முடியும். ஆனால் படத்தில் உள்ள இலைகளைப் பாருங்கள். ஒரு குதிரையின் நீளத்தைவிடப் பெரிதாக உள்ளனவல்லவா. உலகிலேயே மிகப் பெரிய இலை இதுதான்.

தென் அமெரிக்காவில் உள்ள அமேசன் நதியின் கரையில் உள்ள வோட்டர் லில்லி என்னும் தாவரத்தின் இலைதான் இது. வோட்டர் லில்லி தாவரத்தின் இலைகள் வட்டமாக இருக்கின்றன. இவற்றின் நீளம் என்ன தெரியுமா? 8 அடி விட்டமானது. ஒரு இலையில் உணவு படைத்தால் 25 பேர்வரை வட்டமாக அமர்ந்திருந்து ஒரு வெட்டு வெட்டலாம். இது உலகிலேயே மிகப் பெரிய இலையாக 1989ல் கின்னஸில் பதிவு செய்யப்பட்டது.







[illegible]